
பா
சத்தியசீலன்

செ. சுந்தரம்பிள்ளை
[illegible]
4/4/69.

# பா

எந்தன் தலையெழுத்தே
இன்பத் தமிழ்ப் பாவே
எந்தக் கவிஞருக்கும்
சொந்தத் தலையெழுத்தே

நீங்கா எனது
நினைவு நிழலே நீ.

ஓங்காரம் ஆகி
உலகில் ஒலித்திடும் என்
நெஞ்சின் இசையும்
நீ, யே.

பூவும்............
சருகும் .........
புறவும்...........
வெறுமைகளும்
யாவும்
எனக்குரிமைப்
பா.

சத்திய சீலன்

## நன்றிகள்

கீழ்மாகா ணத்து விழவொன்றிற் கண்டெடுத்து
ஈழத்து வானொலியில் இந்நாள் வரையெனது
நாவின் தமிழ்கள் ஒலிக்க—
பாவின் வகைகள் பலிக்க—
காலானவரே
பாவரங்கம் ஆளும் பதி, அப் பெருங்கவிஞன்
'நாவற் குழியூர் நடராசன்.' அன்னார்க்கு
நன்றிக் கடனுடையேன் நான்.

அந்நாளில் என்பா பலவற்றின் தந்தை இவர்.
இந்நாளில் நான்சுவைக்கும் ஒற்றைப் பெருங்கவிஞன்.
இன்றியலும் ஈழத்து எழுச்சிக் கவிதைக்கு
முன்னோடி யான முனைவன்; வலுப்பாய்ந்த
மின்போன்ற வீச்சு, மெழுகு மொழியாளன்
என்போல் இளைஞர்க்கு எதுகையாய் வாய்த்துள்ள
அன்னன் 'மகாகவி' என் ஆக்கத்தின் அச்சுநிலை.

பேனாப் பிடித்த பெரிய 'முருகையன்'
தானாக வந்தொருநாட் தண்ணந் தமிழ்தந்தான்!
ஊனா முதலான ஓசை ஒடிவுகளை
நானகற்ற யாப்பு மரபும் புகட்டியவன்!
பா நாடகத்தைப் படிப்பித்த ஆசிரியன்!
மோனை எனக்கு முருகு.

எத்தனையோ நாளான ஏக்கத்தை இவ்வழகுப்
புத்தகத்தாற் போக்கடித்த 'சந்திர சேகரர்' க்கும்
பற்றூர்வத் தோடு பதித்த 'பிரான்சீசு'
ஆசிரிய ருக்கும் அதிகம் கடன் உடையேன்.

பாவுக் கினிய படம் வரைந்த வல்லாளன்,
ஓவிய நண்பர் ரமணிக்கும், அச்சகத்தில்
பாவெடுத்துக் கோத்த இளந் தோழருக்கும் நன்றிபல.

## பதிப்புரை

எமது 'அஞ்சற் புத்தக சேவை' வெளியீட்டகத்தைப் பலவகைப் பட்ட விஞ்ஞான, கணித நூல்கள் வாயிலாக அனைவரும் அறிந் திருப்பார்கள்.

பாட நூல்கள் பல ஆக்கி அளிக்கும் அடிப்படை அறிவுச் சேவையில் இதுவரை ஈடுபட்டிருந்த நாம், பா என்ற இந்த நூலோடு புதிய படி ஒன்றில் அடி எடுத்து வைக்கிறோம். பசிய இலைதளைக ளுடன் செழித்தோங்கி வளர்ந்துள்ள எமது வெளியீட்டகம், இப் பா நூல் வெளியீட்டுடன் மலர்விட ஆரம்பித்திருக்கிறது.

'அஞ்சற் புத்தக சேவை' அமையம், ஆக்கக் கலைகளின்பால் தனது பணியினைத் தொடர்ந்து நல்கும்.

வானொலி, பத்திரிகைகள், பாவரங்குகள் மூலம் ஈழத்து இலக்கி யப் பிரியர்களைப் பெரிதும் கவர்ந்துள்ள கவிஞர் சத்தியசீலனின் படைப் புக்களிற் சில எமது வெளியீடாக அமைவதில் பெருமையும், மகிழ்ச் சியும் அடைகிறோம்.

பதிப்பகத்தார்.

---


நூல்: பா

ஆக்கியோன்: பா. சத்தியசீலன்
அல்லைப்பிட்டி, யாழ்ப்பாணம்.

வெளியீடு: த. பிரான்சிஸ்
9/2, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.



உரிமை: ஆசிரியருக்கு



அச்சீடு: வஸ்தியன் அச்சகம்

15 மார்கழி 1968

# படையல்

யேசு பெருமானுர் அன்று இவ்வுலகத்திற் பேசியவை பேசிப் பெரிய அருள்புரியும் நல்லர்யன் மாரில் ஒரு ஞான குருவாகிக் கல்விப் பெருங்கோயில் வாயிலிலே உய்த்த திருத்தந்தை 'லூயிஸ்யோ சேப்' அடிக ளாரின் அடிப்படையல் இந்தத் தமிழ்.

அன்பா வருக!

என்பா சுவைக்க
இசைந்தே வந்தனை;
அன்பா! வருக!
வணக்கம்! வருக!

ஒன்றே—
இரண்டே—
மூன்றே—
நான்கே—
என்றே இதழ்கள்
நான்கு பிரித்துப்
பா நூல் ஒன்றை
உனக் கெனப் படைத்தேன்.

சுவைக்கும் கைகளை
நீட்டிய தமிழீர்!
அவைக்குக் கனக்க
இத்தமிழ் வைத்தேன்!

மேற் பால், கீழ்ப்பால்,
மீப்பால், என்றும்,
அப்பால், இப்பால்
உப்பால் என்றும்
எப்பால் எந்தன்
இதயம் நிகழ்ந்ததோ
ஆங்குப் பிடித்த
நினைவொளிப் படங்களை

ஏங்கும் இதயத்து
இசை ஒலிப் பதிவினை
ஈங்கிந் நூலில்
எடுத்து, இதழ்ப் படுத்தினேன்.

நின்றும் இருந்தும்
'நேற்று'ப் பெற்றதை
இன்றிந் நூலில்
எடுத்து இதழ்ப்படுத்தினேன்.

முதுமை முதலன
குறுந் தொகைப் பாக்களாம்.
இராவணன் போன்றவை
நெடுந் தொகைப் பாக்களாம்.

வள்ளுவம் முதல்வன
வானொலித் தமிழ்களாம்.
விழிதிறப் பாதிய
இதழ்களில் மலர்ந்தவை.

தேவை யாவையோ
அவ்வவ் வாய்களிற்
பாவிய தமிழ்கள்
பலவிடைச் சிலவே

இந் நூல்; சின்னூல்
எனினும் எனது
முன்னூல் என்ற
முறையில் வந்தனை.

நாலிதழ்ப் பிரிவில்
நூலமைப் பியலும்.

ஒன்றே: காதல்
உணர்வொளிக் கற்றைகள்.
இரண்டே: பொங்கல்,
ஒளிநாள் நினைவுகள்.


மூன்றே: பிறத்தல்,
மூத்தல் முதலன.

நான்காம் இதழில்
நவிலப் படுவது:
ஆன்றோர் செய்யுளை
அதர்ப்பட நாடிக்
கற்ற நினைவும்
கவிதைப் புனைவும்
பற்றிப் புணர்ந்த
'பழம், புது'த் தமிழ்கள்.

இந்தத் தமிழ்சில
இனிமை செய்யலாம்.
நன்றிகள் நண்பா!
நவிலுக எனக்கே!

# 1

# பா இதழ்



பருவமெனும்
பாதையிலே
பாசவிழி
ஒட்டத்தில்
வருகின்ற
மோதலில் இவ்
வையகமே
வாழுதடா!

# ஆதிக்காதல்!

குன்றில் நின்றும் அருவி பொழிந்தது!
கொத்தணைத்த கனிகள் குலுங்கின!
அன்றலர்ந்த மலர்கள் அசைந்தன!
ஆங்குபாடி அருவி வழிந்தது!
தென்றல் அங்கு தழுவி நடந்தது!
தீங்குயில் இசை மூங்கில் பொழிந்தது!
அன்றில் ஒன்று சிறகை அடித்தது!
ஆசையோடு தன் பேடை யணைத்தது!

அச்ச மென்பது அறிந்திலன் — ஆடவன்!
ஆண்மை தாங்கி நடக்கும் அவன் எதிர்
கச்சிறந்து கதித்த முலையினள்!
கண்டவர் உளம் கள்வெறி கொண்டது!
'இச்' செனப் பசும் இன்னொலி கேட்டது!
இதழ்களூடே இரண்டு கலந்தது!
பச்சை மேனி இரண்டு, அவண் நான்குகைப்
பாச மொன்றிடைப் பட்டுக் கிடந்தது!

கொம்மை கொண்ட முலைகள் இரண்டினல்
கூனிடாப் பொரும் ஆண்மை சரித்தவள்
அம்மை ஆயினள்! அன்னவள் பெண்மையை
ஆண்மை செய்த அவன் உடன் அப்பனுய்
நம்மை ஈன்று புறந்தரு போதிலும்
நாணம் - நல்லநெறி - ஒழுங்கு என்பவை
தம்மை மானிடன் கண்டதன் பின்னரே
தமிழெனு ஒரு காதல் பிறந்தது!

# இவளுக்கென்ன ?

கல்லூரிப் பெண்களெனைக் கிண்டல் செய்யக்
கண்டதும் அக் கன்னங்கள் சிவப்பதேனோ?
வல்லூறைப் போலவரைப் பார்ப்ப தேனோ?
வனிதையர்கள் எனை நகைத்தால் இவளுக்கென்ன?

'ஓயாது படிப்பதனுல் உடம்பு தேயும்
ஓட்டாதாம் உடலுடனே உண்டி' என்று
தாயாகாத் தையலவள் ஏனோ சொன்னுள்?
தமிழாலே நான் செத்தால் இவளுக்கென்ன?

பெயர்சொல்லி நண்பரெனை அழைக்கும் காலை
பெண்கூட்டத் துள்ளிருந்தங்கு ஒருத்தி மட்டும்
தயிர்வண்ணப் பற்களிலே நகைப்பைக் காட்டித்
தலைகுனிவாள்! பெயர் சொன்னுல் இவளுக்கென்ன?

மேடையிலே நான்பேச எழுந்தால் மற்ற
மெல்லியலார் வெறிதிருக்க ஒருத்தி மட்டும்
கோடையிலே கார்கண்ட உழவன் போலே
குதிக்கின்ருள்! என்புகழால் இவளுக்கென்ன?

காதலெனும் பொருள்வழி நான் பேசும்காலை
கன்னியர்கள் பார்க்கின்ருர்! கையார்க்கின்ருர்!
கூதலென உடலொதுக்கி ஒருத்தி நாணிக்
குனிகின்ருள்! காதலெனில் இவளுக்கென்ன?

## விழி விபத்து!

வழியில் விபத்தென்றால் வாரும் உயிர்க்குலத்தை;
விழியில் விபத்துயிரை விளையாட விட்டிடுமே!

வேகமுடன் வண்டி
வெறிகொண்டு மோதுமெனில்
போகும் உடல்கள்
புதைக்கும் குழிகளுக்கு!
மோக முடன் விழிகள்
மோதுமெனிற் பூவுலகில்
ஆகிறது நாளை
அழகாம் உயிரொன்று! ஆம்,
வானுலகை நாடுகிறார்
வந்த விழிவிபத்தால்!
தேன்நிலவைத் தேடுகிறார்
நேர்ந்த விழிவிபத்தால்!

ஓடும் விழிகள்
ஒருமையுடன் மோதுமெனிற்
பாடும் கவியிற்
பசுமை செறியாதோ?
நாட்டுக்குச் செய்திதர
நாடும் நிருபரைப் போற்
பாட்டுக்குச் செய்திதரப்
பாவாணர் கூடாரோ?
'அண்ணல்' விழியும்
'அவள்' விழியும் மோதியதை
எண்ணிக் குறித்தவனே
இங்கு புகழ்க் கம்பன்

பருவமெனும் பாதையிலே பாசவிழி ஓட்டத்தில்
வருகின்ற மோதலில் இவ் வையகமே வாழுதடா!

# மன்னனாய் நான் நடைபோடவேண்டும்

பண்ணைக் குழைத்தொரு வண்ணக் கவிதையைப்
பாடிக்கொண் டாங்குநீ ஆட வேண்டும் - கவிப்
பெண்ணைப் படைத்தவன் நண்ணியுன் முன்வரப்
பேச்சற்று நீவிழுந் தோடவேண்டும்.

பின்னல் பறந்திடப் போகுதென் றேயிந்தப்
பித்தன தைத்தாங்கி நிற்கவேண்டும் - அந்தக்
கன்னல் மொழிச் சொல்லிற் 'கைவிடுங்கள்' என்று
காதலி நீ நாணி நிற்கவேண்டும்.

'அன்னம் இடையும் நடையுடையாய்' என
ஆயிரம் நாவால்நான் கூவவேண்டும் - உந்தன்
கன்னம் சிவப்புறக் கால்தரை கீறிடக்
கண்ணைப் புதைத்து நீ நிற்கவேண்டும்.

'பொய்கை நடுவுள்ள பூக்கொணராய்' எனப்
புன்னகைப் பேச்சில் நீ சொல்லவேண்டும் - நீரில்
'ஒய்' எனப் பாய்ந்தொரு பூக்கொணர்ந்தோடி வந்து
உந்தன் குழலில் நான் சூட்ட வேண்டும்.

பூப்பறிக் கின்ற உன் பொற்கரத்தை இந்தப்
போக்கிரி போய்ப்பற்றி நிற்கவேண்டும் - உந்தன்
காப்புடைந் தென்கையிற் காயம் விளைத்திடக்
காதலி நீகட்டுப் போடவேண்டும்.

வெள்ளி நிலாவினை எள்ளுஞ் சிரிப்புடன்
வெண்மணல் மேடையில் நீயிருப்பாய் - எழில்
அள்ளிப் பருகிடத் துள்ளி வருமிவன்
அங்குந்தன் பக்கத்த மர்ந்திடுவான்.

பக்கத் திருந்துநீ பாடவேண்டும்! அந்தப்
பண்ணிலே நான்பித்தன் ஆகவேண்டும் - நாங்கள்
ஒக்க இருப்ப நிகழ்ந்ததெ லாம், கவி
ஓவிய மாகநான் தீட்டவேண்டும்.

ஏடு சுமந்தஇப் பாடலைத் தோழர்கள்
'ஏற்றமடா' எனப் போற்றவேண்டும் - இதை
மாடி இருந்து, நீ பார்த்து மகிழ்ந்திட
மன்னனாய் நான்நடை போட வேண்டும்.

## கட்டாய பாடம்!

நீங்கா நினைவுடைய
    நெஞ்சச் சுவர்மீதில்
ஓங்கி அறைந்துவிட்டேன்
    உன்னுடைய எண்ணத்தை!
ஆழ உணர் வென்றஅந்த
    ஆணியிலே உன்னுடைய
வாழ்வு முகத்தைப்
    படமாகத் தொங்கவிட்டேன்!
தொங்கவிட்ட அப்படத்தைத்
    தூக்கி எறிவதெனில்
இங்கெனது கைகள்
    இரண்டும் முடமாக!

ஆழஉணர் வென்ற அந்த
    ஆணியினை நான்முயன்றும்
மீளப் பிடுங்கல்
    முடியா தெடி கண்ணே!

பாட்டு வடிவே
    பலகால் முயன்றதனை
ஆட்டி அசைத்தால்
    அமைதி உருவுடைய
நெஞ்சச் சுவர் நொருங்கும்!
    நீ சொன்ன வாருக
வஞ்சி ஒருத்தி
    வடிவைப் பதிப்பதற்கு அச்
சேத மடைந்த
    சுவரில் இடமேது?
காதற் களத்திற்
    கணக்குக்கு வேலை என்ன?

எண்கள் பெருக
இழிவும் பெருகிடுமே!
கண்ணே இதனைக்
கருதிப்பார் கொஞ்சம்!
உருவும் விழியும்
உணர்வும் உடைய
பருவ வகுப்பிற்
படிக்கும் அனைவருக்கும்
கட்டாய பாடம் அந்தக்
காதல்! அதில்வெற்றி
கிட்டாது போனால்
கிடைத்த இந்தப் பெரிய
வாழ்வென்ற தேர்வு
முழுதும் பெருந்தோல்வி!
கல்வியிலே வெற்றி
கலையிற் பெருவெற்றி
செல்வத்தில் வெற்றி
எடுத்தாலும் காதலெனும்
கட்டாய பாடம்
கனியாதேல் நல்வெற்றி
கிட்டாதேல் வாழ்வில்
முழுமை கிடையாது!
பட்டிதழில் அப்பெரிய
பாடத்தின் வெற்றியினைச்
சட்டென்று தீட்டச்
சரியென்று சொல்லடி.

# காதலர் சாகார்

இன்பமார் திசையை இதுவெனக் காட்டும்
இதயமாம் திசையறி கருவி
உன்பெரும் நினைவாம் திசையையே நாளும்
உணர்த்தி அத் திசை வழி நிலையும்!
துன்ப வேளையிலும் பிற செயல்களிலும்
தொடர்ந்து நான் திரும்பிடும் பொழுதும்
என்சுவை இதயம் உன் திசை திரும்பி
உவக்கும்! ஆம் நீ வட முனைவு!

நேற்றுமுன் படர்க்கை! நேற்று முன் னிலைநீ!
நேரிழாய் இன்று நீ தன்மை!
வேற்றுமை அகன்றோம்! விழிவழி நுழைந்து
விரைந்து நீ என்னுளே கரைந்தாய்!
கூற்றுவன் அணுகின் இரண்டுடல் வீழும்!
கொண்டிட இருப்பதோர் உயிரே.
ஆற்றலே இல்லான் இரண்டுயிர் காண!
ஆதலால் காதலர் சாகார்!

## காதலென்பது....?!

காதலென்பது கடவுள் போல் விரிந்ததாம்!-ஒருசார்
ஆதல் என்பதை அழிவென மறுக்கிற மறு சார்
சாதலுக் கொரு விரைவழி என்னுவார் புலம்பி!
பூதலத்திது 'புதிர்'-'சரி' 'பிழை'-'ஒரு புழுகு'!


கள்ளெனச் சிலர் களிக்கிறார் இஃதவர் பேறு!
முள்ளனெச் சிலர் துடிக்கிறார் இஃதவர் போகூழ்!
உள்ளமென்பது கரிந்திட உயிரையும் கருக்கி
மெள்ளவே அவர் சரித்திரம் முடிவதும் அறிவாம்.

காவியங்களில் வருபவர் 'கழுவிய' மனிதர்!
பாவியற்றிய பழையவர் தமதுளப்படியே
ஓவியங்களை வரைந்தனர்! புழுகினர் இதனை!
பூவியற்கையோ இதுவிதம் புனிதமாய் இல்லை!

மக்களின் தொகை குறைந்தமைந்திட்டது பழநாள்!
பக்குவங்களும் பதிந்தவை - ஆகையாற் பின்னுட்
சிக்கலானவை இழைந்தெழும் சிரமமொன்றின்றறியார்
ஒக்கு நெஞ்சினர் - ஒருவனும் ஒருத்தியும் புணர்ந்தார்!

அன்ன தன்மையால் 'அண்ணலை அவள்' விழி பருக
சொன்ன காதலும் எழுந்துடன் நடந்தது மணமும்!
பின்னை வாழ்விலே விரிவுகள் பிரிவுகள் பெருக
இன்னும் அப்படிக் கனவுதல் பொருத்தமாய் இல்லை.

காதலென்பதிங் கினிக்கலாம்! கசக்கலாம்! இரண்டு
பேதமுற்ற இம் முனைகளால் அரிபடு மனத்தர்
வாதை இப்படி இருவகை - அதுவழி இரண்டும்
ஓதமுற்படல் தகுவழி - முறை எனத் துணிந்தேன்.




# கல்லாகிவிட்டாய்

இல்லாத இன்பம் இருக்கும் இடம் போன்றாய்!
பொல்லாத தாகம் அது போக்கும் புனல் போன்றாய்!
தொல்லையாய் நல்ல துணையாய் தொடர்ந்து உடனே
கல்லானாய்! அந்தக் கதையை முடித்துவைத்தாய்.

புல்லையுமே பாடும் புலமை உளத்தோடு
மெல்லென்னும் நெஞ்சின் புதிய நினைவுடனே
அல்லவா உன்னை அடைந்தேன்நான்! ஆனாலும்
கல்லானாய் அந்தக் கதையை முடித்து வைத்தாய்!

உறவு வகைகள் பலவாய் எனையழைத்தும்
பெறவே அரிய பொருள்கள் பல அணைத்தும்
அறவே ஒதுக்கி அணைத்தேன்; எனினும் இவன்
துறவே அடையும் படியாய் ஒதுங்கிவிட்டாய்!

பாட்டுத் தமிழைப் பலவாக ஓடவிட்டும்
நீட்டுத் தமிழில் நினைவைப் படம்பிடித்தும்
காட்டி 'எதிர்நாள் 'இணைவை'க் கனவு கண்டேன்
மாட்டேன் எனல்போல் மனதைக் கல் லாக்கிவிட்டாய்!

தாயின் - உயிரின் - தமிழின் ஒருநசையை
ஆய விருப்பால் அணையும் அவள்நிறைவை
மாய விடுத்து மதுவே உனைஅடைந்தேன்;
போயே அகன்றாய்! மனதைக்கல் லாக்கிவிட்டாய்!

ஆடாத உன்னியல்பில் ஆட்டத்தைப் பார்த்திருந்தேன்!
பாடாத உன்மொழியில் பாடல் சுவைத்திருந்தேன்!
வாடாத ஓர் பெரிய வாழ்வைக் கனவுகண்டேன்!
கூடாதே என்னுதல்போல் நீயும் கல் லாகிவிட்டாய்!

நேரத்தை எல்லாம் நினக்கென்று எழுதி வைத்தேன்!
வீரத்தைத் தூர விசுக்கி உனே அணைத்தேன்!
பாரத்தை நீக்கும் படியாய் உனேயடைந்தேன்!
ஈரத்தை நீக்கி இதயம் கல் லாகிவிட்டாய்!

என்னைப் புதைப்பதற்கு நான்குழியை வெட்டுவதா?
அன்ன குழியில் நினைவுக்கல் நாட்டுவதா?
என்னைப் பிரிய 'எழுதும் இதை' என்ருய்
உன்னை இவன் பார்த்தேன்; ஓமோம் கல் லாகிவிட்டாய்!

''ஈதோஓர் ஏடு; இங் கெழுதும்'' எனச் சொன்ஞய்!
மாதே அதில் என் மறைவை எழுதுவதா?
ஏதோ பலபேர் எழுதும் நினைவேட்டில்
மீதி இடத்தில் இவனும் எழுதுவதா?
'பாதி வழியில் பயணம் முடித்து விட்டுப்
போதி' எனல்போல் மொழியை இதுபோலக்
காது கடுக்கக் கனிவாய் நீ ஓதுவதா?
தீது பொழுதும் அறியாத காதலுடன்
தூது தமிழாய்த் தொடர்ந்தேன் உனதுறவை!
போது முழுதும் அதிலே நனைந்திருந்தேன்!
ஈதோ பிரிவை இனிதாய் உரைத்துவிட்டாய்!

கல்லான உன்னைக் கனிசெய்ய வல்லமையே
இல்லா ஒருவன் எனவே பிரிகின்றேன்!
சொல்லான தெல்லாம் சுவையற்றுப் போனதினுல்
கல்லான உன்னை ஒரு 'கற்பி' எனப் பாடுதற்கு
வல்லானுய் இல்லா வறியேன் பிரிகின்றேன்!
தொல்லை கொடுத்த துணையே பிரிகின்றேன்!
இல்லை எனக்குஇங்கு ஒளி!

காவியத்து இராமனைப்போற் பேறு நிறைந்தவர்கள்
ஓவியமே உந்தன் உருவுக்கு உணர்வளித்தால்
நீ இயங்கும் போதில் இயன்ருல், நினைவிருந்தால்
உன்நினை வேட் டின்கண் ஒருபக்க மூலையிலே
என்னைப் புதைத்திங்கு எழுதுவையோ இம்மொழிகள்!

''அன்பு மலரை அடையும் பெரும்செலவில்
துன்பங்கள் கோடி தொடரத் தொடர்ந்தோடி
மின்மலர் ஒன்று கவர, அணுகி அதே
கல்லாகக் கண்டு, அதிலே காணுமற் போனவனின்
கல், இதிலே காணுகிற கல்''.

# இறுதிப்பா!

நெஞ்சின் விளக்கே? நில்! சிறுபொழுது!
வஞ்சியர் பலபேர் கண்வழிக் கழிந்தார்!
கொஞ்சம் எட்டி மிதித்தவர் சிலரே!
நெஞ்சம்மட்டும் நடந்தவள் நீயே!

ஆடாத ஆட்டத்தால் - அத்தகைய உன் இயல்பால்
பாடாத பாட்டதனுல் அப்படியோர் பண்புருவால்
கூடாமற் கூடிவிட்டாய்! எந்தன் தமிழ் நெஞ்சை
வீடாகக் கொண்டுவிட்டாய் அங்கு விளக்கேற்றிவிட்டாய்.

பற்றுள்ளம் தன்னுடைய பாசப் பெருங்கணக்கால்
எற்றுறவும் அற்ற இருநெஞ்சைக் கூட்ட, அது
போட்ட கணக்குப் பிழையென்று இப் பொய்யுலகம்
கூட்டல் கழித்துப் பிரிக்க விதிக்கிறது!
இவ்வுலகின் மீதே இருகாலும் ஊன்றுவதால்
அவ்வுலகின் ஆணையினை எப்படி நாம் மீறுவது?

என் இதய ராணி சீ
ஏன் முகத்தை மூடுகிறுய்!
உன் இதயத் துன்பம் ஒழுகும் விழி இணையை
நான் பார்க்க வேண்டாமே என்னும் அருள் உணர்வா?
ஏன் பார்க்கப் போவேன் இனி? அது பார் உன்தமரை!

சின்னப்பெண் உன்னுல் எதிர்க்க முடியாது
என்னுலும் இன்னும் சிரிக்க முடியாது.

போகின்றேன் - என்ன பொருள்? உன் உறவுலகில்
சாகின்றேன் - என்னிதயம் சாத்துகிறேன்! ஆங்கினி மேல்
நீயில்லை! ஆயின் நினைவுச் சிலையுண்டு! ஆம்
அச்சிலையே என்னை இளி ஆளும்! இனி வேறோர்
பச்சை நினைவு படராது, இச் சை வழியைப்
பூட்டி அடைத்து, உன் புதிய சிலை வடிவைக்
காட்டிப் புதிய கவிதை புனைந்திடுவேன்!

ஓலமிடும் நெஞ்சுடனே ஊருகிற மாதே! போ!
காலமெலாம் நீ எனது காதலியே! உன் உடலை
வேறொருவன் வாழ்க்கைக்கு விட்டாலும் உன் உணர்வை
மாறுது .எனது மனத்துச் சிலைசெய்து
துன்பத் தமிழாற் துடைப்பேன் - இதனாலே
இன்னொருத்திக்கு என்னுடலை ஈயேன்! நீ பெண் பேதை

தன்நிகர் இல்லாத் தலைவன் உடன் அதுபார்
உன்அன்னை மற்றும் உறவினர்கள் என்னிடத்தே
உன்னைப் பிரிக்க உறவுமுறை வாளோடு
பார்த்திருப்பார்! உன்வரவைப் பாத்திருப்பார். சீக்கிரம்போ!

எந்தன் கதைமுடிகிறது இங்கே! அதனாலே
வந்தவழி போவேன்! முன் வாவுகிற கற்பனைக்கே
தந்தேன் வடிவம்! இனிமேல் என் வாழ்வுக்கே
அந்த வடிவை அழுகையுடன் நான் அமைப்பேன்.

சொந்தம் அழைக்கும் சுகமாகப் போய் வருக!
இந்தப் பாவே இறுதிப் பா.

# நீ அணைந்து விட்டாய்

நான் அணைய வந்தேன்! அதன்முன் என்வாழ் வொளியே
நீயணைந்து விட்டாய்! நெடுந்தனிமை தந்துவிட்டாய்!

ஒற்றை ஒளி என்றேநான் உன்பால் நடந்துவந்தேன்!
'மற்றவற்கும் நீ ஓர் மகிழ்ச்சி ஒளி' யென்ற
சொற்களால் நெஞ்சச் சுவைஒளியே ஊரார்கள்
ஊதி அணைத்தார் உனை!

பாதி வழியில் பயணம் நிறைகிறது
மீதி வழியோ இருள்!
சாதி சமயச் சடங்குத் தடைகளினை
மோதி, உனதாம் இனிமைச் சுடரொளியைக்
காதல் மனத்தின் ஒளியாய்க் கனவுகண்டேன்!
பாதி ஒளியைப் பரப்பி அணைந்துவிட்டாய்.

வாழ்வுப் பொருள்கள் சிறிது! உன் உறவதுவே
நீளப் பொருள்கள்' எனநான் துணிவுகொண்டு
காளைப் பருவக் கனவை மெய் ஆக்குமொரு
நாளைப் பருகி நயக்க நடந்துவந்தேன்!
ஏழைக் கனவாய் முடிய அணைந்துவிட்டாய்!

காவியத்து நாயகனோ! அல்ல; வெறும்இளைஞன்!
பாவியற்றிப் பாவியற்றிப் பாவான தன்மையினுல்
பூவியற்கை என்ற புதிய சதிஇயலில்
ஏதும் புலமை இலாதான்! அதனுலே
காதலுக்கே காதலினுல் காதலுடன் நான்தொடர்ந்தேன்
உன்னை! எனதன் பொளியே! உடன்அணைந்தாய்!
என்னை மறைக்கும் இருள்!

தேவன்நான் அல்லன்! திரையும் மனமுடைய
பாவி மனிதன்! அதனுல் எனக்குரித்தோர்
சின்னப் பொறுமை சிறிய குணவகைகள்!
இன்னவையால் என்தன் இதயத்தே உன் ஒளியைப்
பின்னொருகால் ஏற்றும் பெருமை கிடைக்கவில்லை!
நீயணைந்தாய் ஏனும் நினைவும் அணைவதில்லை!
பாவிலே உண்டப் பதிவு.

# புதிய பிறப்பு

புதியதோர் பிறவி... மதங்களின் அலுவல்!
பூதலத் துறவுகள் முறிவில்
புதியதோர் பிறவி — பல முறைப் பிறப்பு'ப்
புலவனின் கலைமனத் தலுவல்.

—கவிஞன்

முற்பிற வியிலே என்னைநீ அணைந்தாய்!
முந்திவந் தென்அகம் நுழைந்தாய்!
கற்பனைக் கனவை நனவெனச் செய்தாய்!
கவிதைகள் பலப்பல சமைத்தாய்!
அற்புத மான காதல் மந் திரத்தால்
ஆட்டி னாய்! ஆடினேன்! ஒருநாள்
சொற்புக முடியா நிலையிலே என்னைச்
சுட்டனை! துடிதுடித் திறந்தேன்!

கள் இயல் பறியா விழியிலே கோடிக்
கவிதைகள் வழங்கினாய் படித்தேன்!
துள்ளி நீ தெறிக்கும் திசையெலாம் தொடர்ந்து
தும்பியாய் மலர் உனை நுகர்ந்தேன்!
உள்ளியல் பனைத்தும் எனக்குமுன் விரித்தாய்!
உருக்கமாய்ப் படித்துனை அணைக்க
முள்ளியல் பணைந்த செயலினால் நெஞ்ச
முகையிலே குத்தி நீ சிதைத்தாய்!

வையகத் தணைந்த வனப்பெலாம் உன்முன்
வறியதென் றிகழ்ந்தனன்; அறிவாய்!
பொய்யகத் தறியா உறவினர் தொடர்பைப்
பொய்என இகழ்ந்ததும் தெரிவாய்!
நெய் அகஞ் சொரிந்தாய் ஆதலால் நானோர்
நீள்சுடர் வடிவிலே வளர்ந்தேன்!
ஐயகோ! அந்தச் சுடரினை ஒருநாள்
அரக்கியாய் மாறி நீ அணைத்தாய்!

ஒன்றையே நினைந்து அவ்வொன்றையே சுவைத்து அவ்
ஒன்றையே தமிழிலே பிதற்றி
ஒன்றையே துணிந்து அவ்வொன்றிலே கலந்தும்
ஒன்றிலொன் றென்றிரண் டறுந்து
என்றுமே இந்த இணைப்பிலே திளைத்து ஓர்
எளியனுய், வெறியனுய்க் கிடந்தேன்
கொன்றனை இந்த எளியனை! அந்தக்
கொலையினுல் மறுபிறப் பெடுத்தேன்!

அன்னைபோல் என்னைப் பேணினை! ஆசான்
ஆகவும் அமைந்தனை! என்னைச்
சின்னஉன் இதயம் நிறையுமாறு ஏந்திச்
செல்லமென் தமிழ்களைத் தூவி
என் எதிர் கால நலத்தையே பிதற்றி
எனக்கென உலகினை எதிர்த்து
மின்னுரு வடிவில் என்னிலே கலந்தும்
பின்னையோ என்னை நீ கொன்ருய்!

அருமுறை இழைந்த காதலை அமைத்தேன்
ஆதலால் பாதகீ! எனை நீ
ஒருமுறை கொன்ற போதிலும் நானே
ஒன்பது முறைஅளவு இறந்தேன்!
தருமொரு துயரைத் தாங்குதற் காகத்
தான் மறுபிறவிகள் எடுத்தும்
மருவிய பழைய பிறவியின் நினைவு
மலர்வதால் இறந்திறந் திருந்தேன்!

தப்புவதரிய உறவிலே பொறிந்து
தமிழையும் அதுவழி நடத்தி
இப்புவியினிலே நிறைநிலை நீயே
என்றுநான் கிறங்கிய படியால்
எப்பிற வியினை நான் எடுத் தாலும்
எங்குமுன் பொங்கிய நினைவு
அப்பிற விகளின் அமைதியை அழித்து அங்கு
அவலமே செய்வதால் அழிந்தேன்!

நீயெனைக் கொன்ற துண்மையே யெனினும்
நினதுமுன் காதலும் மெய்யே
தாயெனக் காகி, வளர்த்ததும் எந்தன்
தலைமையிற் தருக்கிய முறையும்

சேயெனக் காகி மழலைகள் மொழிந்து என்
சிறுதமிழ் பருகிய முறையும்
வாய்மையே! அதனால் கொலைமகள் இடத்தும்
வால்குழைக் கின்றதென் மனநாய்!

ஓலமிட் டிறக்கும் பொழுதிலும் தனது
ஓங்கிய உறவினை உணர்த்த
வால்குழைத்திறக்கும் நாய் என உன்பின்
வருகிற என்சிறு நெஞ்சம்
காலமொன்றிருக்கும் வரை-ஒரு கருத்தைக்
காட்டியே துடித்திடும் ! இதனை
நாலு நாள் கழிய ஒருதின மேனும்
நம்பினால் எனக்கொரு நிறைவு.

நாய் மனம் தனது நன்றிவால் குழைக்க
நான் தனி இருத்தலும் இயலா.
போய் மனம் படியும் இடத்திலே முழுதாய்
பொருந்தலும் இன்றெனக் கியையா.
வாய்மையும் பொய்யும் கலந்த உன்உறவில்
வளத்துடன் வறுமையும் அடைந்தேன்.
ஆய்நிலை இரண்டில் வாய்மையே நினைந்து
அடுத்ததை மறக்கிறேன் முயன்று!

இன்று நான் எடுத்த பிறவியில் நீ முன்
இனிய நற் துணைவியாய் இல்லை!
சென்ற நாட் செயலின் நன்றுகள் நெஞ்சில்
செதுக்கிய நினைவுகள் எல்லாம்
ஒன்று சேர்ந்தமைந்த உறவிலே நீயென்
உடன் பிறப்பாகிறாய்! அதிலே
நின்று நான் உனக்கோர் துணையெனத் தொடர்வேன்.
நிம்மதி எனக்குநீ அருளாய்!

தலைமகன் ஆகத் தகுதியிற் தவிர்ந்த
தமியனைப் புதியஇப் பிறப்பில்
சிலநிலைகளிலே உதவிடும் சிறிய
சிறப்புகட் குரியவ னாக்கின்
கலைமனஞ் சுமந்த கடன்வகை கழியும்!
கவிதைகள் - கரிந்தவை தளிர்க்கும்!
கொலைமனத் தொழிந்தே அருளுக முன்னைக்
கொடுமையைத் தவிர்ந்திது புரிக!

உண்மைஇவ் உலகின் நிலைகளை இகழ்ந்தே
ஊகமா கிய ஒரு உலகில்
பெண்மையைப் படைத்து நினைத்தினிக்கின்ற
பேயரின் அழிவையார் தடுப்பார்!
மண்ணிலே உள்ள நாள்வரை எவர்க்கும்
மற்றொரு பற்று இயல்பு அதனால்
விண்ணிலே இருந்து விழுந்தவன் உந்தன்
விழிகளிற் புதுமொழி விழைந்தேன்.

உன் துயர்வழியில் நான் துணைவருவேன்!
உயரமும் தூரமும் தொடர்வேன்!
மென் தமிழ் விழைந்தால் மொழிந்துனை நிறைப்பேன்!
மெல்லிய துயர்களைக் களைவேன்!
உன் பெரும் இனிய வாழ்வு கண் டுவக்கும்
உடன் பிறப் பாகவே அமைவேன்!
வன் தமிழ் தவிர்ந்தே அருளினால் சிறுநாள்
வாழலாம் என்பதென் ஆசை!



# 2

# பா இதழ்

" தை பிறந்தால்
நெஞ்சிற்
தமிழ் பிறக்கும் !

*

" தீபங்கள் நான்கு
திசையும் இருள்தின்ன
பாவங்கள் தீய்ந்துவிடப்
பாவலர்கள் பன்னூறு
பாவங்கள் செய்து புதுப்
பாடல் பயிர் செய்ய
..................... "

# அழகவிழ் தை

புதுப்பெயல் தலையி நின்ற
பொய்கைதோ றோடை தோறும்
புதுப்புனல் பரந்து பாயப்
புதுவதாய் உதயஞ் செய்தாய்
துதிப்புறு தைநீ! வையம்
துண்ணெனக் குளிரில் நீங்கிக்
குதிப்புற, மயில்களென்னக்
குமரியர் குடங் கைக் கொண்டார்.

முழவெனப் புதுநீர் ஆர்ப்பும்
முகையவிழ் சுரும்பின் ஆர்ப்பும்
அழகுயர் மனையிற் கோலம்
அமைக்குநர் வளையின் ஆர்ப்பும்
இளையவர் மழலை ஆர்ப்பும்
இடியென வெடியின் ஆர்ப்பும்
விளையுமா றெழுந்த தை உன்
விழவிது பொங்கல் நன்நாள்.

வஞ்சியர் புதுநீ ராடி
வருவழிக் குழையும் அன்பர்
நெஞ்சிடைக் காதல் வித்தி
நினைவொடு புனைவும் செய்து
மஞ்சள் பால் அரிசி கொண்டு
மனையெலாம் புதிது செய்து
பஞ்சி மென் கையாலஃது
படைத்திடும் பொங்கல் -உன்நாள்!

# பொழுது எழுந்து ஒளிப் பொங்கல்

கீழை வானிற் பொழுதின் எழுச்சியாற்
கெட்டொழிந்த திருட்குலம்! ஆனதால்
வாழை ஒன்று குருத்தை விரித்ததும்
வயலிலே கதிர் சாய்ந்து கிடந்ததும்
பாளை நன்கு பதிந்துகிடந்திடப்
பனைகள் எங்கும் குலைத்துக் கிடந்ததும்
ஏழை இல்லம் எனும் ஒன்று இருப்பதும்
எல்லவர்க்கும் தெரிய முடிந்தது!


பொய் பொய் என்று கிடந்த புலங்களிற்
புழுதிமாறிப் புதுப்புனல் ஓடிடப்
பெய் பெய் என்று முகில்கள் பொழிந்ததால்
பெரியதான பயிர்கள் எழுந்ததும்
தெய் தெய் என்று குதிக்கும் மனத்துடன்
தேடி ஓடிக் கதிரை அறுத்தவர்
'தை தை' என்ற தமிழ் ஒலி கேட்டதும்
தாமுவந்து அது - சோறு கொடுத்ததும்

அலையின் மீதொரு தோணி செலுத்திய
ஆழியாளர் குலத்துடனே பனைத்
தலையின் மீதொரு பாளையிற் பாகமாய்த்
தமிழெடுக்கும் தொழிலவர் மட்டுமோ
கலையின் மீதொரு காதலினால் பல
காவியம், கதை தீட்டும் கலைஞரும்
விலையிலாத உழவர் கொடுக்கும் அவ்
விருந்தருந்த விரைதல் தெரிந்தது.

சீதை போன்ற பலப்பல சீதையர்
சிற்றடித்தளிர் பாவிட ஊர்களிற்
பாதை போன்ற ஒரு வித பாதையிற்
பாடல் போன்ற ஒரு நடை செய்ததால்
போதை போன்ற உணர்வு பிறந்திடும்
புதுமனத்திள வாலரின் நெஞ்சினில்
வாதை போன்றொரு வாதை பிறந்திட
வந்து பொங்கற் பொழுது புலர்ந்ததோ!

வாழ்வு போன்றொரு வாழ்வு நடத்திடும்
வறுமையாளரும் 'வேர்வை சொரிகிற
தோள்களாலே குறையை மறைக்கலாம்!
தொழில்களாலே உலகினை ஆளலாம்!
தாழ்வெனும் பெரும் பள்ளம் நிறைக்கலாம்!
தமிழ்கள் செய்பவர் வாழ்த்தும் பறிக்கலாம்!
கேளும்' என்று மொழிந்திடுமாறு போல்
கிழக்கில் அந்தப் பொழுதும் எழுந்ததோ?

எங்கும் இன்பம் எழுந்து தழைக்கவும்
ஏழை செல்வர் இணக்கம் பிறக்கவும்
மங்களங்கள் எழுந்து குழையவும்
மஞ்சள் இஞ்சி வகைகள் மணக்கவும்
தங்கமான அரிசி உலையினைத்
தழல் எழுந்து தடவியதாலே பால்
பொங்கி நன்கு பொலிந்திடுமாறும், அப்
பொழுது எழுந்து ஒளிப்பொங்கல் விளைத்ததோ?



# இயற்கைப் பொங்கல்

அன்னை இயற்கை அடுப்பிட்டாள்! ஆம் கிழக்கில்
கன்னங் கரிய மலைக்கல்! கனல்மூட்ட
ஊதுகிறாள் காற்று! அங்கு உயரப் பறத்தனவே
காக்கைக் கரித்தூள் கருமேகச் சாம்பர் இவை!
போக்கை மறைத்துப் புது நெருப்போ ஆம் அடுப்பில்
பொன்னால் அமைத்த புதுப்பானை வைத்துவிட்டாள்!
முன்னால் அரிசி முதற்பாலை விட்டாளோ?
வெப்பம் வளர்ந்து விரியும்! புதுப்பானை
ஒப்பச் சிவந்து கனல உலை கொதித்துப்
பொங்கி வழியும் புதிய ஒளிப் பொங்கலினை
எங்கும் உயிர்கள் இனிக்க அருந்தினவாம்.

காடுகளில் செந்நெற் கழனிகளில் செந்தமிழர்
வீடுகளில் மேலுயர்ந்த விண்ணிலென அன்னையவள்
அள்ளிப் படைத்தாள் அதை! அப் புதிதுண்ணத்
துள்ளி எழுமே உயிர்கள்! துயர் போக்கப்
பொங்கலினை உண்டு புதிய நினைவுடனே
எங்கும் இயக்கம் இனித்த மன நினைவு.

ஏரிகளில் அன்னை இலையிட்டாள்! அங்கெல்லாம்
வாரிப் புதிதை வழங்கினாள் - சோர்வகன்று
மொட்டாய்த் துயின்ற முளரிப்பெண் வாயவிழ்ந்து
தொட்டாள் புதிய சுவை!

ஓடைகளில் எங்கும் ஒளிப்பால் அவள் வார்க்கப்
பாடி நகரும் பனிநீத்தம் - கூடிக்
குதிக்கும் கயல்கள்! கொடியாய் அலைகள்!
கதிக்கும்மே இன்பக் களி.

வானிலொளி பொங்கலிட வையகத்தாய்க்கு ஒய்யெனவே
மேனியெலாம் பொங்கும் விளைவு! மணல்களெலாம்
பச்சைப் பசும்புற் பரவல்! கழனியெலாம்
கச்சை வரிந்து கலப்பைப் படை உழவர்.

தோளாற்றல்; மேல் வியர்வை; தோன்றும் அயர்வொழிக்க
வாளாற்றும் கண்ணூர் வரவு! தலைகளிலே
பானை சுமந்தார்! பழசு உள்ளே! நெஞ்சகத்தில்
ஆன சுமையோ புதிது! அன்பர்க்கு அன்னமிட்டார்
நேற்றயப் பொங்கலிதே நெஞ்சுக்கினித்ததெனில்
சோற்றிலோ உண்டு சுவை.

கார்மேகம் பொங்கிக் கழனிகளிற் போய்ப்படைக்க
நீர் மேவிப் பாயும் நெடிய மடைகளெலாம்.
நீரில் நிமிரும் பயிர்கள்; அதைப் பருகி
ஊரில் நிமிரும் உவகை; கதிர் குலுங்க
வாழைத் தொடையார் வளை குலுக்கித் தாம் நகைக்கக்
காளைகளைக் காணும் கதிர்.

கதிர்போய் உடல் மறைத்த கன்னி முகம் ஓர்
புதிர்தான் கதிரினிடைப் பூ!
வாழைமீன் பாய்ந்து வயலின் கதிரளக்கும்
நாளே அறுவடை செய் நாள்.

அறுப்பார், குவிப்பார், அதனிடையே அன்பை
நிறுப்பத் தவறுவரோ நெஞ்சால் - பொறுப்பாரே
நெல்லு மணியால் நிமிர் குன்று இடைப்புகுந்து
தொல்லை தரவும் அவர்.

போரிடையும் காதல்! புதுமணியை இற்கொணர
நேரும் பொழுதும் நெடுங்காதல் - ஊரில்
வரப்பில் வழியில் வருவிழவில் என்ன
நிரப்புவரே காதல் நிகழ்வு.

பட்டு விரித்த பனிநீர்ச் சுனைநாடிச்
சிட்டாய்ப் பறந்தார் சிறகின்றிக் - கட்டுடலார்!
மூழ்கினார் மொட்டாய்; முழுமலராய் மேல்வந்தார்!
நாள்மலரை வெல்லும் நயனம்!
நீந்தக் கயல்கள்! நிலையில் நெடுங்கொடிகள்!
ஏந்து முலையாம் புணையேறித் - தாந்தாமே
கூவென் றொலிக்கக் குயில்கள் பறந்தனவே
பாவென்ற இன்பம் அதுபார்!
நோக்கிற் கயல்கள் இரிய நொசியுமிடை
தூக்கித் திரிந்த துணை முலையார் - நீக்கினரே
பூக்கள் விரியும் புதுப்புனலை அந்நொடியே
ஆக்கினார் அன்பர்க் கது!

எங்கும் நிகழ்ந்த இயற்கைப் புதுப்பொங்கல்
இங்குற்றால் என்னும் எழில்பரந்த முன்றில்களில்
புத்தம் புதிய அரிசி புதுப்பாலில்
முத்தம் போல் வேக முழுமகிழ்வில் கன்னியரும்
காளையரும் சின்னக் கரும்பைக் கடித்தந்த
நாளை உவக்கின்ற நல்ல சிறுவர்களும்

புத்தாடை பூண்டார்; புதுமனதில் இன்பவெடிச்
சத்தம் எழுந்ததிரச் சாயாத் தமிழ்ப்பாப்போல்
பொங்கிற்றே பானைப் புதுப்பால்! அதுகண்டும்
மங்களங்கள் கேட்டும் மகிழ்ந்து புதிதுண்டும்
எங்கும் இனிப்புச்சுவை.



# தைத் திங்கள் வந்தாள்

தைத் திங்கள் வந்தாள்! தமிழ்த் திங்கள் எம்மவர்க்குக்
கைத்த துணராள்! கதிராற்கழனி யெல்லாம்
மொய்த்திருக்கும்! அஃதும் முதிர்ந்திருக்கும்! கன்னலிற் தேன்
வைத்திருக்கும்! வாழை வளர்ந்திருக்கும்! ஆமடிகள்
நெய்த்திருக்கும்! காளையர்தம் நெஞ்செங்கும் வஞ்சியர் கண்
தைத்திருக்கும்! இல்லில் தமிழ் இருக்கும்! வாயிலெலாம்
கோலம் இருக்கும்! குழைவிருக்கும்! செம்புகளிற்
பாலும் இருக்கும்! பழமிருக்கும்! பக்கமெலாம்
முற்றாத வாழை இலையிலிருக்கும்! அங்கெல்லாம்
வற்றாத வாழ்வு! வளமிருக்கும்! முன்றிலெலாம்
பானை இருக்கும்! ஒரு பாலிருக்கும்! தேனிருக்கும்!
எங்குமே பொங்கல் இனிப்பென்று பாப் பொங்க
அங்கு சமைந்த புதிது படைத் தெவரும்
வேளாண்மை செய்வார் என ஆண்டு காத்திருந்து
நாள் இன்றைக் கென்ற நசையோடு வந்துவிட்டாள்
தையாள்! அவட்குத் தமிழக் குலமகளீர்
செய்யுங்கள் மிக்க சிறப்பு.

வானொலியிற் பொங்கல்

# ஞாயிறு போற்றுதும்

பால்பொங்க மகிழ்பொங்கும் பழந்தமிழர் திருநாளில்
கோல ஒளிப் பொங்கலிடும் கொற்றவனைப் போற்றுதும்யாம்.
புத்தரிசிப் பொங்கல் தரும் புதிதுண்டு மகிழ்ந்திடுவீர்
புத்தொளியைப் பொங்கலிடப் போந்தவனைப் பாடுதும்யாம்.
சாய்வறியா உழைப்பாளர் சாறயரும் ஒருநாளில்
ஒய்வறியா உழைப்பாளன் - ஒண்சுடரைப் போற்றுதும்யாம்
கவியாத்துக் கள்ளருத்தும் கவியரங்கப் பெரும்புலவோர்
புவிகாக்கும் பருதியினைப் புகழுவதும் வியப்பாமோ?

எடீதலைவி! இதுவென்ன கண்ணுறக்கம்!
வாடீ எழுந்து! வளரும் கதிரொளிபார்!
மாடி மனையார் மணல்விட் டயலோடு
கூடிப் பருதியினைக் கும்பிடும் இப்பொன்னாளில்,

சேவலெனும் ஏவலனைச் செய்தி சொல முன்ஏவி
ஆவல் அவிழ அகிலத்தார் தாம் மகிழக்
காவல் புரிய வரும் அக் கதிரரசை,

கௌவும் இருள் கிழித்துக் காசினியாட் போயழைத்துச்
செவ்வொளியாம் பட்டினையச் செல்வி மிசைப் போர்த்து
முத்துப் பதித்ததெனும் நீரின் துளிகளிலே
புத்தொளியால் நூறு புதுமை அழகிழைத்து
சங்கையிடை அங்குகுடம் தங்கநடை போடுமிளம்
மங்கையரின் அங்கமெலாம் தங்க மயமாகச்
செங்கதிரென் கையாற் சித்திரித்த பின் உயர்ந்தே
அங்கிருந்து கொண்டவ் வழகு நுகர்வானை,

காக்கை கரைய உடன் காவும் எழுந்திரையச்
சேக்கை இழிந்து சிறகடித்துப் புட்கள் செல
தூக்கம் கலைந்த மனிதர் தொழில் நினைய
ஊக்கம் பிறந்த உழவர் வயலடையப்
புத்தியக்கம் இத்தகைய பொலிய நலமுயரத்
தொத்திஅவ் வானிற் றொழுமா றெழுவானை

பூக்களிலே வண்டு புதிதுண்டு பண்ணெடுக்க
மாக்கிளையில், தாழ்ந்தமரக்கிளையிற் புட்களெலாம்
கீக்கீ என் றேதோ கிளர்வு மொழிபுகலக்
கூக்கூ என் றங்கே குயில்கள் நகையாடப்
பாட்டுத் தமிழ் மலரப் பண்ணோடை இழையக்
கேட்டுக் சிறுகிறுக்கக் கீழ்வான் எழுவானை

நீலக் கடல் வேலி நீக்கலிடை மெல்லவந்து
மாலைப் பிரிவால் மனம் நொந்த தாமரையாள்
உள்ளம் மகிழ ஒளிமென் கரத்தாலே
அள்ளி அணைக்கின்ற ஆதி முதற் காதலனை

வானின்று தூவல், வயலெல்லாஞ் செங்கதிர்கள்.
வேனில் வரவு! விரியும் மலர்கள்!
இலைகள் உதிர்ந்துவிட எங்கும் தளிர்கள்!
குலையிற் கனிகள், ஒரு குன்றத் தருவி
இனைய அழகுகளை இங்குதினம் ஆக்கி
நினையு மனதில் நெடிதாய் உயர்ந்தவனை

நல்லேர் உழவர் நயந்து புறம்நிற்ப
சொல்லேர் உழவர் சுவையிற் தமிழ்தோய்த்துப்
பாடிப் பரவிப் படரகலும் பொங்கலிலே
வாடியோ நின்றாய் வறிது!

கீழ்வான் அரசுவரக் கீழ்ப்பால் வெளுத்ததென
நாள் இன்று பொங்கலென நல்லமளி நின்றெழுந்தார்
காளையர்கள் தோளுயர்ந்த கட்டழகர் நல்லுழவர்!
நாளைக்கும் இன்றும் நமக்குணவு நன்கு அருத்தி
வேளைதோ றீங்கு விருந்து புறந்தருவோர்!
சென்றார் கழனி; சிரிக்கும் கதிர்கண்டு
நின்றார்! அயலில் நெடுவான் தொடநிமிர்ந்த

நெற்போரைக் கண்டேதம் நெஞ்சம் நிறைந்தவர்கள்
கற்போன்ற தோளிற் கதிர்கள் தலைசாய
வாளைமீன் பாயும் வரப்புவழி இல்விரையும்
நாளிலோ இந்த நலிவு.

பண்ணெறிந்து பாயும் பனிமென் புனலதுபார்!
கண்ணெறிந்த அன்பர்தமைக் கண்டு கரை சேர்ந்தார்
அன்னத்தின் தூவி அனைய துயில்போர்த்து
வன்னத் துகிலணிந்து வாவுமயில் போலானார்!

பட்டுடுத்தார் கொல்லிமலைப் பாவையாய்ப் போயசையத்
திட்டெடுத்த மார்பிற் திரையாய்த் துயில் சரிய
ஈரம் புலரா இருங்கூந்தற் சிக்கித் தம்
வீரம் புலர்ந்ததென வெட்கும் விடலையர், தம்
கைப்பட்ட செந்நெற் கதிரை நகுவனபோல்
மெய்ப்பட்ட வேர்வையினை மெல்லத் துடைத்து, இங்ஙன்
காதற் கழனிக் கதிர்கண் டுளமகிழும்
போதன்றோ பொங்கற் பொழுது!

வாடி, ஒருபால் வருந்த இருந்தவரும்
கோடி உடுத்துக் குளிர்வு மனத்திருத்த
எங்கும் விழவு! இனித்த மனநினைவு!
பொங்கும் மகிழ்வு! புதுமனைசேர் முன்றில்களில்
வெள்ளை மணல் விரிப்பார் விண்ணென்ற பந்தரின்கீழ்
வள்ளைக் கொடிகளென வஞ்சியர்தம் கையசைய
நெய்யுண்ட கூந்தல் நிலத்திற் புரண்டசைவார்
கையில் வளையல் கலகலென்ற பூசலிடக்
கோலம் விரியும் ஒருபால்! கதிரால் இஞ்
ஞாலம் விளக்குகிற ஞாயிற்றைப் போற்றுதற்குப்
பானை புதிது! அதனைப் பற்றிநிற்கும் கற்புதிது!
ஆன புனலதுவோ ஆற்றிலே பாய்புதிது!
அரிசி புதிதவ் ஆடற் கிலக்கணங்கள்
சொரிகின்ற பால்புதிது, சொட்டுகிற தேன்புதிது!
மஞ்சள் புதிதே மணக்கும் அகில் புதிது!
நெஞ்சின் அலைபுதிது நிற்கும் நிலைபுதிது
இஞ்சி புதிதிங் கினிமை இயங்குதல்போல்

குழலை வென்றவர் குதிசுழன்றது!
குமுகு மென்றவண் அகில் மணந்தது!
தழல் எழுந்தொரு தரளம் வெந்தது!
தமிழர் பொங்கலின் தகையுயர்ந்தது!

வெடி எழுந்தவ் விடிமுழங்கும் வீறு கொண்ட பொங்கலில்
மடி எழுந்த தமிழமங்கை மானமோடு வாழ்வளோ?
விடிவு செய்த கதிரவற்கு விண்ணிடைப் பெரும் உலா!
அடி எழுந்து படையல் செய்தவ் வாதவற் பரவுவோம்.

காநன் மலரை போர்க்கக்
கழனிப் பயிர்நின்றுர்க்கப்
பாநல் அழகும் பயிர்நல் விளைவும்
பருகக் கதிரே வருக வருக.

# "என்ன கருத்திலடி கண் புதைக்கிருய்..."--பாரதி

எங்கும் ஒளிவரிசை! எங்குமே தீபநிரை!
எங்கும் இருளின் இழப்பு
எங்கும் இருளின் இறப்பிற் பிறக்கின்ற
மங்களங்கள்! இன்று மகிழ்நாள்! ஒளிவகையின்
பொங்கலில்இவ் வையம் புதையும் ஒளித்திருநாள்!
துன்பத்துக்கு இன்று துயர்.
இன்பப் பகலும் இருண்டு இங்கே வாடுகிற
ஏழைகளும் இன்பம் இருக்கென்று நம்புகிற
நாளின்று தீபத்தின் நாள்!

தீபத் திருநாள்! திடும் திடும் என்று அவ்வெடிகள்
கோபத்தை அல்ல குழைவை எதிர்ஒலிக்க
ஆபத்தாம் இன்றைக்கு அழல்!
கண்புதைத்த காதலியே கண்ணீர் விடவேண்டாம்
பெண்அழுதல் இல்லை - பெருநாள்! ஒளித்திருநாள்!

கிள்ளிச் சுழித்துக் கிளர்வு மொழிவழங்கி
அள்ளிஒளி தந்த அழகு விழியிரண்டும்
கள்ளியே நீ புதைத்த காரணத்தால் உன்னுடைய
பொன்னங்க மேனி புதுநிலவு போன்றமுகம்
கன்னங்கள் நல்ல கனிஇதழ்கள் என்றிருக்கும்
உன்னங்கம் எல்லாம் உடனே இருண்டதடி

மின்னல்போல் வானில் மிதக்கும் வெடிவகைஉன்
பின்னல்போல் உள்ள பெரிய இருள்வகையைத்
தின்னல்போல் உள்ள திருநாளில்! தம்முடைய
இன்னல்போல உள்ள இடர்கள் நெடுவானில்
மின்னல்போல் மாயும் ஒளிநாளில்! வேல்விழாக்
கன்னல்போல் தித்திக்கும் காதலியே பொன்ஞெளிரும்
மேனி கறுத்தாய் மிகை!

சொன்னதையே சொல்லல் சுவைக்கத் தகுந்ததுவா
உன்னழகே என்நெஞ்சின் உள்ளிடத்தைத் தொட்டாலும்
ஒற்றைத் துறையில் நானூறு பாவுரைத்த
கற்றைப் பெரிய கவிஞர் களுக்கு இன்றும்
பிற்பாட்டுப் பாடி, பெரிய ஒலியோடு
'பாலாடை மேனியடி. பாடல் தெரியுதடி
மேலாடை மேலாட..' என்று தமிழ்செய்ய
ஏலாதென் காதலியே; என்னால் இயலாது.

போலிகளைப் பாடல், போன வழிபோதல்
பாடியதே பாடல்நம் பாரதிபின் நீதியில்லை.
ஏடி அணுயுகத்தின் என்தலைவி ஆனவளே!
வாடி அதுபார்நீ வானத்தில் விண்வெடிகள்!
பாடி அதுபோல் பறக்கும் கருத்துகளை
விண்ணிற் செலுத்திடுவோம். வீட்டிருந்தே கேட்டிடுவார்
மண்ணிலே உள்ளார் மகிழ்ந்து.

விண்ணுடி மாந்தன் விரையும் திருநாளில்
மண்மூடி மாய்ந்த மரபுகளை நாடுவதா?
கண்மூடி, யான கவிதை மரபுக்குக்
கண்மூடி நின்றஉன்றன் காதலனின் மேற்பிணங்கிக்
கண்மூடும் பெண்ணே! கருத்துக்குக் கண்திறவாய்!
'பெண்'என் றழைத்தேன், பெருமை இதுபோதும்
கண்ணேஉன் கண்ணைத் திற.

'கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல' - என்ற வள்ளுவனார்
கோட்பாட்டில், பாவையர்மேல் 'கோவை' களாய்க் கட்டுகிற
'ஆட்பாட்டு', க்கு இல்லை இடம்.

காதலுக்குக் கண்ணில்லை என்ற பழமொழியை
ஓதியதற் காகத்தான் உன்கண் புதைத்தாயோ?
காதலியே! உன்னுடைய காதலினை நானறிவேன்.
ஆதலால் அன்பேநீ அச்செயலைக் கைவிட்டுப்
பாதிவிழி யாலேனும் பார்.

'கண்ணனைப் போலே கலைகள் எடுத்தொளித்துப்
பண்ணறிந்த ராவணன்போல் உன்னைச் சிறைப்பிடித்து
காவியத்து ராமனைப்போற் காதலிக்காய்ப் போராடி
பாவிற் தருவேன் புதினம்' என்றிவ்வாறு

கொஞ்சி நகைத்துக் குழைந்தளித்த என்னுடைய
அஞ்சல்களை எண்ணி அழகுக்கண் மூடினையோ?

காரணம் சொல்லவேண்டாம் கண்களைத் திறந்துபாரேன்
பூரண கும்பம் இட்டுப் புதுப்புது ஆடை கட்டி
தோரண வகைகள் தூக்கித், தூக்கிய மகிழ்விற் பொங்கும்
பூரணப் பொலிவை மாந்தர் புன்னகை ஒளியிற்பாரேன்.

ஆதுபார் என்னைப் போன்ற ஆடவன்! அவன் பக்கத்தோர்
மாதுபார் சீதைபோலே! மணமகள் நாணம் காட்டி
காதுபார்க் காதசொல்லில் கண்வழிக் கதைகள் பேசிப்
போதுபார்த் தணையும் அந்தப் பொன்ஒளி வாழ்வைப் பாரேன்!

ஒருநாளைத் திருநாள் ஆக்கி
ஒள்ளிய ஒளியை அள்ளித்
தருமாறிங் கொளிரு கின்ற
தனித்தனிப் பொருள்கட் கெல்லாம்
திருநாளாம் என்று சொன்னர்
தீபத்தின் வரிசை அந்தப்
பெருநாளை ஒளியாற் சொல்லும்
பொலிவினை நிமிர்ந்து பாரேன்!

கன்னியர் அன்பர் காணக்
கண்களில் வெடிகள் சுட்டுப்
புன்னகை வாணம் ஏவல்
பொய்யென்று நினைத்தாய்? பார்அச்
சின்னவர் வெடிகள் சுட்டுச்
சீறுவாணத்தில் ஒன்றை
உன்திசை நோக்கி விட்டார்
உடன் பார்த்து விலகிக் கொள்ளாய்.

அப்பாடா! விழிகளுக்கு
விடுதலை அருளி விட்டாய்!
எப்போதும் பொய்யை எண்ணி
எழுதிடும் பழக்கத்தாலே
இப்போதும் ஒருபொய் சொன்னேன்!
என்றாலும் வென்று விட்டேன்.
தப்பென்ன கண்டாய் பெண்ணே
தமிழைஏன் புதைத்தாய் மீண்டும்!

ஓவங்கள் போலே ஒளிரும் மடவார்கைத்
தீவங்கள் நாலு திசையும் இருள்தின்னப்
பாவங்கள் நீங்கப் பாவலர்கள் பன்னூறு
பாவங்கள் செய்துபுதுப் பாட்டளிக்கும் ஓர்நாளில்
கோவங்கள் செய்தாய்! கொடுமை மிகச்செய்தாய்.
கோவங்கள் என்னும் குளிர்ந்த கொடுமையினுல்
பாவெங்கும் பொங்கிப் பலுக விதிக்கின்ற
பெண்கள் மரபைப் பெருமைப் படுத்துதற்கோ
கண்கள் புதைத்தாய்! கதையும் புதைத்துவிட்டாய்.

முன்னை மரபை, முறிக்கத் தகுந்தவையைப்
பின்னும்அடை காத்தல் பெருமைக் குரியதுவா?
ஆகையினுல் அன்றெம் அகப்பொருளிற் சஞ்சரித்த
தோகையினுர் போலத் துடித்துக் கடிக்கவரும்
கண்கள் புதைக்கஒரு காரணமும் உள்ளதுவோ?

செல்லக் கிளியேஓர் சின்னத் தமிழ்பேசு.
மெல்லமெல்லப் பேசு! ஆம், அதுவும் தமிழ் தானே!
கன்னியர்கள் தம்முடைய காதலர்வாய்ச் சொட்டுகிற
சின்னக் கதையைப் பெருங்கதைகள் ஆக்கியே
மென்மைக் கலைகள் மலரும்! சரிசொல்லு!
என்ன கருத்தில் இருவிழியும் நீ புதைத்தாய்?

அச்சமின்றிச் சொல்லு! இங்கு அதனுல் பலர்கவிதை
பச்சை படர்ந்து தழையும் — சரிசொல்லு!
வாணங்கள் வானில் வடிவாய்ச் சிரிக்கின்ற
பேணத் தகைய பெரிய திருநாளில்
நாணமென்ற பாணத்தால் நம்முறவைக் குத்தாது
காணத் தகைய கனிவாய் இதழ்பிரித்து
கன்னல் மொழியிற் கதை!
மின்னல் விழிக்கு விடுதலையை நீயளித்து
புன்னகையில் நல்ல புதிய விளக்கேற்றி
இன்முகத்தைக் காட்டி இதயத்தை மீட்டிவிடு.
பின்னும் தயக்கம் பிசகு!

என்ன கருத்திலென்று இப்போ தெரிகிறது
சொன்னதெல்லாம் கேட்டுச் சொல்லா மொழிகளையும்
பொல்லாத பாட்டுகளிற் போட்டவற்றைக் காட்டுகிற
வல்ல கவிவாணர் வந்துள்ளார்! உன்மொழியை
எல்லாரும் கேட்பதற்கெம் ஈழத்து வானெலியிற்

சொல்வார்! சிரிப்பார் சுவைஞர்! என்னுங் கருத்தாற்
கண்புதைத்த காதலியே! கவிஞர் மிகநல்லார்.
பெண்புதைத்த நாணத்தைப் பேணுவாற் கிண்டியவர்
நெஞ்சத் துடிப்பை நெடிய தமிழ் ஆக்கித்தம்
பஞ்சத்தைப் போக்கிடினும் பண்பும் 'அறிந்தவர்கள்'!



போது கழிந்ததடி
போதை கழிந்திடுமா?
மாதே! உனது
மயக்கமொழி வானொலியின்
காதுகளில் வீழா
வகையிற் கதைத்திடுவோம்
இப்பால் வா! ஒன்றும்
இழுக்காதிங்கு எம்மொலியை
தப்பில்லைச் சொல்லு தமிழ்!

கண்புதைத்த வானொலியின் கவிதைகேட்கக்
காதுகளைப் புதைக்காது காத்துள்ளோரே!
பண்புதைத்த கவிஞர்களே! தலைவர் ஏறே!
பாப்புனைந்த சத்தியசீ லன்வணக்கம்!

# 3

# பா இதழ்

*

அன்னை படைத்தாள்.
அவன் கிடைத்தான்.
இங்கந்தச்
சின்னவனும் மூத்தான்.
புதிய முகவரியைப்
பின்னவனும் பெற்ருன்.
பிறகு.....................?

## உயிர்ப் பொங்கல்

இருளில் உரைத்த செய்தி
    ஒளியில் ஒலித்த தென்பேன்!
தளிரில் உடலங் கொண்டே
    தவழும் தரையில் என்பேன்!

மறைவில் நடந்த கதை
    வெளியில் நடக்கும் என்பேன்
அறையின் கதவம் நீக்க
    அதுவும் புரிந்த தென்பேன்!

இருவர் விழைவுக்கு இங்கே
    இலையே வடிவம் என்பீர்
உருவம் அதுபார் என்பேன்
    ‘‘ஓமோம் குழந்தை’’ என்பீர்!

புருவம் இரண்டி ரண்டாய்ப்
    பொருதி மறலும் அந்தப்
பருவச் சமரில் சிந்தும்
    படையற் சிதறல் என்பேன்.

உரையே சிறிதும் இல்லா
ஒருநாட் கதையை முற்றும்
வரைய, உயிர்க்கும் ஏட்டின்
வடிவம் இதுதான் என்பேன்.

பத்தென்ற திங்கள் முன்னர்ப்
பட்டுப் பருத்த முத்தம்
பொத்தென் றொருநாள் இந்தப்
புவியில் விழுந்ததென்பேன்!

பொல்லா வலியின் உள்ளே
புதையும் சுகத்தோ டந்த
இல்லாள் இறக்கி வைக்கும்
இன்பச்சுமை ஈதென்பேன்!

மங்கை கொழுநன் ஈய
மகிழ்ந்தே உடலில் வாங்கிப்
பொங்கிப் படைக்கும் உயிர்ப்
புதிதே குழந்தை என்பேன்!

# பற்று



அன்னை திருவயிற்றில்
அன்றொருநாள் 'அப்பொழுதில்'
என்னை விதைத்தே
இருதிங்கள் வாழ்ந்திருந்து
பின்னைத் தனது
பிரிய உயிர்விட்டோன்
தன்னைப் புதைத்த
தனிக்குழியைக் கண்ணிரண்டும்
சுற்றிவர நெஞ்சகத்தில்
சோகம் சுரக்கிறதே!
சற்று விழிகள்
கசியத் தலைப்படலும்
ஏனோ? அவனை
எனதுவிழி கண்டதில்லை.
ஆனா, ஆவன்னா
அவன் சொல்லித் தந்ததில்லை.
பேனாப் பிடிக்கும் கை
பிஞ்சாய் இருக்கையிலே
பிள்ளை எனைத் தூக்கிப்
பெரிய மடியிருத்தி
வெள்ளை மணலை
விரித்து விரல் பிடித்துச்

''சின்ன எழுத்தாளன்''
ஆக்கிச் சிரிக்கவில்லை!
என்ன நிறமாமோ
எவ்வுருவோ நானறியேன்.
ஆனாலும் என்றன்
விழிகள் குளமாகல்
ஏனோ? என் அப்பன்
இருக்க எடுத்தபடம்
தானுமிங்கே இல்லை!
தகப்பன் எனஒருவன்
உள்ளான் எனவே
உணரும் நினைவுக்கே
மெல்ல விழி நீரில்
மிதக்க முனைகிறது!
சற்று விழிகள்
கசக்கித் திறக்கின்றேன்
'பற்று; தகப்பன்மேற்
பற்று' என்று கூறுகிறீர்!
பெற்றவளின் மீது
பெரும்பற்றுக் கொள்ளுகிறேன்.
மற்றவளோ என்னை
மகிழ்ந்து வளர்க்கின்றாள்!
பற்றென்றால் ஓர் பொருளைப்
பற்றியெழும் ஒன்றல்லோ?
எற்றைப் போய்ப் பற்றியங்கே
என்பற் றெழுந்திடலாம்?
கண்டதில்லைக் கேட்டதில்லைக்
கையாலே தொட்டதில்லை.
''உண்டகுழி'' கண்டவுடன்
ஊமைவிழி தேம்புவதேன்

பற்றை படர்ந்த
　　பழைய குழியொன்றைப்
பற்ருகக் கொண்டந்தப்
　　பற்று நிகழ்கிறதோ!
வாழ்வானைச் சூழ்ந்து
　　வரவேண்டும் அப்பற்றுப்
பாழிடத்தைச் சுற்றிப்
　　படர்ந்து கிடக்கிறதே!
முள்ளு முளைத்த
　　குழியைப் புதிதாக்கி
வெள்ளைக்கல் கொண்டு
　　விளக்கிநான் பார்க்கையிலே
நெஞ்சகத்தில், தந்தைக்கு
　　நேயப் பணிவிடைகள்
பஞ்சியின்றிச் செய்யுமொரு
　　பான்மை தெரிகிறதே!
கற்றவைகள் காட்டாவே
　　காரணத்தை; ஆனாலும்
பற்றை வளர்த்த
　　பழங்குழியை வாழ்த்துகிறேன்!

## ஐயா நான் ஏழை மகன்

ஐயா நான் ஏழை மகன்! அங்காலும் இங்காலும்
கைபோலத் தொங்குவது கையன் றவையிரண்டு
பொய்! அவற்ருல் என்ன புரிந்திடலாம் நாமிங்கே?
மாலே மதியம் மழை வெய்யிற் பாராது
ஓலமிடும் நெஞ்சுடனே ஓயாது நாம்நடத்தும்
கால்கள் இரண்டும் முடமையா! அன்னவையை
எண்ணப்படியா எடுத்து மிதிக்கின்ருேம்?
கண்ணிற் தெரிவதெல்லாம் பாதைகளாய்க் காட்சிதரக்
கட்டைகளேப்போல் இரண்டு காலும் அசைகிறது.
தொட்ட உணர்வில்லே தூங்கும் அவையிரண்டும்!
பாதைகளே இல்லாப் பயித்தியங்கள் நாமுமது
பாதையிலே நாளும் படுத்திருந்தங் கும்முடைய
ஒவ்வோர் அடிமீதும் ஊர்ந்து வருகின்ருேம்
கவ்வுகின்ற நாய்கள் கழுத்திற் பாயும் வரைக்கும்.
அம்மை மா ரோடே அயர்ந்து விளேயாடித்
தம்மை மறந்து தமிழ் செய்யும் காலத்தில்
பாதையடைத் தெங்கள் பயணம் தடுக்கின்றீர்!
காதை அடைக்கும் பசியோடு காத்திருப்போர்
வாதை அறிந்தால் வறியோர்க்களித்திருப்பீர்.
துண்டாக நீரறியா ஒன்றைத் தவறென்று
கண்டிக்க நாங்கள் கருதல் பிழை தான்போலும்!
வீதியிலே ஓர் கந்தற் சீலேகளேப் போய் விரித்துப்
பாதி வயிற் ருேடு படுத்திருக்கும் ஏழைகளேக்
குண்டு பதித்த குதியால் மிதிக்காது
வண்டிகளே ஓட்டி வழியைப் பறிக்காதும்
ஈர உணர்வை இரு பெரிய சில்லாக்கித்
தேரைச் செலுத்தத் திருவுள்ளம் கொள்வீரேல்
எண்ணியது போலே இருவிழிக ளும் மூடிப்
பூதலத்திற் காணுப் புதையல்களே எம்முடைய
காதற் கனவுகளிற் கண்டு களித்திடலாம்.

# முதுமை!

காலநதி நீந்திக் களைப்படைந்த மேனி!
கண்டதையே கண்டு களையிழந்த கண்கள்!
'வாலம்' எனும் கூத்து வளர்ந்தவொரு மேடை!
வந்தவொரு மூப்போ இன்றயரும் கட்டில்.

பாசிபிடித் திட்ட பழையதொரு சிற்பம்;
பாழடைந்த கோட்டை; பலவயது என்கின்ற
தூசிபிடித் திளமைத் தோற்றமெலாம் சென்ற
தூயஓ வியமாய்த் தோன்றல்எது? முதுமை!

அன்றுபுதுச் செய்தி; இன்று பழங் காதை!
அழகுமலர்த் தோட்டம்; அவையுலர்ந்த பாலை!
மன்றல்மண வாளன்; மரணமதன் தோழன்!
மலர்தலிலா மொட்டு; மலர்ந்துலர்ந்த சருகு!

விடலைஎனப் பட்ட வீரநிலை அன்று.
விழியின்ஒளி பட்டு வீழ்ந்தநிலை இன்று!
சுடலைஎனப் பட்ட சூரடுப்பிற் போடச்
சுள்ளி என வற்றிச் சூம்புநிலை இன்று!

பலர்உவந்து கண்டு படியெடுத்த பாட்டு;
பலசுவைகள் கொண்டு பரிமளித்த பாட்டு;
பலர், ஒருத்திக்கு அன்று பரிசளித்த பாட்டு;
பழையதெனப் பட்டுப் படுத்தநிலை — மூப்பு!

பலர்மதிக்கும் பாட்டுப் பழையதொரு ஏட்டில்!
பாழடையின் ஏடு, பாய்ந்துவிடும் பாட்டு!
பலர் அழுவர் ஆமோ? பார்வியக்கும் ஆமோ?
பறையறையும், ஏடு பழுதடைந்த தென்று!

இளமை மலை ஊறி இழிந்ததொரு ஆறு;
இடையில் அது ஓடி இணைந்தவைகள் கோடி!
வழமையுடன் ஓடி வரும் முடிவு நாடி;
வாழ்க்கைநதி ஓய வந்தஇடம் 'மூப்பு'!

# மாள்விலே வாழ்வு


என்னம்மா காலே இழவுமணி ''ஓஅதுவா
அன்னம்மா ஆச்சி அடக்கம்''! திடுக்கிட்டார்
''கைம்மாற்று'' வாங்கக் கருதி இருந்த அவர்!
பொய்யாய் பலர்முன் அழுதார், ''பொழுதுபட
வட்டி யுடன்'' என்று வாக்குறுதி தந்த இவர்!

தந்தி கிடைத்த தனயர் புழுவானூர்.
''அந்த மகளுக் கறிவில்லே''! ஆனாலும்
தந்தி கொடுப்போன் தடியாய் திரும்புகிறான்!
தூரத்தை நேரமுடன் தூக்கி அளந்துவிட்டே
ஈரத்தைக் காண்பான் இவன்.

சாவீடு வந்தார் சலிக்கின்றார்! ''எப்பொழுது
போய் எடுப்பார்'' என்று புழுங்கி இருந்து எழுவார்!
''அம்மாவை இன்னும் அரைநிமிடம் விட்டிடுங்கோ''
சும்மாவா அன்புச் சுமை இதனைச் சொல்கிறது.

பெட்டிக் கடைக்கோர் உழைப்பு! புதைகுழியை
வெட்டி முடித்தோன் விரும்பிப் பணம் பெற்றான்!
பூத வுடலைப் புதைக்கும் குழியருகே
தோதாய்த் தனது தொழில்வாய்ப்பைக் கண்டுவிட்ட
பொன்னம்மா போயிருந்து புல்லரித்துக் கொண்டிருந்தா!

பெட்டி நிறைத்தாள்! நிமிர்ந்தாள்! பிணமிருந்த
'பெட்டி' இறக்கிப் பிரிய மனமின்றிக்
கிட்டே அழுது கிடக்கின்றார் சாவீட்டார்!
(ஒன்று சிரிக்க உடன் ஒன்றங் கழுகிறதே)
கட்டிப் பிடித்திந்தக் காட்சிகளெல் லாந் தொகுத்து ஓர்
பாட்டை இழைக்கும் பணியில் இனித்திருந்தேன்
நானும்! தனது நலமோ முழுவாழ்வும்!
அன்னம்மா மாள எவரெல்லாம் வாழ்கின்றார்!
என்ன உலகம் இது!




அஞ்சலொன்று! ''யாருக்கு...'' அருளப்பர் பேருக்கு!
''பஞ்சிப்படாது படார் என்று எழுது தம்பி
'ரி, ஆர், வை' போடு! திருத்து முகவரியை!
பேர்ஒழிந்த வற்றைப் பெரிதாகக் கீறிவிடு.
பத்தாம் இலக்கம் பழைய தெரு...ஓம்.. கொழும்பு.
முத்தாய் எழுதிவிட்டாய்! பெட்டியிலே போட்டு விடு.''

செத்தார் பெயரில் சிறிய கடிதமொன்று.
புத்தூர்க்கு முன்போய்ப் புதிய முகவரியை
அஞ்சலிது பெற்றிருந்தும் அன்பர் இங்கும் இல்லையப்பா.
கொஞ்சம் முதலே கொழும்பிலிருந்தும் சென்றுவிட்டார்!
கண்மூடி விட்டார் கடிதம் வருமுன்பு!
எண்ண முடியா இனசனத்தார் சாவீட்டில்.

'ரிஆர்வை' போட்டுத் திருத்த முகவரியை
யார்வல்லார் யாரவரும் சென்ற இடமறிவார்?
ஆவியிலே அன்பர் அணைந்த இடமறியாப்
பாவி மனிதர் படுத்த உடலத்தைப்
பெட்டியொன்றில் இட்டார்! பெருங்காடு நோக்குகிறார்!
என்பு தோல் போர்த்த உடலம் எரிகிறது!
அன்பரெங்குள் ளாரோ அறியோம் பராபரமே.

# நிம்மதியைத் தேடி...!

நெடுந் தூரஞ் சென்றிருந்தார்
அம்மான் அலுத்தார்;
அதுவே பிணியாகப்
பாதியிற்தான் செய்த பயணத்தைப் போய் முடித்தார்!
சேதி வரும் 'நேற்றவர் செத் தார்'

நீட்டுத் தொழில்இதிலே நிம்மதியே இல்லையென்று
வீட்டில் இளைப்பாற வேளைக்கே ஓய்வு பெற்றுப்
பாட்டிற் கிடந்தாராம் பஞ்சலிங்கம்! பஞ்சிவர
வீட்டடியிற் கொஞ்சம் விதைத்தார்; முளைக்கமுதல்
தோட்டத்தில் சென்று கன்று நாட்டித் துளிர்க்கமுதல்
ஆடுகளை வாங்குமொரு ஆசையுற்று 'மேயவிட்டார்'
பாடுபல பட்டும் பலன் ஒன்றும் இல்லையப்பா
மாடாய் அலையும் மனம்!

தேனூரே கைக்கத் திருவூரைச் சேர்ந்தவர்க்கு
மானூரில் சின்னமயக்கம்! அது தெளிய
கோனூரில் வந்து குதித்தார்! மனம் பதைத்துக்
கானூரைக் கண்டு களித்தார்! புளித்துவிட
மீனூரை நோக்கி மிதந்தார்! பழையபடி
பூவூரைச் சேர்ந்து புளுங்குகிறார் அன்பருக்குச்
சாவூரைச் சேருமட்டும் சாந்தி கிடைக்கவில்லை.

தேட்டங்கள் நாடித் திரியாது தன்சிறிய
தோட்டத்தை நாளும் தொழுது மகிழ்வாகப்
பாட்டுத் தமிழ்போல் நீர் பாய்ச்சும் - பயிராளர்
நீட்டுக் கதை இவையை நிம்மதியாய்ச் சொல்லிவிட்டு
வேட்டி முடிச்சவிழ்த்து வெற்றியைப் போடுகிறார்!

நிம்மதியைத் தேடி நெடுந்தூரம் போகாது
தம்மடியிற் கட்டிவைத்த தம்பருக்கே இவ்வுலகம்
இன்பம் இருக்கும் இடம் - மோட்சம் - எல்லாமே!

# சாதியே!

ஆதியில் உன் தோற்றம் அழகு! பழங்கால
நீதி முறையின் சிறப்பு; மறுப்போமே?
மாந்தன் சமுகம் மலர்ந்து சிறந்தக்கால்
ஏய்ந்த புதிய இயலை அறிந்திருந்தும்
ஆதி முறையே அநியாயம் இன்னுமா உன்
நீதி முறையை நிறுத்தத் துணிகின்ருய்?
பாதி முறையாய்க் - குறையாய்ப் பழுதடைந்த
போதும்; உனக்குப் புதுமோகம்! போவெளியே!
ஆண்ட நாட் போதும்! அரக்கக் குணமெதற்கு?
நீண்ட நாள்! போதும் நீ போ.

கீதம் இசைக்கும் கிளிகள் எனப்புணர்ந்த
காதல் இளைஞர் கணக்கற்ருேர் உன்னுருவைக்
கண்டு கதறிக் கடைசியிலே நஞ்சுண்டார்.

நல்ல மனிதர் பலர்க்குச் செருக்கூட்டித்
தொல்லை தருவாய்! துடக்குப் பிறப்பிலென
வல்லார் பலர்க்கு வசைபாடித் தாழ்த்துகிருய்!
பொல்லாப் பிறப்பு முறையாற் சில பேருக்கு
இல்லாப் பெருமை இயற்றி உயர்த்துகிருய்!
எல்லோரும் இன்புற் றிருக்க நினைக்கின்ருேம்!
பொல்லாத சாதியே போ!

# அடிமை

ஆற்றங் கரையின் அருகே மணற்பரப்பிற்
காற்றின் விதிக்குக் கழுத்தை அசைத்தபடி
வீற்றிருந்த தந்த மரம்!
அந்த மரத்தின் அழகுக் கிளையொன்றில்
வந்தமர்ந்து பேசும் வளைவாய்க் கிளியொன்று.
கொத்துக் கிளைகளை முன் கோதிக் கிளைகள் தொறும்
தொத்தித் தளிர்கள் துவைத்த சுவை நிலையிற்
பாடல், பிறக்கும்! பருக அணைகிறது
சோடி! உடனே சுவையின் திசைமாறும்!
ஓடி அது என் நெஞ்சில் உதையக் கிடைத்ததிது:
கட்டற்ற காதல் கவிதையிலே வாழ்ந்தாலும்
சிட்டைப் போற் சின்னஞ் சிறிய உயிர்களைப் போல்
எண்ணப் படியே இணையும் பெரு வாழ்க்கை
உண்மையிலே மானிடருக் குண்டா? இலையே!
அழைத்த விழியின் அழைப்பால் உளத்தில்
தழைத்த உணர்வைத் தமிழ் செய்யக் கூடவில்லை
நான்! ஏன்? மனிதன்! எந்தன் நாவிற் பலவிலங்கு!
கீச்சுக் குரலில் கிளியின் மொழி வழியும்.
கூச்சம் தயக்கம் குறுக்கம் கிடையாது.
பேச்சு நிலையும் கடந்து பெருங் கருத்து
மூச்சு நிறைந்த தமிழில், மொழித் திறத்தில்
நான் புலவன் ஆனாலும் நாவிற் பெருவிலங்காம்
ஏன்? நான் மனிதன்; எனவே அடிமை மகன்!

போது நெரிந்து விரியப் புதுக்கிளையிற்
காதல்! பெடையினை அச் சேவல் அணைக்கிறது.
சாதல் வரினும் சரி என்ற கூர் முனையில்
ஆடவனின் காதல்அமையும்! அவன் அடிமை.

முக்காட்டுக் குள்ளோர் முழு மதியம் போலிருந்து
சக்கரையைத் தேனிற் குழைத்துத் தமிழாய்
வழங்கும் பொழுதவ் வண்ண நிலவை
உளங் கொண் டழைக்க நான் உன்னும் பொழுதிலோ
கண்டனங்கள் ஆயிரமென் கைக்கு விலங்கிடநான்
கொண்ட நினைவொழிந்து கூனி நடக்கின்றேன்.

வேறு மதத்தவன்நீ இன்னுளை நீ 'மணத்தல்
மாறு! மறுமதத்தாள் மங்கை' எனக் காதலரை
வேறுவே ருக்கி விலங்கிடுவார்! நாம் அடிமை!

அன்பை விதைத்த அருளாளர் போதனையே
துன்பவிலங் காக்கி அவர் தூக்கி அங்கே மாட்டுகிறூர்.
சாதி மொழிகள், சமயம் பொருள் என்ற
பேதங்கள் தம்மைப் பெரிய விலங்காக்கிக்
காதலரின் மீது கவிக்க அவரடிமை!
ஆனுலும் மாந்தன் அதிகம் கதைக்கின்றுன்.
காதல் பெரிய கதை!



# கடவுளைக் கண்டேன்

கடவுள் இவ் வுலகில் இல்லை என்றுரைப்பீர்!
கடவுளை நேற்றுநான் கண்டேன்!
பொடிபடும் உணர்வு புழுதியாய்ப் பறக்கப்
புழுங்குமென் அகத்திடை நுழைந்து
சுடுவெயில் அனைய துயர்மழை இடையும்
தொடர்ந்துநான் சென்றிட உதவும்
குடையென அவரும் உதவினுர்! தொடர்ந்தேன்;
குளிர்கொடுத் தருளினுர் குளிர்ந்தேன்.

'எந்தநன் மொழியில் இயம்பினுர்? உடைகள்
எவை? அவர் கிழவரா? இல்லை
சுந்தர வதன இளைஞரா? நல்ல
சுவைஞரா? கலைஞரா' என்ற
இந்தவா றெழும்பும் கேள்வியே சிறகாய்
எனைஅணு கிடும்மனி தர்காள்!
அந்தநற் கடவுள் அயலவர் அல்லர்!
அவரொரு மானிடர்! நம் ஆள்.

காலிலே நீண்ட சட்டைதான் அணிந்தார்!
கதைத்ததும் தமிழ்மொழி! கதைகள்
பாலிலே கலந்த பழரசம் போலே!
பசுவிலே சென்றனர்! பணமும்
நாலிலே மூன்றை நயந்தவர் அளித்தார்!
நலியுமென் மனநிலை இடித்த
தால்இவன் மொழிந்த தமிழையும் இடையே
தருமவான் பருகினுர்! சிரித்தார்.

வீதியிற் பெரிய மனிதரும் விழியை
விழுத்தினர் அவர்திசை தழுவி.
சாதியிற் பெரிய அலுவலர் அவரைச்
சரிவர மதித்தனர் கதைத்தார்.
ஆதியும் முடிவும் அமைய என்கதையை
அவர்களுக் கெம்பிரான் அருளிச்
சோதியேயான கதியெனக் களித்தார்!
சுறுக்கராய்த் தமதிடம் அகன்றார்.

பஞ்சியே இலராய்த் தம்மினும் சிறிய
பதத்தினர் பாங்கினும் நடந்து
கெஞ்சிய அவரோர் கடவுளர் தானே?
கேட்டதும் என்துயர்க் கதையை
விஞ்சிய பரிவு நடத்திட நடந்து
வேலைகள் முழுதையும் ஒதுக்கி
நஞ்சினை உண்டவ் வமுதெனக் களித்த
நல்லவர் கடவுளர் தானே.

கவிதைகள் சிலவைக் கொழுத்துவேன்; அந்தக்
கடவுளைத் தினம்வழி படுவேன்.
சுவைஞராய் அமைந்தக் கடவுளார் எடுத்துச்
சுவைப்பரேல் முழுமகிழ் வடைவேன்.
எவையெவை என்கீழ் அவர்க்குநான் உதவி
இயற்றிட முடியுமோ புரிவேன்.
அவைகளால் எனது கடவுளை நினைவேன்
ஆயினும் ஆலயம் எழுப்பேன்.

கோயிலை எழுப்பிக் கும்பிட வேண்டாம்.
'கொழுத்தடா' என்னவும் வேண்டாம்.
வாயிலைப் பூட்டி வைக்கவும் வேண்டாம்
வரிகளைக் கேட்கவும் வேண்டாம்
போயெனக் குதவி புரிந்தவர் செயலைப்
புகழுக! புரிகநீர் இதுபோல்
தேவரே யாவீர் என்தமிழ் உம்மைத்
தெரிந்துவந் திடும்; செயல் வாழ்த்தும்.

தத்துவப் பொருளாய் இருக்கிற கடவுள்
தடைவிடைக் குதவுவார்! அறிஞர்
கத்திடும் பொழுது அம்மொழிக்குரங் கொடுப்பார்!
கவிதையாய்ச் சிலைகளாய்ச் சமைவார்!
முத்தியில் இருக்குங் கடவுளோ நாம்கண்
மூடிய பின்னரே தெரிவார்!
அத்தகு நிலையைக் கிழித்துஅவர் நேற்றுஎன்
அருகிலே இருப்பதை அறிந்தேன்.

# இறைவனைத் தேடி...

கோவிலென ஒன்றமைத்துப் பூவிலொரு மாலை செய்து
ஆவலுடன் அன்பரெலாம் விரைவார் — அந்த
ஆண்டவனை வேண்டிடவோ நிரைவார்?

பாவிலொரு வாயணைத்துப் பத்தனெனும் பேரணைத்துத்
தேவுறையும் சந்நிதியிற் சென்றேன் — அந்தச்
செம்மலங்கு காணவில்லை; நின்றேன்!

ஊனுருகி, உள்ளுருகி, ஊற்றெனவோர் நீர்பெருகிப்
போனஅவர் பூசனைகள், புரிந்தார் — அங்குப்
போந்த பொருள் காணவிலை; விரைந்தேன்.

ஏசுநெறி, புத்தநெறி, இந்துநெறி என்னவிவர்
பேசுநெறி அத்தனையுங் கேட்டேன் — அந்தப்
பெரியவனை அங்குணர மாட்டேன்.

காணிமனை பேணுபுகழ், பாணியெனப் பூணுமணி
மாணுமிவை காணெனது தேட்டம்! — அந்த
மாயவனை யா இவைகள் காட்டும்?

நானுகர்ந்த வான்பொருளும் நாடிவந்த நண்பர்களும்
தேனுகர்ந்த தும்பியெனப் பிரிந்தார் - அங்குத்
தேடிய அத் தூயவனு தெரிந்தான்!

கள்ளிருந்த நெஞ்சொழிந்து கண்கலங்கி நானழுதேன்
உள்ளிருந்தங்கோரொலியைக் கேட்டேன் - எந்தன்
உணர்விலந்த மேலவனைப் பார்த்தேன்!

இல்லையொரு பாதையென்றே ஏங்கியிங்கு நாங்கலங்கித்
தொல்லையுறு போதிலுளம் நிறைவன்; - அந்தத்
தூயவனின் பேரதுவே இறைவன்!

# இறைவன் ஓர்

வயலிடைப் பயிரை அதனிடைக் கதிரை
வானிடை வெயிலவன் வரவை
அயலிடைத் தோப்பை, அங்கெலாங் கனியை
அவையிடைச் சுவையெனு மமுதைப்
பெயலிடைப் புனலை, அதனிடை உயிரைப்
புரந்திடச் சுரந்திடும் அருளைச்
செயலிடைப் பயனை, சிந்தையில் நினைவைச்
சேர்த்தவன் - இறைவன், ஓர் அறிஞன்.

வெண்முகில் துகிலை விண்ணிடை விரித்தோன்,
விரிசுடர் மீன்களைப் பதித்தோன்,
தண்புனல் ஓடை, தளர்நடைத் தென்றல்,
தாவுமான், தாமரைப் பொய்கை,
கண்பிறழ் கமலம், கயல்களின் பிறழ்வு,
காவிடைக் குனித்திடுந் தோகை...
எண்ணரும் இச்சீர் எழிலெலாம் வைய
ஏட்டிலே தீட்டிய ஒருவன்,

காலைவான் அரங்கில் கதிரவன் முருகைக்
கட்டவிழ் மலரிடைக் கள்ளைச்
சோலைசேர் மலர்கள் சுமந்திடும் எழிலைச்
சூழ்ந்ததைப் பாடிடுஞ் சுரும்பை
வேலைசேர் சங்கை வெண்ணகை முத்தை
வேனிலை, வெள்ளிவெண்மதியைப்
பாலனே! வாரிப் பருகென ஈங்குப்
படைத்தவன் - இறைவன் ஓர்கலைஞன்.

# தேவனே உன் குரலொலி

கோவிலொன்றை என் நெஞ்சில் எழுப்பி உன்
குரலை ஒன்றில் பதித்தவண் வைத்தனே.
வாயில் வந்ததைச் சொல்ல முனைகையில்
வழுவி ஓர்வழி செல்ல நினைகையில்
நோய்நிறைந்தென் உணர்வு திரிகையில்
நோக்குமாறி என் கண்கள் சுழல்கையில்
தேவைகண்டு 'அது' தானே இயங்கிடத்
தேவனே உன் குரலொலி கேட்கிறேன்!

கோயில் பற்பல விண்ணை மறைத்தன.
கொள்கை பற்பல கோபுரங்கட்டின.
வாயில் தோறும் வழிந்தனர் ஆர்வலர்.
வாதமேடை பலப்பல தோன்றின!
பேய் தொடங்கிச் சுவர்க்கம் அடைகிற
பேறுமட்டும் கதைகள் வளர்ந்தன.
ஆயினும் எது தீது நன்றென்பதில்
அன்பருக்குட் பிணக்கு மலிந்ததே.

மிக்க கல்வி படைத்தவர் — பாமரர்
மென்மை நெஞ்சினர் — கல்மனம் உள்ளவர்
தக்க பண்பை உடையவர் என்கிற
தாழ்வுயர்வுகள் தாண்டி அவரவர்
பக்குவப்படியே ஒலிக்கின்ற உன்
பரம ஞானக் குரலொலி கேட்கிறேன்
அக்குரல்தனையே மனச் சான்றென
அழைக்கிறேன் அதன் ஆணை மறுக்கிறேன்.

# படைப்பும் விளம்பரமும்

விற்பனைக்கு வேண்டும் விளம்பரங்கள்; என்றாலும்
அற்ப மனிதர் அதனைக் கருதியோ
பண்டத்தை விஞ்சப் படைப்பார் விளம்பரத்தை?
அண்டத்தைச் செய்தெறிந்த ஆண்டவனே மானிடர்க்கு
மண்டைக் கருவம்! மறுப்பா? அக் கோள்களென்ற
குண்டுகளை வானிற் குலையா துருளவிட்டும்
துண்டு விளம்பரமும் தூயவநீ செய்யவில்லை.
அண்டத்தார்க்கு அள்ளி அறிவு வழங்குகிற
பண்டிதனாய் நீயிருந்தும் பட்டம் உனக்கில்லை.
சுண்டங்காய் மானிடர்க்கோ பேரின் இருமருங்கும்
நண்டு போற் கால்நீட்டும் நானூறு பட்டங்கள்!

சிந்தை மொழியால் அளக்க அதைக்கடக்கும்
இந்தப் பெரிய இயற்கைப் படைப்புக்கு, ஓர்
ஆக்கியோனாக அமைந்தும், அது பற்றியொரு
வாக்கியம் உன் வாயால் வரவில்லை. மானிடரோ
பாக்கட்டித் தம்படைப்பைப் பாராட்டுவார்.! அவர்க்கு
நாக்குமிக நீளம்! நயமாய் வளைக்கின்றார்.

நீ அன்று செய்துவிட்ட நீசச் சிறுமனித
வேரில் விழுந்த கிழங்கோ எனது திறம்
பார் என்று கூறிப் படைப்பின் முனதாகத்
தன்னையே காட்டித் தருக்கித் திரிகிறது.
பென்னம் பெரிய பணிகள் பலபுரிந்தும்
இந்நாள்வரையும் இறைவா ஒருமுறையும்
உன்னைநீ காட்டவில்லை ஒப்புகிறேன் உன் உயர்வை.

# உட்பொருள் என்னடா

வானம் என்ருெரு பந்தலமைத்தவண்
வண்ண வெண்முகிற் பட்டு விரித்தவா!
மீனம் என்ருெளிர் முத்தணி தூக்கினே!
மின்னலென்ருெரு மெல்லொளி வைத்தனே!

வையமென்ருெரு மேடை யமைத்துடன்
வாழும் மாந்தரங் காட விதித்தவா!
உய்ய மானிடர்க் காயிரம் வைத்தனே
ஓகை கொண்டிட ஓர்பதிஞயிரம்!

'பாடு' என் ருங்கொரு பூங்குயில் வைத்தனே!
பால்நிலாவை உலாவர விட்டனே!
'ஆடு' என் ருங்குநீ ஓர் மயில் விட்டனே!
அல்லிதாமரைப் பொய்கை அமைத்தனே!

வேனில் என்ருெரு காலம் விதித்தனே!
வெண்ணிலா விரி மாலை அமைத்தனே!
கானில் மான்களின் காதலை வைத்தனே!
கள்ளிருக்கும் மலர்ப்பொழில் கண்டனே!

கொம்பிற் பூவை கிளிகள் புதுமணம்!
கொத்தணைத்த கனிகள், கொழுந்திலை
தும்பி நல்லிசை; தூவலின் நீர்நலம்,
துள்ளுமீன், துவள் தென்றல், சுரும்புகள்.

பச்சைப் போர்வையுட் பள்ளிகொள் பார்மகள்,
பண்ணொலித்திடு தண்ணிய ஓடைகள்,
இச்சையோடிணை வாகும் இரண்டுயிர்க்கு
ஈங்கு வைத்தஓர் ஈடில் கலைஞனே!

கள்ளிருக்கும் மலரை மணக்கிறேன்.
காதலிக்கதைச் சூடி மகிழ்கிறேன்.
முள்ளிருக்கும் வரள்செடி ஏனடா?
மூத்தவா இதை ஏனிங்கு வைத்தனை?

வானமாய் 'அவன்' நுண்மதி வைத்தனை.
வாழ்த்திறேன்; உந்தன் வண்ணம் வியக்கிறேன்.
ஊனமாய் இவன் மூளை இருப்பதேன்?
ஓதடா இந்த ஓரம் எதற்கடா?

மலரிருக்கும் ஓர் நெஞ்சை அமைத்தொரு
மங்கை காதலை அங்கு வளர்த்தவா?
அலரிருக்கும் ஓர் நெஞ்சை அமைத்துடன்
அன்ன காதலைத் தின்னவேன் விட்டனை?

மீனெடாவிழி மென்னகை முத்தடா!
மின்னெடா அவள்மேலவள் சொத்தடா!
கூனெடா இவள் குப்பை இருப்படா!
கொற்றவா இந்தக் கோரம் எதற்கடா?

கன்னலாய்ச்சிலர் வாழ்வைச் சுவைக்கிறார்
காண்கிறேன்; உந்தன் கையை வியக்கிறேன்.
இன்னலாற் சிலர் வாடுதல் ஏனடா?
இறைவனே இதன் உட்பொருள் என்னடா?

# பகிடி

அப்பா இறைவனே! அன்றுன் தனிவாழ்க்கை
உப்பாய் உவர்த்த துணருகிறோம் - எப்படியும்
பஞ்சி முறித்தாய்; பகிடி பழுதாக
அஞ்சினையோ இன்றைக்கு அழு!

செந்தீயின் பந்தில்நீ சில்லென்ற நீர்தெளித்தாய்
அந்த வினையினைஇங்கு ஆர்போற்றுர் - வந்தாங்கு
ஆதாமோ டந்த அரிவையேன் ஆடினளாம்
தோதாக; இன்று துடி.

பாவாய் அருவி; பனிமலரில் வண்டாடல்
ஆவாய் அரிமா அவரடியில் - 'கூவாய்
குயிலேநீ' என்ருய்; 'குளிர்நீரில் துள்ளு
கயலேநீ' என்ருய் களித்து!

பாய்ந்தானவ் வாதாம்; பளிங்குச் சுனைகண்டான்;
சாய்ந்தான்! எழுந்தான்! சலிப்படைந்தான் - ஏந்தவளைத்
தொட்டான்! சுவைத்தான்! துவண்டார்! துடக்குண்டார்
விட்டார் பகிடி விழைந்து!

கண்ணைத் திறந்தாய்நீ கண்டு கலங்கினையோ?
மண்ணை நிறைக்கும் மனுக்கூட்டம் - விண்ணர்
புணர்வார்கள்! ஆமாம் புதுப்பகிடி செய்வார்!
உணர்வாயே இன்றுன்பிழை!

அன்னைக்கு என் அப்பா அன்று அஞ்சல் அனுப்பியதும்,
பொன்னிக்கு நான் கடிதம் போட்டதுவும் - சின்னமகன்
ஊர்விட்டே ஓடியதும் ஒரே பகிடியடா
ஆர்விட்டார் இங்கே அதை!

# 4

# பா இதழ்

*

பழமொழியும்
புதுமொழியும்
பழவழியும்
புதுவழியும்
புணரும் போதில்,
உணர்வினிய
மொழிவுகளும்
சுழிவுகளும்
தனிப்புதிதாய்த்
தளிர்த்தல் கூடும்..?

# வாணி வரம்

கூம்பித் துயின்ற முளரிக் குமரியவள்
சோம்பல் முறித்துச் சுரும்பர் இசைக்க
உதய வெளியினிலே ஓடும் ஒளி நீரில்
புதிய நினைவோடு போதாம் முகங்கழுவக்
காண எழுந்தகதிரோன் முகங்கண்டு
நாணிச் சிரித்துவிட்டாள் நல்ல மணி ஈதெனவே
வீணை கரம்பிடித்து வீழாத ஆசையுடன்
வாணி கலையின் தலைவீ நீ வந்தமர்ந்தாய்
என்றுந்தன் ஆர்வலர்கள் ஏத்திப் புகழுவதை
நன்றென்று நான்மொழியேன் நானோர் கவிஞனம்மா.

ஆய்ந்து புதியவற்றை ஆக்கி அவை முழுதும்
ஆய்ந்தே அழிக்கும் அறிவியலார் போலாது இங்கு
ஆராச் சுவைசேர் அகிலம் பலவற்றை
சீர்தளைக்குள் நாளும் சிறைப்பிடிக்கும் செங்கலைஞன்
தானே அறியத் தருவான் நினதிருக்கை.

தேனாய் ஒழுகுகிற தென்னவர்தம் வீணையொலி
மக்கள் மழலையொலி மாதர்தம் பாடலொலி
கிள்ளைக் கிளர்வுமொழி, கீதக் குயிலியிசை
வெள்ளைக் கலையணிந்தாள் வேண்டுமிடம் என்றுரைத்தோன்
பாட்டால் உலகளந்த பாரதியே யானாலும்
மாட்டேனவற்றை மதிக்க; ஒலிகளெலாம்
காற்றில் கரைந்தழிதல் கண்டுமோ நீயவற்றில்
வீற்றிருக்க நாளும் விரைவாய்? உனதிருக்கை
வேறும் கலைகளல்ல; வேதப் பொருளுமல்ல;
நாறும் மலருமல்ல; நல்ல கவிதையம்மா.

பாடித் தினம் தமிழைப் பண்ணுற்ற எண்ணமொடு
சங்கப் புலவர்களின் சால்புக் கவிதைகளில்
அங்குப் பொலியும் அழகுத் தனித்தமிழில்

வள்ளுவனார் வாக்கில், வளமார் தமிழ் நெஞ்சை
அள்ளும் சிலம்பை அமைத்தோன் அறநெஞ்சில்
கற்றூர் தொழுமக் கலியின் ஒலி நலத்தில்
ஒற்றைப் பரிபாட் டொழுகிசையில், வாசகத்தில்
கம்பன் கவியமுதில், காலத்துடிப்புணர்ந்து
நம்பக் கவியாத்த நம்பா ரதிப்படைப்பில்
தும்பியாய் ஓடித் திரிகையிலே அங்கிருந்து
'தம்பீ' என அழைக்கும் தாயே நினைக்கண்டேன்.

கண்டும் நினை என் கவியில் அமர்கவென
கொண்ட தோர் ஆசையினுற் கூசாது வேண்டுகின்றேன்
வையத்தின் காவலர்கள் வாழ்த்திசைக்கப் பாமொழிந்த
பொய்யிற் புலவோர் புலநாவில் நீயிருந்து
பைய விடை பெற்றாலும், பாராட்ட மன்னவரும்
செய்யும் சிறப்பினொடு சீர்வரிசை யாதுமின்றி
வாழுந் தமிழில் வளருங் கருத்துக்களை
நாளுந் குழைத்துருகும் நம்காலப் பாவலரை
ஆளாது விட்டே அகலாய் நீ என்றறிந்தும்,
கேளாத நெஞ்சின் கிளர்வால் இது கேட்டுக்
கள்ளமகன்ற கவிநெஞ்சாற் கூவுகின்றேன்,
தள்ளாது வாணி வரந் தா!

தாவென்றழுங் குரலும் தாயே நீ வந்தமர்ந்தால்
பாவென்ற பேறடைந்து பாருலகை ஆளாதோ?
தேமா புளிமா தெரிந்து வரிந்தவைகள்
தாமா கவிதை தலைவீ அதுவடிவம்
ஆய வடிவில் அழியாய்ப் புதுவெள்ளம்
பாய அருள் நீ புரியின் பாவலர்கோ ஆகேனே!
இனிய அழகுகளை இங்குநான் காணுகையில்
நினைவினிலே ஊருதம்மா நொட்டைக் **கவி**கள் பல.

ஆடா அசையா அழகே இவனைப் போய்ப்
பாடென்று கூவுமெனிற் பாவாணனென்னெதிரே
ஓடையருகினிலே ஒற்றை நிலவொளியில்
வாடா மலரொன்று வாய் திறந்தென் பாமொழிந்து
தேயாத தண்ணிலவாய்த் தென்னூர் குலவிளக்காய்
சாயாத கொங்கைகளில் சாகுந்தன் பெண்மையினைக்
கொண்டு சுமந்து கொடியொன்றசைந்து வரக்
கண்ட இளநெஞ்சிற் காதல் பிறக்காதோ?

மோதிக் குடையும் முரல் வண்டுக் கண்ணிரண்டால்
காதல் உளத்திற் கவிதை வெறி மூளாதோ?
அந்த வெறியினிலே அம்மா நான், எம்சான்ருேர்
வந்த நெறியில் வழுக்கி இழுக்காது,
முந்தை நெறி ஒன்றே முறையென் றறையாது
சிந்தைக் குகந்தவொரு செம்மை நெறிதழுவிச்
செந்தமிழைப் பாட வரந் தா!

சிந்தைக் கருத்தைச் சிறப்பாய்ப் படம் பிடிக்க
எந்தத் தமிழ்வந்து இயல்பாய்ப் பொருந்திடுமோ
அந்தத் தமிழே அழியாத வாழ்வு பெறும்
சிந்தை தெளிவானுல் செப்புவதும் பாவானுல்
வந்த மொழியும் வழுவற்ற செந்தமிழாம்
அந்த நலத் தமிழின், ஆற்றலினுல் எந்நெஞ்சிற்
பாயுங் கருத்துக்களைப் பாவாவரம் ஆக்கினனேல்
மாயாக் கருத்து மலர்ச்சியாய் நெஞ்சின்
குறிக்கோள் விளக்கமாய், கூனுக் கவிஞன்
வெறித்த கலைமனத்து வீருய் அவையமைய
செந்தமிழ நாட்டுச் சிறுவர் நிலவொளியில்
கெந்தியடித்துக் கிளர்வோடு பாடிடவும்
காதற் கவிதைகளைக் காளையரும் கன்னியரும்
தூதாகவிட்டுத் துணையென்று போற்றிடவும்
பார விலங்கறுக்கப் பாயும் இளைஞர் குலம்
வீரக்கவிகளைக் கை வேலாயெடுத்திடவும்
வண்டாய்த் தினம் பறந்து வந்து வந்து என் நன் கவியைக்
கொண்டாடித் தம்மனத்தே கோயில் எழுப்புவகை
தண்டா வரமெனக்குத் தா.

# கவி

அழகு மனத்தின் அமைதி படி செய்யப்
பழகும் கருவி கவி.
இளமை மனத்தின் இசையைப் பிடித்து
மொழியிற் பதிக்கும் முறை!
சொல்லில் சுவை கவிக்கும் சூட்சுமத்தை ஆளுபவர்
வல்லமையில் வாய்த்த வனப்பு!
சொல்லை எடுத்துச் சுவையாட்டம் காட்டுகிற
வல்லான் கொடுத்த வடிவு!
காவியர்தம் நெஞ்சக் கனிவு தமிழாகிப்
பாவில் வடிதலேயப் பா!
சொல்லில் உறையும் சுவையின் நிறையறிய
வல்லான் அளந்த அளவு.
பாவாணர் நெஞ்சப் பதிவு தொகுத்திருக்கும்
ஆவணமே அந்தக் கவி.
சுவையூட்டச் சொற்காட்டும் மின்னோட்டம் தானே
நவையகன்ற பாடல் நயம்!
அப்பெரிய மின்னோட்டத் தார்வலர்தம் நெஞ்சுபடின்
தப்புமோ இங்குத் தனி?
புத்தழகு சேர்த்து மகிழும் புலவோரின்
நெற்றிவியர் தானோடி நீ?
நெற்றிவியர் வல்ல, அவர் நெஞ்சக் கடல் விளைந்த
முத்தேநீ - உந்தன் எழில்.
நல்ல கவியின் நயமுணர வல்லார்க்குச்
சொல்லில் அமுதப் பிழிவடிநீ அல்லார்க்குக்
கல்லுச் சிதறு களம்.
எல்லை கடந்து இங்கு எதையுமே கண்டறியார்
சொல்லின் வயதே சுவைத்துக் கலை மனத்தைக்
கல்லை நிகர்க்கக் கனமாக்கிக் கொண்டவர்கள்
பல்தொன்நூல் கற்றவெறும் பண்டிதர்கள் தாம்முயன்று
தேடியுமே காணுத் திரவியம்நீ ஆனுலும்
கூடுவாய் நேயர்க் குளிர்ந்து.

# அந்தப் பொய்

''கண்டதையே சொல்லிக் கவி செய்'' என நெருங்கிச்
சண்டைக்கு வந்தீர் சரி (சற்றுத் தள்ளி நில்லும்)
காய்ந்து வெடித்திருக்கும் கட்டாந் தரைபோற் தோல்;
வேய்ந்த பருக்கள்; வெளியிற் தலைநீட்டித்
தானே சிரித்துத் துள்ளுகிற பற்கூட்டம்;
நானே என அகலும் நாரி (அதில் ஏன் ஐயம்)
ஆடியிலே பார்க்க அவ அஞ்சும் அந்த முகம்;
தேடியா போனேன் தெருவில் நடந்தது, அதைப்
பாடித் தமிழைப் பழுதாக்கச் சொல்லுகிறீர்!
சூத்தைப்பல், உண்மை! அதைச் சொன்னால் என்னுடைய
வார்த்தையிலும் சூத்தை! வருந்தற்க; உங்கள்
வருத்தமே கண்ணுகை வாயில் திறந்து
மருத்து மனையில் மணிக்கணக்காய் காப்பார்
பொருத்தம் அவரிடம் போய்ப் போத்திலையும் நீட்டின்
சிரித்த முகத்தோடு செய்திடுவார் வேண்டியதை!
அன்னார் விடுக்கும் அறிக்கை படித்திடுக;
என்னால் அதுபோல் எழுத முடியாது.
சற்றே விலகும்; சரியென்னை விட்டு விடும்
கற்பனையாந் தேரேறிக் கண்டபடி பொய் சொல்ல,
ஆவென்றீர் வாயை அதைச் சற்று மூடிவிடும்,
பாவென்றால் என்ன? அது பார்த்தெழுதும் கட்டுரையோ?
நான் வணங்கும் தெய்வம் நயமிருந்த பொய்யொன்றே,
ஏன் உண்மை சொல்லி இடர் செய்வேன் ஆர்வலர்க்கு!
பவளம் இரண்டெடுத்துப் பல்லை நிரைத்துத்
தவள நகையவளைப் பாரென்று நான் சொல்லும்
பொய்யாற் சுவைஞர் புளகம் உறுவாரேல்
ஐயன்மீர்! நாளும் அதையே நான் சொல்லிடுவேன்
செய்யினுமே என்னைச் சிறை,
அந்தச் சிறையும் அழகுமலர்க் காவென்று
செந்தமிழிற் சொன்னாற் சிரிப்பீர்! கவிமகனுக்கு
அந்தப்பொய் தானே அறம்.

# விழி திறப்பு

பழைய பார்வை!
புதிய வாழ்வு!!

விற்போரும் மற்போரும்
வீரம் ஆக
வீரத்தை விளையாடத்
தூரச் சென்றோர்
கற்பாரும் கானகமும்
கடந்தார் ஆகக்
காலந்தாழ்த் தினரென்னக்
கலங்கும் பெண்டிர்
பொற்பூரும் கபாடங்கள்
தம்மைப் பூட்டப்
பூட்டியவை திறந்திடுக
என்ற பாட்டிற்
சொற்போட்டுச் சொற்
போட்டுக்
'கடை திறப்பு'ச்
சுவைத் தமிழைச் செயங்
கொண்டான்
ஈந்தான்!

(அன்று.)

கல்வி எனும் பெரும்போரில்
வாகை காணக்
காதலர்கள் கடும் செலவு
செய்தார் ஆக
மெல்லியலார் துணையகன்ற
வெற்று வாழ்வில்
மெல்விழிகள் தமைப்
பொருத்தித்
தனிமை என்ற
தொல்லையினை நறுக்குவகை
துயின்றார் ஆக
துயர் உழந்த அவர்கணவர்
அவலங் கண்டு
நல்லவர்தம் விழிக்கதவம்
திறக்கும் வண்ணம்
நகுபா ஒன்று ஓதுகிறேன்
முறையே

(இன்று.)

---

காதலியர் கண்ணுறங்கிக் கனவுங் காணக்
கல்வியிலே ஈராண்டைக் கழித்தே வந்த
தீதறியார் படலையிடைத் திகைக்கக் கண்ட
திறப்புலவர் விழித்திறப்பைத் தொடக்கஞ் செய்வார்.

கல்வி- ஈராண்டு ஆசிரியப் பயிற்சி

வாளெ,ளுந்திரையும் போர்பு ரிந்தவரின்
வாகை பாடுதமிழ் வாயினீர்,
தாளெ ளுந்திரையும் போர்பு ரிந்தவரின்
தலைமை பாட விழிதிறமினோ!

மணமெனப்பெரிய பணமு டிப்புகளை
மகிழ்ந ருக்குதவு மனைவிகாள்!
கணமெ னப்பெரிய கலையிடப்பிரியு
கணவரைத் தெருவில் எதிர்மினோ!

வடையி ருந்தகுழல் வழுகு மென்றுகணம்
வளைகு லுங்க, அவை சரிசெ வீர்
தடையி றந்ததுயில் தனில் விழுந்தமையும்
தனிமையோ, அலது இனிமையோ?

படலை நாய்! அடட கொடிய நாயுமது
பழைய வீடுகளில் உறுமு நாய்!
உடலெ லாங்கடிகள் உதவலாமதுமுன்
ஒழிமின் உங்கள் துயில்; விழிமினோ!

கற்று விட்டுமது கடையில் வந்தனரும்
கணவர் - தமதுடலின் நலமெலாம்
விற்று விட்டுணவு விழைய வந்தனர்; உம்!
விழிமின், ஏழுமணி விழுமினோ!

தெருவிலேபெரியர் திரிகிறார்; நுமது
திசையிலே விழிகள் எறிகி றார்;
அரிய போதனைகள் அருளு வார்; அதுமுன்
அடி, எழுந்துவிழி துடைமினோ!

'கடையி லோடியொரு கவளம்; பின்னரொரு
கதை; அதானபினெர் நடையு லா;
கிடையில்' என்றநிலை கிழிமின் அன்பர் கடு
கதியில் வந்தர்; எடி எழுமினோ!

''செல்வ னுக்கறிவு சேர்க்கு நாளிதனில்
சீ, இதென்ன ப,டிப்'' பெனு
சொல்லி விக்கியொரு சோர்வெடுத்துமனஞ்
சுழலு வீர்கள் விழி திறமினோ!

தேர்வு நாளில் - ஒரு திருடு நாளில், மறு
திங்கள் ஈங்குவரல் தீட்டினூர்;
ஆர்வ மோடவரும் அணைய வந்தனர்; உம்
அடி! எடுத் தெறிமின் போர்வைகள்!

கலைகாண முனைநாளில் படர்காலை தெருவில்
கருநாக சடைகாண நெரிவார்தம் மனதின்
நிலைகாண விழியாமென் நெடுவேலை விடுவீர்!
நிதிகாணப் பிரிவார், நும் குதிகாண விழிமின்!

'முறையாக' நுங்காதல் அவர்வீசு மடலை
முன்செல்வ மில்லாத சிலர்பெற்ற பொருள்போல்
உறைநீவி யாரேனும் இல்லாவிடத்தே
உற்றுற்று நெஞ்சந்தளிர்ப்பீர்கள் எழுமின்!

*

(பூவையர் தம் மேனிப் புனைவு நலன்)

பூசள வளவெனும் புதுநிறம்;
பொடியள வளவெனும் நறுமணம்;
காசள வளவெனும் கடைநடை;
கதையமு தனையவர் விழிமினே!

நுரைபுரை துகில்மலை சரியவும்
நுதலிடை இருகயல் புரளவும்
திரைதரு அருவியிற் றிரிகுவீர்
திருவிழிக் கதவுகள் திறவுமின்!

புடைபடப் புனைகுழல் வளர்தொறும்
புதுமனப் பொடியள், உம் புகழ்சொலி
அடிபடத் தெருநடை அருளுவீர்
அணைவிடுத் தவர்களைத் தழுவுமின்!

பலநகை வகைகிடந் திலகவும்
பலவிழி யவையிடை யலையவும்
பொலவிலை நிலையமென் றசைகுவீர்
புதுமணி யிணைவிழி திறமினே!

பொட்டுகள், கட்டுகள் பொலிதொறும்
பொறியியல் அறிஞர்தம் புலமையும்
மட்டமே என்னுமா றுயருவீர்
மயலுடைத் துயில்துறந் தெழுமடீ!

ஒப்பனை முடி, முகில் உதையவும்
ஒளிமணி, முத்தணி ததையவும்
'சப்பறம்' எனவரு சதிகளே!
சார்ந்தவும் பதிகளைத் தொழுமினே.

விழலைத்தரு மொழியிற்பல
    'வடுகு' ஞ் சில தமிழும்
குழறத்தரு கதை நாடியர்
    குமுதத்திணை திறமின்!

'பஞ் சப்படி', 'பதி சொற்படி',
    படலைப் படி தாண்டி
நெஞ்சப்படி கடைவீதியில்
    நிற்பீர் கயல் திறமின்.

(ஓதஅவர் போயகல ஒண்டொடியார் கண்டதுயர்)

போகுநர் வருகுநர் தேரொலி
    புதுமணக் கணவர்தம் வரவெனு
தாகமோ டோடுவீர்; பிறர்வரத்
    தரையினிற் கீறுவீர் விழிமினே!

கல்லுடன் ஊரியை உணவெனக்
    கலைபயில் ஆண்டிரண் டுண்டவர்
பல்லிரண் டின்றியே வந்தனர்
    பதைபதைத் தெழுமடீ பாவையீர்!

சம்பளங் கொண்டவர் வருவழிச்
    சறுகுவார் நண்பரோடெனவிழி
அம்புகொண் டெங்கணுந் தடவுவீர்,
    அமளிவிட் டவர்தமை அணுகுவீர்

பள்ளிப் போருக்கு அவர்பிரிய
    பாயற் கடலை நீந்தாது
''கள்ளிச் சோறு வாழ்க்கை'' யெனக்
    கதறுங் கனிகாள் எழுமினடீ!

பல்லிக் குங்கள் செவியீந்து
    படலைக் கிரண்டு கயலீந்து
பல்லுக் கழகு நகமீந்து
    பதுமைக் குங்கள் வடிவீவீர்!

காலின் அதரில் தலையீந்து
    'கடிதன்' வரவில் விழியீந்து
ஏலின் ஆங்குத் துயில் தோய்ந்தும்
    இனேயும் கனிகாள் துயிலெழுமின்

உள்ளப் பிரிவார் நினைவொழிய
உலவச் சென்றும் அவர்தமையே
பள்ளிச் சிறுவர் கொண்டுவரும்
பொருளிற் கண்டு பதறிடுவீர்.

வேகம் விழைய வருகொழு நர்
விடுக்கும் தந்தி எனவந்தக்
காகங் கரையக் களித்திடுவீர்
கயல்கள் திறந்தே எழுமினடி.

''கொஞ்சம்.. கொஞ்சம்..'' என்றெழுதிக்
குதலைக் கதைகள் மலையாக
அஞ்சல் அதையே பொதியாக
அனுப்பிக் களிப்பீர் விழிதிறமின்!

அறையில் தம்பி அனுமார்கள்
அத்தான் கடிதம் கொண்டுவரச்
சிறையில் சூளா மணிபெற்ற
செல்விக் குவமை சொல்லிடுவீர்.

நினைந்து நினைந்து அவரெழுதும்
நேயக் கடித நினைவுகளில்
நனைந்து நனைந்து தமிழ் காணும்
நல்லீர் வல்லே துயிலெழுமின்!

''நாயைக் கலைக்கப்படலையிடை
நானே போவேன்'' எனவுங்கள்
தாயைத் தடுத்துப் போயங்குத்
தலைவர்த் தேடும் விழிமடவீர்!

'வருவார் வருவார்' எனப்பார்த்தும்
'வாரார் வாரார்' எனவேர்த்தும்
ஒருபா டாகா உளமுடையீர்
ஒழிமின் ஒழிமின் விழுமினடி!

'மாற்றம்' என்னத் தூற்றுவதும்
மற்றைத் திங்கள் சம்பளத்தின்
ஏற்றம் என்னப் போற்றுவதும்
இயலாம் மடவீர் விழிதிறமின்!

கொள்ளுந் துயிலின், குறட்டையிலும்
கொழுநர் பயிலுங் கலைமேலே
அள்ளி அள்ளி வசைபொழிவீர்
அழகுக் கண்கள் திறமினடி!

வெள்ளிக் கிழமை-நுங்கணவர்
    விடுகைக் கிழமை, நடுநிசியே
துள்ளி எழுந்து விடியளவும்
    தூங்காக் கண்ணீர் துயிலெழுமின்.

✱

(போர்வை அசையப், புதிதுண்ணப் பாடுகிறார்)

உணவு உண்பதிலொர் உருசி உண்டெனவும்
    உணர்கி லாதுகலை பயிலுவார்
மணவு லாவுபல அமுத பானமுண
    மடையி, லோடியவை அடுமடீ!

'இயலில்' எதனையும் அறிவிர்; அதனையும்
    எழுதி அள்ளுவிர் புள்ளிகள்.
செயலில் அவைவரல் சிரமம்; சருகையும்
    சிதைய புதியவை படைமினோ!

வளைகள் மோதி ஒலிக்கட்டும்
    வடிவாய்க் கூட்டிப் பெருக்கட்டும்
களைகள் கணவர்க் கோடட்டும்
    கனிவிற் பாலை தூக்கட்டும்.


உலைகள் எங்கும் கொதிக்கட்டும்
    ஓடிக் கறிகள் ஆறட்டும்
சிலையாய் அவர்கள் சமையட்டும்
    செல்லக் கதைகள் பேசட்டும்.

வாழைக் குருத்தும் விரியட்டும்
    வண்ணக் கைகள் படைக்கட்டும்
வேளைக் கன்பர் அருந்தட்டும்
    விழுந்து விழுந்து தூங்கட்டும்.

நாளைக் கவரும் எழும்பட்டும்
    நம்மைப் பார்த்துச் சிரிக்கட்டும்
வேளை பார்த்துப் புடைவைக்கு
    விண்ணப்பங்கள் விரியட்டும்!

✱

சரச ரக்குமொரு சருக தற்குமொரு
    சந்தி மட்டும்விழி சிந்துவீர்!
கரகரத்துவரு, குரலடைத்ததிரு
    கயல்திறந்த வரை அணைமினோ!



# இராவணன்

அந்தநாள்! இலங்காபுரி நாட்டிலே
ஆடவர்வலி ஓடிச்சிறந்தநாள்.
அந்த நாள் இலங்காபுரி நாட்டிலே
ஆய்கலைகளின் கோயில் மலிந்தநாள்.
அந்தநாள் இலங்காபுரி நாட்டிலே
ஆட்சியில் மகிழ்வு ஓங்கிச் சிறந்தநாள்.
அந்தநாள் இலங்காபுரி நாட்டிலே
அண்ணல் இராவணன் ஆணை சிறந்தநாள்.

காணநெஞ்சு துணுக்குறும் காட்சியர்
காலனொத்தவர் ஆடவர்; ஆயினும்
வீணைநின்று விதைக்கும் இசையெனில்
வீழ்ந்து வீழ்ந்து திளைப்பர்! அரக்கியர்
பாணமொத்த விழிகள் சுழலுமேல்
பாவம் அன்னவர் வீரம் இழந்தொரு
நாணம் அற்று அவர் தாளில் விழும்வகை
நல்லகாதலின் மென்மை உணர்ந்தவர்.

பஞ்சியூட்டிய தம்மடிச் செம்மையைப்
பாதியூடலில், தங்கள் கணவரின்
குஞ்சிமீது பொலிந்திடக்கண்டுளம்
கூசுகின்றவரே இலங்காபுரி
வஞ்சிகள்! புகழ்த்தேவரைப் போரிடை
வாட்டுவாரையும் வாட்டிமகிழ்பவர்!
அஞ்சவந்த உருவினர் ஆயினும்
ஆடவர்க்கமுதாயினர் வாழ்கவே.

பண்ணிறைந்து வழிந்திடு சூழலில்
    பால்நிலாவே உலாவரு மாடியில்
தண்ணறவைப் பருகித் தருக்கிய
    தமிழ மங்கையர் செவ்விதழ் ஊறலை
உண்ண உண்ண வெறித்த இளைஞரின்
    உவகை பொங்கிடுமாறே இராவணன்
எண்ணி எண்ணி இயற்றிய அப்பெரும்
    ஈழமாநகர் விண்ணுலகு ஒப்பதாம்.

கூற்றிருந்ததுபார் என விம்முவர்
    கூனிநின்றிடு தேவர்கள்; ஆயினும்
வீற்றிருந்தனன் அண்ணல் இராவணன்!
    வீறெழுந்த கழல்களிலே திறை
ஏற்றிருந்தனன் அண்ணல் இராவணன்.
    ஏவலானவை தேவர்புரிந்துடன்
போற்றுகின்றனர்; புன்னகையாலவன்
    பூமியாவையும் ஓர் குடைவைத்தனன்.

தேவரானவர் போரிடைத்தோற்றதும்
    தெண்டனிட்டுப் பணிகள் புரிந்ததும்
பூவிலேஒரு விண்ணை அமைத்ததும்
    போயெடுத்துப் புகழும் புலவரீர்!
யாவும் ராவணன் கைகளின் செய்வினை.
    யாவுமே அவன் ஓய்வின் சிறுவினை.
பாவிலூறிய சிந்தையி னுலவன்
    பாடுவீணையை ஏனோ மறக்கிறீர்?

மலையெனப்பெருந் தோள்கள் இருந்ததும்
    மாற்றலர்க்கொரு கூற்றென நின்றதும்
சிலையி னுலவன் தேவருடலிலே
    சித்திரங்கள் வரைந்ததும் செப்புவீர்!
கலையிலூறிய காதலினால் அவன்
    கண்டமாநகர்ச் சிற்பநலங்களை
நிலையிலே உயர் வீணைக்கலையதன்
    நீள்திறஞ்சொல ஏனோமறக்கிறீர்?

அழகுதேடிய ராவணன் ஆங்கே ஓர்
    அழகுமாளிகை தன்னைஅமைத்தனன்.
அழகுதேடிய ராவணன் ஆங்கெலாம்
    அழகுடைப்பொருள் கொண்டு குவித்தனன்.
அழகு தேடிய ராவணன் நாடொறும்
    ஆழ்ந்து மாந்தினன் வீணைஇசையினை.
அழகுமாளிகை அன்னவன் நெஞ்சகம்;
    அழகுயாவும் அவன் சிறைப்பட்டவே.

அழகினைத் தொழுதன்னதையே மதித்
தன்னதைப்படைத் தன்னதையே சுவைத்
திளகிநின்ற இதயப் புலத்திலே
எங்குமோடி ஓர் பாசம் முளைக்குமாம்!
தொழநினைந்திடில் ஈசனின் பூசனை!
தோயநின்றிடில் வீணையின் இன்னிசை!
விழிநிறைத்திடும் ஆசையெனும் விதை
விட்டதே அந்தச் சீதைஎனும்முளை.

ஈசனே இசையால் இளகிஅவ்வி
ராவணற்கு அருள் செய்தனராம் எனில்
நீசமானிடன் வீணை இசையினால்
நெஞ்சிளகுதல் என்ன புதினமோ?
பேசுகின்ற கலைகளின் தோய்வினால்
பேர்த்தும் அன்னவன் நெஞ்சம் நெகிழ்ந்தது.
ஆசையானதோர் வெள்ளம் உயர்ந்திட
அக்குளத்தொரு சீதை மலர்ந்தது.

எங்குமே எழில் அள்ளிப் பருகிய
இராவணன்தன் இதயப் புலத்திலே
தங்கையே முயன்றுசை விதைத்திடில்
தமிழநெஞ்சம் அதனைப் பொறுக்குமோ?
மங்கை கொண்ட அழகைப் புனைந்தவள்
மற்றவள் நிலையாவுமே தேரமுன்
'அங்கிருந்தனள் போ' என ஏவினாள்;
அழகு கண்டிட அண்ணன் பறந்தனன்.

மூக்கரித்து கொடுமைபுரிந்ததும்
முன்னரந்த இலக்குவன் தன்முலை
போக்கிடச்சிறு வேலைகள் செய்ததும்
போயொளிக்க அவள் எழிலே பெரிது
ஆக்கி ஆக்கி அளித்த முறையிலே
அண்ணனவன் தன்னை மறந்தனன்.
நாக்கினால் அவள் நஞ்சினை வார்த்திட
நல்ல ராவணன் மாந்தி வெறித்தனன்.

'அழகினுக்கழகானவை கண்டிடில்
ஆற்றவல்லவர் யார்' எனக் கேட்பவர்
அழகினைத் தமிழ் செய்த தமிழ்க்கவி
அரசர் - கம்பர் எனவும் அறிந்தபின்
அழகுகண்டிடுபோது மயங்குதல்
ஆடவர்க்கழகோ எனக் கேட்கிறீர்!
அழகினைத் தொழும் மென்மை உளத்திலே
ஆசை மூளின் அணைத்திடல் கூடுமோ?

அந்த ஆசையை எண்ணி உருகலும்
ஆற்றலாளன் இராவணற்கு ஏற்குமோ
வந்த ஆசையில் ஏகினன்; மாமனும்
வாசலை எளிதாக்கி மறைந்தனன்!
தந்த ஆசை நடத்திடப் போனவன்
தமிழென ஒரு சீதையைக் கண்டனன்!
சுந்தரத்தின் விலையை அறிந்தவன்
சொக்கினன் எனிற் குற்றமோ சொல்கிறீர்!

மாட்சி ஓங்கு வரங்கள் அணிந்தவன்
மங்கையைப் பிடித்தல்லவை செய்திலன்
நீட்சியான அழகுசுவைத்திடும்
நீர்மையானதை நீள உணர்ந்தவன்
காட்சி ஓவியம் என்ன மதித்தனன்;
கைபடாது அதைக் கொண்டு பறந்தனன்!
சூட்சி செய்தவன் மாமன்! இராவணன்
சுந்தரத்தை அச் சோலையமர்த்தினன்.

பேசுகின்ற அழகுடன் நாளுமே
பேசுமாறு மலர்வனம் போயினன்!
ஏசினுள் அவளே னும் இருந்திலன்!
ஏந்திழைக்கும் கொடுமை புரிந்திலன்!
ஆசையால் அழகைச் சிறை செய்தனன்!
ஆயினும் அதற்கு அல்லவை செய்திலன்!
கூசிடாது அவள் காலினும் வீழ்ந்தனன்!
கோபமேன் அதற்காக இரங்குவீர்!

'செம்மை நின்றவழியிதுபார்' எனச்
செப்புதற்கு வசிட்டர் இருந்திலர்!
இம்மையில் அதன் தீமை உணர்த்தி
இடித்துரைக்கும் அமைச்சர் இருந்திலர்!
தம்மை ஒப்பவர் எங்கும்இலை எனத்
தருக்கிநின்ற அரக்கர் தலைமகன்
மும்மையும் கலைமூழ்கிய நெஞ்சினன்
மூளுமாசையில் மீளுதல் கூடுமோ?

கூர் எரியைக் குரங்கு கொளுத்தவும்
கொண்டகாதல் மலரைப் பறித்திடப்
போர் எனச்சிறு மானிடர் துள்ளவும்
பொறுமை என்றிரு தோள்கள் கிடக்குமோ?
வீரனும் விளையாட எழுந்தனன்.
வீடணன் சிறு வேலைபுரிந்திட
நேர்எழுந்த இராவணன் மாளினும்
நெஞ்சில் அன்னவள் நேயம் நிலைத்ததே.

'பேரெழிற்கு மனத்தைக் கொடுத்தவன்
பித்தனும்' எனில் நாளும் அழகினைச்
சீர்தளைக்குட் சிறைப்பிடித்தே தமிழ்
செய்யும் எங்கள் கவிக்குலம் ஒப்புமோ?
'ஆர்தடுத்தும் அழகைச் சிறைசெய்வீர்
அதையெதிர்க்க அறமும் சமுகமும்
போர்தொடுத்திடு போதும் பணிந்திடீர்
புலவரே' எனச் சொல்லும் அவன்கதை.

அன்னராவணன் ஆணைவழிமொழிந்து
அழகினைத்தமிழ் செய்திடும் ஆவலில்
பின்னவன் இவன் உம்மிடை வந்தனன்,
பேரழகைப் பிடித்திடும் போதிலே
என்னைவாட்டும் இலக்கணம் ஆயினும்
எழில்மறந்த அறம் பொருளாயினும்
இன்னலென்று பணிந்து கிடப்பனோ?
ஈங்கெனக்குயிர் போகினும் போகவே.

நேரறிந்த தமிழ்பெறு நெஞ்சினீர்!
நீருமந்த இராவண அண்ணலைச்
சோரன் என்று பழித்திடல் செய்திடீர்.
சொல்லிலே பல மாலைபுனைகுவீர்.
ஈரநெஞ்சம் இருப்பவர்க் கோருரை;
இராவணன் நிலைக்காக இரங்குவீர்.
நேரம் என்னை உதைத்திடப் போகிறேன்;
நெஞ்சிருப்பவர் பாவைநினைக்கவே.

வானொலி

# வள்ளுவம்

கவிச்சித்திரம்

குரல் 1. அந்தநாள்! தமிழ்நாடு கிழக்கினில்
ஆண்மை காட்டிப் புகழில் அமர்ந்தநாள்!
சொந்தமான அரசும் இருந்த நாள்!
சோழபாண்டிய வீரம் விரிந்த நாள்!
வந்து போன வணிகக் கலங்களில்
வாகையோடு எம் அகிலும் மணந்தநாள்!
தந்த ரோம, கிரேக்கப் பணங்களால்
தமிழகத்தின் தரைகள் மறைந்த நாள்

(கப்பல்கள் வந்து போகும் ஒலி,
நாணயங்கள் விழும்பொழுது செய்யும் ஒலி)

குரல் 2. ஆரியப் படை ஒன்று இவண் வந்ததும்
ஆற்றலோடு நெடுஞ்செழியன் அந்த
மோரியப் படை தன்னைக் கடந்ததும்
முன்பு ஒருங்கு அவன் ஐவரை வென்றதும்
சேரவீரன் செங் குட்டுவன், கண்ணகி
சிலையெடுக்க வடவரை வென்றதும்
நேரிலாக் கரிகாலன் இமயமாம்
நெற்றியிற் தன் புலியைப் பொறித்ததும்

குரல் 1. (தொடர்ந்து) அந்தநாள்! தமிழ்நாடு கிழக்கினில்
ஆண்மை காட்டிப் புகழில் அமர்ந்தநாள்,

(போர்ப்பூசல், வெற்றியொலி பின்னணியில் ஒலித்தல்)

குரல் 2. காவிரிக்கண் புதுப்புனல் பாய்ந்தது;
கழனியெங்கும் கதிர்க்குலம் சாய்ந்தது!
பாவிரிக்கும் புலவர்கள் உய்ந்திடப்
பாடி அத்தமிழ் வையை தவழ்ந்தது!
நாவிரிக்கும் தமிழ்க்கவி தேனென
நாட்டை ஆள்வோர் நயந்துகிடந்தனர்!
காவலர்க்கும் கவிதை எழுதிடும்
காதல் தூண்ட எழுதி மகிழ்ந்தனர்.

குரல் 1. யாதுமூர் எனும் எண்ணம் பிறக்கவும்
யாது மூரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா!
(என்ற அடிகள் தடித்த குரலில் பின்னணியிற் கேட்கின்றன )
யாவரோடும் இணக்கம் பிறக்கவும்
காதலோடே பொருள்நிலை ஓங்கவும்
காண வந்த வடவரை எம்மவர்
தீதிலாத கருத்துடன் ஏற்றனர்!
திட்ட மிட்டு நுழைந்த வடவரோ
வேதம் உள்ளது எம் ஆரியம் என்றனர்
வேறும் இவ்வித மேன்மை உரைத்தனர்!

காதல் இல்லை எனினும் புதியதைக்
கண்ட போது அதைக் கொள்ளல் இயற்கையே!
ஆதலாற் தமிழ் வாழ்வில் வடவரின்
அயன்மையான மரபு புகுந்தது!
சாதி வேற்றுமை இங்கு கிளம்பவும்
சால்பு பற்பல வாழ்வில் மறையவும்
ஏது யாது எனக்கண்ட எம் சான்றவர்
இப்புதுநிலை போக்க எழுந்தனர்!

குரல் 2. எம்மவர்க்கொரு வேதம் இதுவரை
இல்லை என்ற குறையினை நீக்கவும்
அம்மைபோல் அதை ஊட்டி வளர்க்கவும்
அயன்மையான மரபினை நீக்கவும்
தம் அரிய பொருள் அறம் என்பதைத்
தமிழருக்கு வகுத்துக் கொடுக்கவும்
செம்மை சான்ற அறிஞர் பெருமகன்
செந்தமிழ்க் குறள் வள்ளுவன் தோன்றினன்!

(வீணை ஒலி மங்கலமாக ஒலிக்கிறது.)

ஒரு குரல் பண்ணோடு பாடுகிறது
தெய்வத்தமிழ்மறை செய்தவன் - அதிற்
தீந்தமிழின் சுவை பெய்தவன் - அந்த
ஐயன் புகழ்நிறை வள்ளுவன் - அவன்
ஆக்கிய கொள்கைகள் வள்ளுவம்!

(மீண்டும் வீணை ஒலி அப்பாட்டை இசைத்துத் தேய்கிறது.)

குரல் 1. தற்புதுமை வாய்ந்த தமிழக் கருத்துகளை
அற்புதமாய்க் கோத்த அதனைக் குறள் என்போம்

குரல் 2. அந்தக் குறளை அலசிப் பிழியுங்கால்
வந்த கொள்கைப் பிழிவை வள்ளுவம் என்று
ஓதிடலாம்

குரல் 1. வள்ளுவத்தின் தன்மை வகுக்கப் பெருகுவதால்
உள்ளே நுழையாது, அவ்வுயர்ந்த தமிழ்மறையைப்
பக்கத் திருந்தேநாம் பார்த்தும், உலகத்தில்
ஒக்கத் திகழுகிற கொள்கைகளை ஒப்பிட்டுப்
பார்த்தும் சிலசொல்லிப் போதல் பொருந்துவதே.

குரல் 2. எல்லா 'நெறியும் இது எங்கள் சொந்தம்' எனச்
சொல்ல முனைதல் குறளின் தனிச் சிறப்பாம்!

குரல் 1. இந்நிலையைக் கொஞ்சம் இறுக்கமாய்ப் பார்த்திடு
வோம்.

குரல் 2. முன்நாளில் தம்நெறிக்காய் மோதினர் மாந்தரெலாம்
பின்நாளில் இஃது குறைய, முனைத்திருந்த
கூர்கள் மழுங்கிக் குழைய, பலநெறிக்கும்
வேர் ஒன்றே என்று விளங்கப் பழகுகிறோம்
நண்பர்கள் ஆக!

குரல் 1. நமது நாட் செய்தி இது!

குரல் 2. 'கண்டு முட்டுக் கேட்டுமுட்டுக்' காலம் மலையேறப்
பண்பட்ட நாங்கள் பழகுகிறோம் ஒன்றாக.

குரல் 1. எம்மதந்தான் யாதோ? எழுதிவிட்டு நாம் மறைந்தால்
தம்மதந்தான் என்றே தடுமாறுவார் பின்னோர்.

குரல் 2. மற்றவர் வாழ மனம் பொருந்தி நஞ்சுண்டார்
நெற்றிக் கண் கொண்ட நிமலர்!

குரல் 1. உலகோரின்
பாவம் பொறுப்பதற்காய்ப் பாரச் சிலுவையிலே
சாவுண்டார் யேசு!

குரல் 2. சரி இரண்டும் என்கின்ற
கொள்கை பிறந்ததினாற் கூடுகிறோம் ஒன்றாக.
வள்ளுவம் கூறும் சமயம் இதுபோன்ற
பண்பாட்டின் உச்சி! பரந்த மனச் செம்மையிலே
கண்டெடுத்த முத்து!

குரல் 1. கடவுள் நெறிமட்டுமல்ல
எந்தப் பொருளும் இதுபோன்றே காணுகிறோம்.

குரல் 2. பெண்என்ற அந்தப் பெரிய சுவைப்பொருளைக்
கண்ணுற்ற காலே, கலைத்துப்போய் நெஞ்சங்கள்
உண்ண முனையின் ஒழுக்கம் இழுக்குமெனக்
கண்ட பெரியோர் கடுஞ் சிறைகள் செய்து வைத்தார்!

குரல் 1. வீட்டில் இருந்து வெளியே வருங்காலே
நீட்டுடைகள் மாட்டி நெடுமூச்சுக்கு ஓட்டை விட்டார்!
காட்டுமனப் பாங்கு கழிந்தால் இது போன்ற
நீட்டுடைக்கும் பூட்டுக்கும் நிச்சயமாய் வேலைஇல்லை.

குரல் 2. 'பாட்டுப் பொருளாய் இருந்த நிலைதுறந்து
நீட்டுக் கலைகள் நிகழ்த்தப்போம் பெண்ணுளே!
பூட்டுப்போடு உன்நெஞ்சில்! போதும் அது' என்று இவ்வாறு
செல்வியர்க்குச் சொல்லுகிறார்!

**'சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை''**
**(என்ற குறள் தடித்த குரலாகப் பின்னணியிற் கேட்கிறது.)**

குரல் 1. சீர்பூத்த பண்பாட்டை
நல்ல நடுவழியை நாம் கண்டோம் வள்ளுவத்தில்.

**(பொருள் முடிவைக் காட்ட**
**வீணை இசை)**

குரல் 2. எல்லாப் பொருளும் இதன்பால் உளஎன்று
வல்லார் மொழிவார்!

குரல் 1. வழிமொழிதல் வீண் எனினும்
ஒன்று சொல்லல் வேண்டும்!

குரல் 2. உளநூல் எனும்பெயரில்
இன்றைக் கெழுந்து நிலவும் கருத்துகளை
அன்றைக்கே அந்த அருமைக் குறள் முனிவர்
வள்ளுவத்தில் வைத்தார்!

குரல் 1. வரலாறு கூறுது!
உள்ளத்தின் உண்மை உரைத்துள்ளார் என்றுமட்டும்
சுட்டி அமைவோம்!

**''வெள்ளத் தனைய மலர்நீட்டம்! மாந்தர் தம்**
**உள்ளத் தனைய துயர்வு!**
**''மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்.....''**

நுண்ணிய நூல்பல கற்பினும் தத்தம்
உண்மை அறிவே மிகும்.
மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற்பவை''
(இவை பின்னணியாகத் தடித்த குரலில் ஒலிக்கின்றன.)

குரல் 1. உள்ளத்தின் உண்மை உரைத்துள்ளார் என்றுமட்டும்
சுட்டி அமைவோம்!

குரல் 2. சுவையான காதலினைக்
கூறாது செல்லல் கொடுமைதான், ஆதலினால்
காதலையும் சொன்னார் கவி!

(வீணை இசைத்துளிகள்!
இன்பப் பண்
துன்பமாக மாறுதல்.)

ஆண்குரல் (அ) துன்பத்திற் தோய்த்தெடுத்த தோற்றமுடன் நிற்கின்
றாய்
என்ன நிகழ்ந்ததடா! அன்பா அருள் உனக்கும்?

ஆண்குரல் (ஆ) நோய்ப்பட்டு வாடுகிறேன்! நோய்க்கு மருந்து அறியேன்!

நோயா? மருந்தில்லா நோயா? புதுமையடா!
போய்ப்படுத்துத் தூங்கு உடனே போய்விடுமே உன்
அயர்வு!

''கண்ணுறக்கம் இல்லாக் கடுநோய்''
''ஓ! காதலதோ?''
''பெண்ஒருத்தி என்னைப் பெருவிழியாற் குத்தி
விட்டாள்''

''கண்பட்ட நோயா? மருத்துவராய்க் கல்விகற்றும்
நோய்க்கு மருந்தில்லை என்று புலம்புவது
வாய்க்கவில்லை!''

''ஈதோர் புதிய வருத்தமடா!
வார்க்கின்றாள் பார்வையினால் காதல் வருத்தத்தை!
பார்க்கின்றாள் மீண்டும் அந்தப் பார்வையினால்
நோய்க்கு
மருந்தும் அளிப்பாள்! மலர்விழியில் நோக்கு இரண்டு!
ஆம்!

இருநோக்கிவள் உண்கண் உள்ளது; ஒருநோக்கு
நோய்நோக்கு! மற்றன்நோய் மருந்து!
(மேற்படி குறள் பின்னணி ஒலியில் கேட்கிறது.)

நான் பார்க்கும் வேளையிலே நாணித்நிலதைப்
பார்ப்பாள்!

தான் பார்த்துப் புன்னகைப்பாள்! நான் நோக்கா
நேரத்தில்
''உண்மையாய் உந்தன் உணர்வில் வருத்தந்தான்
பெண்மையால் உன்னையந்தப் பேதை ..''
''ஆம்சுட்டுவிட்டாள்''
''என்ன நெருப்பா? பின்ஏன்கிட்டப்போனாய் நீ!''
''அன்பா அதுவோர் புதுமை நெருப்பு!'
''அருள், டேய்!
என்ன புதுமை?''
''இரடா! நெருப்பெல்லாம்
கிட்டினாற் சுட்டு, அங்கு அகன்றாற் குளிர்ந்துவிடும்.
வட்டவிழி கொண்டு வந்தாள் வைத்திருக்கும்
அந்நெருப்போ
கிட்டிய போதே குளிரும்! பிரிந்தாலோ
சுட்டுவிடும்! ஆமாம் பிரிவுத் துயர் தருவாள்!

**''நீங்கின் தெறூஉம்! குறுகுங்காற் தண் என்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள்'**

நண்பன் ''இந்த நெருப்பை இவள் எங்கு பெற்றாளோ?
சுந்தரியின் அன்பைச் சுவையாகச் சொல்லிவிட்டாய்
அந்த வருத்தத்தின் ஆரம்பம் தன்மை ஏதோ

''காலை அரும்பும் பகல் எல்லாம் மொட்டாகி
மாலையிலே பூத்து விரிந்து வருத்திவிடும்''
**காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி**
**மாலை மலரும் இந் நோய்.**

நண்பன் ''என்று இவ்வாறாக
பாக்களே ஆக்கப் பழக்கிவிட்ட அப்பெண்ணின்
நோக்கு இரண்டாம் என்றாய் ....''
''நொசியும் இடையுடையாள்
**அனிச்சம்பூக் கால்களையாள்! பெய்தாள்! நுசுப்பிற்கு**
**நல்ல படா பறை!''**

நண். ''ஐயோ பாவந்தான்.
மெல்லிய நாரி - இடை! தண்டோடு பூத்தாங்க
வல்லமை இன்றி முறிந்துவிடும் என்கின்றாய்!
நல்லாள் உன்மீதுமே நல்லன்புடையாளோ?
''என்னநீ கேட்டாய்!''
''ஏன் கோபம் வேண்டாம் சொல்.''
''நேற்றோர் சிறிய நிகழ்ச்சி! அதிகாலை

ஆற்றுக் குளிர்! பனிதான். அதனால் அவள் பணிப்பெண்
சூடாகத் தேனீர் சுவைக்கக் கொடுக்கின்றாள்.

(வீணை ஒலி வேறு காட்சியைப் புலப்படுத்துகிறது.)

தலைவி: கூடாது! கூடாது! நான் குடிக்கக் கூடாது!
போடி! எடுத்துப்போ! போடீ இது வேண்டாம்!
குளிராய் எதுவும் கொடு! போ!

தோழி: ஏன் அம்மா!

தலைவி: பழிநடக்கும்! ஏடி பணிப்பெண்ணே! தூக்கு.

தோழி: புனிதா! எனக்குப் புதினமாய்த் தோன்றும்!
கனிவாக நாளும் அதி காலையிலே நான் கொடுக்கும்
சூடான பானம் சுவைக்கின்ற தாங்கள் இன்று
போடி என்றீர் நான் இப் புதுமையினைத் தங்களது
அம்மா விடத்தில் அறிவிக்கப் போகின்றேன்.

தலைவி: சும்மா இரடிநீ! சொல்லுகிறேன் காரணத்தை.
சத்தியமாய் அம்மாபாற் சொல்லாதே!

தோழி: சத்தியமாய்
இத்தனை பொல்லாத இரகசியமா அம்மா

தலைவி: சத்தம் போடாதே! சரிநான் உரைக்கின்றேன்.
வெட்கம் வருகிறதே!

தோழி: விட்டுவிட்டுச் சொல்லுங்கோ

தலைவி: என்நெஞ்சில் நேற்றோர் இளையவரை ஏற்றி வைத்தேன்

தோழி: என்ன?

தலைவி: உஸ்? சத்தம்! இதைநான் குடித்துவிட்டால்

நெஞ்சிற் குடியிருக்கும் நேயருக்குச் சுட்டுவிடும்
அஞ்சினேன் ஆகையினால்! அன்னைக்குச் சொல்லாதே.
**'நெஞ்சத்தாற் காதல் அவராக வெய்துண்டல்**
**அஞ்சுதும் வேபாக்கு அறிந்து'**

தலைவி: அஞ்சினேன்! நீ இதனை அன்னைக்குச் சொல்லாதே

தோழி: அம்மாடி! அம்மா அசல்சிரிப்பு!

தலைவி: போதுமடி

ஒலிப்பாடு சும்மா சிரிக்காதே! சொல்லித் திரியாதே.

(வீணை ஒலி நிகழ்ச்சி முடிவைக்காட்டுகிறது.)

தலைவன்: கேட்டாயா! என்னவளின் அன்பின் கிளர்ச்சியினை.

நண்பன்: பாட்டாலே பேசிப் பாராட்டல் தக்கதுதான்.
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.
உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பாவைக்
கமிழ்தின் இயன்றன தோள்.
கருமணியிற் பாவாய் நீ போதாய் நாம் வீழும்
திரு நுதலுக் கில்லை இடம்.

(பழையபடி வீணை இசைத்துளி — தேய்தல்.)

குரல் 1. ஆனவகை காமத்துப் பாலிற் குறள் சொல்லும்
தேனன காதல் தென்தமிழர் சொந்தநெறி.

குரல் 2. நைந்த தமிழன் நலியுமுன் தன்னுடைய
சொந்த நிலத்தில் சுவைக்குத் தகப்பிரித்த
ஐந்திணையிற் கண்ட அழகுத் தமிழ்க்காதல்.

குரல் 1. தன்மனையில் இன்பம் பிறர் மனையிலும் இன்பம்
என்னும் முறையில் இயலும் வடமொழிநூல்
பார்த்து எழுதினர் என்னல் பச்சைப்பொய்.

குரல் 2. அச்சமின்றி
ஈரடியில் இன்ப இயலெல்லாம் பாடியவன்
ஓரடியும் ஆபாச ஓரம் மிதிக்காது
பச்சைத் தமிழ்க்காதல் பாடினன்! அன்பர்களே
மிச்சத்தைச் சொல்லல் மிகை.

(வீணை ஒலி வேறு செய்தித் தொடக்கத்துக்கு)

குரல் 1. வள்ளுவர் கூறும் அரசுக்கு நாம் வருவோம்

குரல் 2. மூவேந்தர் ஆட்சி முறைசிறந்த அந்நாளிற்
பாவேய்ந்த வள்ளுவனர் பார்த்திருந்த ஆட்சிமுறை

குரல் 1. ஒற்றையவர் ஆட்சி என்பேன்!

குரல் 2. ஒப்புகிறேன்; ஆனாலும்
சற்றுத் திருத்தம் அணைத்த வழியே.
இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்' என்ற வள்ளுவத்தில்
கொள்ளக் கிடப்பதென்ன? கோலேந்தி மந்திரத்தைத்
தள்ளி நடந் திட்டால் தானே அழிவன் எனும்
உள்ளத் தெளிவு அங்கு உணர்த்தப் படுகிறது.

குரல் 1. மந்திரம் போன்ற மக்கள் அவைக் கருத்தை
எந்த ஒரு வேந்தனுமே ஏற்கவிதிக்கிறதோ?

குரல் 2. ஆளும் அரசன் அமைச்சர் அவைக்கருத்தை
நாளும் அணைத்தல் கடன்என்று சொல்கிறது. ஆம்

குரல் 1. வாளை எடுத்துப் பிடித்துப் புகழ்வளர்த்த
நாளிலே இஃதை நவில்கிறதே வள்ளுவமும்.

குரல் 2. 'அல்லற்பட்டு ஆற்ருதே அழுகின்ற கண்ணீர் தான்
செல்வத்தைத் தேய்க்கும்! அரசை அழிக்கின்ற
போர்க்கருவி' என்று புகல்கின்ற வள்ளுவத்தில்
ஆர்க்கின்ற மக்கள் வலி ஆழத் தெரிகிறதே

''அல்லற்பட் டாற்ரு தழுகின்ற கண்ணீரே
செல்வத்தைத் தேய்க்கும் படை''

குரல் 1. ''மந்திரம் என்றும் மக்கள் கருத்தென்றும்
இந்த விதமாக இன்றுள்ள ஆட்சிஇயற்
பண்பு விளங்குவதைப் பார்க்கின்ருேம். கேட்கின்றேன்
வள்ளுவர் கூறும் அரசு முடியரசா?
உள்ளபடி சொன்னுல்

குரல் 2. உண்டு குடியரசும்.

குரல் 1. வாதங்கள் இந்த வையகத்தில் ஏராளம்!

குரல் 2. பேதங்கள் இந்த வழியே பிறந்ததினுல்
ஓலங்கள் சண்டைவகை ஒப்பாரி பற்பலவாய்

குரல் 1. ஞாலத்தைச் சுற்றி வளைக்கின்ற காலமிது.

குரல் 2. வள்ளுவம் என்கின்ற வாதத்தில் உண்மையிலே
உள்ள சிறப்போ உதுபோன்ற சண்டையின்றி
வெம்மையின்றி வீச்சின்றி வேண்டாத கூச்சலின்றி
கொள்கைகளின் வேராய்க், குளிர்ந்த மதியுரையாய்
நின்று விளங்குவதே!

குரல் 1. நேயர்பலர் மாக்சீயம்
நன்றென்பார்! ''எல்லார்க்கும் நன்மை பொதுவுடமை
ஒன்ருய் உழைப்போம் நாம். ஊதியத்தைப்
[பங்கிடுவோம்''
என்ருல் இதனை எதிர்க்கப் புகுந்திடவும்
உள்ளார் முதலாளி வாதத்தை ஏத்துபவர்!
வள்ளுவத்தை இப்படியாய் வைபவரைக் கண்டோமே?

குரல் 2. கள்ள வழிகளிலே சேர்த்தோன் களித்திருக்க
உள்ள படியுழைத்தோன் உண்ணஉண வின்றி
இரக்கும் நிலையென்ருல்,

குரல் 1. இங்குயார் ஏற்பார்?

குரல் 2. ''பரந்து கெடுக உலகைப் படைத்தவனும்''

குரல் 1. என்றுதான் சொல்லிடுவார்! இங்கு பொதுவுடமை
நன்றென்பார்! வள்ளுவமும் ஈதே நவில்கிறது!

'இரந்தும் உயிர்வாழ வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றியான்'

குரல் 2. எல்லோரும் ஒப்பாய் இருந்தால் சுவையுண்டா?
இல்லை எனற்கும் ஒருவன்! அவன் உணர்ச்சி

ஓடிச் சுரக்க, உதவி யளிப்பவனைத்
தேடி இரக்க, கசியும் இதயத்தான்
வாரி வழங்க, இந்த வாழ்க்கை உணர்ச்சி எனும்
சீரழகைப் பெற்றுச் சிறக்கும்; இலையேல்
மரப்பாவை ஓர் குறையும் இன்றி அசை தல்போல்
இருக்கும் இவ்வாழ்க்கை எனச் சொல்லல் இயல்
[பன்றோ?

'இரப்பாரை இல்லா ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை தான் அசைந் தற்று'
வள்ளுவம் இந்தக் கருத்தை வரவேற்கிறது

குரல் 1 கொள்ளத் தகைய முதலாளி வாதமிது!

(வீணைஒலி - செய்தி முடிவு.)

குரல் 2. வள்ளுவம் தன்கருத்தை வந்து எடுத்துக் கூறுகையில்
கொள்ளும் ஒரு பண்பாட்டைக் கூறத்தான் வேண்டும்

குரல் 1. என்ன?

குரல் 2. எல்லார்க்கும் எல்லாம் உளதான ஓர் நிறைவில்
கல்வி அறிவு கதித்த தமிழருக்குக்
கூறவந்த காரணத்தாற் கொண்டாடும் பான்மையிலே
வேறு ஒப்புக் காண முடியாத நாகரிகம்
பேணி உரைக்கும் குறள்.

குரல் 1. 'மெய்ஞ்ஞானம் கொண்டோர் நாம் மீதி உலகத்தார்
அஞ்ஞானம் கொண்டோர்' என இருந்த யூதருக்கு
தேவனின் பாதை தெரிக்கவந்த யேசுவுக்கு
யாவருமே கேளிர் எனும் நோக்கினர்பால் பேசவந்த
வள்ளுவருக் குள்ள இந்த வாய்ப்போ இருக்கவில்லை.

குரல் 2. எல்லோரும் ஒன்று என்ற நோக்கு, இங்கு பூக்குங்கால்
வள்ளுவத்தின் வாழ்வு சிறக்கும்.

குரல் 1. பண்ணுற்ற நெஞ்சகமும் பண்பாடும் பல்கலையும்
எண்ணச் சிறப்பும் இருக்கின்ற ஓர் வாழ்வில்
வேதம் ஒன்று உண் டென்றால், வியக்கின்ற நீதி என்றால்
பேதம் அகன்ற பெருவாதம் ஒன்றென்றால்
ஐயமின்றி அஃது குறள்முனிவன் வள்ளுவமே.

குரல் 2. மெய்யறிந்து கற்போம் அதை.

(தெய்வத் தமிழ் மறை செய்தவன்
என்ற பாடல். இசைக்கப்படல்
இசைக்கருவிவிகளில் ஒலிக்கோலம்
சிறிது சிறிதாகத் தேய்கிறது.)

# மாதவி மகளின் காதல்

பூசனைக் குரிய புதுமலர் எடுத்தப்
பூங்கொடி தொடுத்திடும் பொழுது
தூசியாய், மனத்தே தந்தைதாய் அடைந்த
துயர்விழக், கண்கள்நீர் பெருக.
மாசுணும் இந்த மலர்கள் என்மகளே!
மதுமலர்ச் சோலைநீ புகுந்து
வாசநன் மலர்கள் பறித்துவா என்றாள்
மாதவி; மகள் உடன் நடந்தாள்.

தனிவழிச் சென்ற சுதமதி ஒருநாள்
தனக்கவண் நிகழ்ந்ததோர் தவிப்பைக்
கனிமொழிக் குரைத்துத் துணைஎன அணையக்
காரிகை மேகலை நடப்பாள்!
முனிவவள் உளத்திற் புதைந்துளதேனும்
மோகன உருவமோ புறத்தில்.
பனிமலர் ஒன்று தெருவழி நடந்தால்
பாடலைத் தவிர்க்குமோ வண்டு.

வண்டுகள் சுழன்று சுழன்றவள் கொண்ட
வனப்பினைப் பருகிய பொழுது
கொண்டதம் உணர்வு குலைந்திடக் குலைந்து
'கொடுமையே கொடுமையே இந்தக்
கண்டினைக் கசக்கும் தவத்தினிற் புதைத்த
தாயொரு கொடியள்' என்றார்த்தார்.
நண்டென விழிகள் நங்கையைக் கடித்தும்
நல்லவள்! தனிவழி நடந்தாள்.

மாதவிக் குழவி மலர்வனம் புகுந்து
மதுமலர் பறிக்கிறாள் மகிழ்ந்து.
தாதுகு சோலை, தவழ்இழந் தென்றல்
தமிழ்மனம், மலர்மணம், தனிமை!

காதல் மெல் லுணர்வு கதித்தெழ இவைகள்
காணுமே! ஆம்என்க் கூறிப்
பேதைமெல் லுணர்வைப் பேதமைப் படுத்தப்
பெரும்பரித் தேரொடும் புகுந்தான்,

நீளநீர் ஒழுகும் சோழநா டதனை
நாளை ஆள் ஊழுடை இளங்கோ.
வாழ்வுநீர் பருக வருகிறுன்; ஆயின்
வாயிலில் நிற்கிருள் ஒருத்தி!
குழலைத் தவிர்க்கச் சுதமதி 'கரும்பைச்'
சூழ்ச்சியாய்ப் பளிக்கறைப் புகுத்தி
நீளமாய் வென்ற நிம்மதியுடனே
நிமிர்கிருள்; ஆயினும் தோற்ருள்!

காதலைப் பிரிக்கச் சுதமதி பளிங்காற்
கட்டுவாள் சுவர்! அதாநிலைக்கும்?
சாதலை அணைத்துச் சரிந்தது நொடியில்.
சாற்றிடு மொழிகளே நுழையாப்
பாதையை அமைத்தாள்; பாவம் அம்மதிலைப்
பாய்ந்திடும் காதலின் வலியைப்
பேதையாள் உணராள்; பளிக்கறை உள்ளே
பெருகுதே காதலின் வெள்ளம்

'கார் அமர் கடம்பன், ஆ' என வியக்கக்
கழிற்றினை அடக்கிய வீரம்
'பார்' என விளங்கப் பார்த்திபன் நின்ருன்.
பளிக்கறைச் சுவர்களினூடே
பார்வைமுன் நடக்கப் பயந்த, தன் உள்ளம்
பதுங்கியே அன்னதைத் தொடர
மார்பகம் உயர மயங்கிய நிலையில்
மாதவிமகள் எதை உணர்ந்தாள்?

எதுஎனத் தெரியா இன்பநோய் இந்த
இளையவள் நெஞ்சிலே நுழையப்
புதுவுணர் வதிலே பூத்தமென் மொழியைப்
பார்த்திபன் செவியுரு வண்ணம்
சுதமதி தடுத்து வென்றனளேனும்
சுந்தரக் காதலுக் கந்தப்
புதுமனம் ஒன்றே போதுமென்றறியா
போகவே, மேகலை வென்ருள்!

பெண்கள் மேற் காதல் தீ தெனை வெளியே
பேசுவாள் சுதமதி; குமரன்
உண்கவே வந்த மாதவி மகளின்
உருவம் அப் பளிங்கிடைத் தெரிய
கண்களால் அந்தக் கவிதையைப் படித்தான்.
கையிடை அடக்கிடத் துடித்தும்
எண்ணிய தியற்ற இல்லேயோர் வாயில்
'இருக்கவே சற்று' என அகல்வான்.

''தூற்றினுன் தனேயே தொடர்ந்த தென் நெஞ்சம்
தூய்மைசேர் காதலென் றுலகம்
போற்றிடும் பொருளின் இயல்பிதோ'' என்றப்
பூங்கொடி வினவிடும் பாங்கு
காற்றெனை நெஞ்சில் வீசியே அகன்ற
காதலே உணர்த்திடும் பொழுதில்
ஏற்றல் எவ்வாருே இவ்விளம் பெண்ணுள்
இசைந்தனள் துறவினுக் கென்று.

கண்ணகி அடைந்த கையறு நிலேயைக்
காதலன் சாதலே நினேந்து
புண்ணுறு மனத்தில் 'இப்புவி வாழ்வே
போதும்' என் றழிகிற பேதை
தண்ணெனும் காதல் உணர்விடைப் பட்டுத்
தவிப்பதைப் பார்க்கிற பொழுது
விண்ணெனை எழுந்த காதலின் விசையை
விளங்குவோம்; பின்னர் ஏன் வெறுத்தாள்.

பொதுமகட் குலத்து மாதவி தனக்கோர்
பொருந்திய துணேவனேத் தெரிந்துஓர்
புதுமையை விளேத்தாள்; புதுமையில் விளேந்த
புதுமைஅப் புதுமையை விளேத்தல்
புதுமையா? இலேயே! இருப்பினும் தாயோ
பூவையர் யாவரும் பொருந்தும்
பொதுமையை, அதுதான் காதலேப் பறித்துப்
புதியதோர் நெறியில் ஏன் புதைத்தாள்.

வேசியர் குலத்து விலக்கென அமைந்தும்
விலகிட வில்லேயே தொல்லே!
ஆசைநாயகனின் தலேகளே அரிந்தது
அரசு. அதை அழித்திடப் புகுந்து

பேசிய உரையே பெருநெருப்பூட்டிப்
பெருமகள் கண்ணகி பெயர்த்தும்
நேசனை அழைத்து நெடுவழிச் சென்றாள்.
நிகழ்ச்சியால் மாதவி குலைந்தாள்!

புன்னைநன் நீழல் புதுமணற் பரப்பிற்
பொருந்திய துணையுடன் இருந்து
தன்னினைவனைத்தும் வீணையின் நரம்பைத்
தடவிடச் சொல்லிய காதல்
மின்னலாய் மறைந்த விந்தையை அந்த
மிகுகலை வல்லியோ அறிவாள்;
அன்னதோர் துயரைத் தன்மகள் அடையாது
அணையிட முயன்றனள்! அறமே.

கலைகளை வளர்க்கும் தொழிலிலே வெற்றி
காணினும் ஒருத்தனை மணந்து
குலமகள் நிகர்க்க வாழ்ந்திடும் வாய்ப்பைக்
கொடுத்திடாக் குலந்தமதென்ற
நிலையினைத் தனது வாழ்க்கையின் போக்கில்
நேரிலே உணர்ந்த அப் பாவை
கலைமகள் அனைய மகளது வாழ்விற்
கவலையை ஒளித்திட முயன்றாள்.

'பத்தினியான கண்ணகி மகளே
பாவை இம் மேகலை' என்று
சித்திராபதிக்கு மாதவி உரைத்துச்
'சிறப்புறும் அறநிலை தழுவல்
ஒத்ததே' என்றங் கோதிடும் வாதம்
உண்மையில், இல்லற வாழ்வு
கைத்திடக் கண்ட மாதவி, மகளின்
காதலைப் பறிப்பதைக் கூறும்.

முள்ளையே மிதியா முகைஇளம் பருவ
மோகனக் குமரிமே கலையாள்
கள்ளிலே வெறியர் மயங்குதல் போலக்
காதலில் மயங்கிய போதும்
'எள்ளினுள் அதனைப்பின்' எனும் போதில்
ஏற்றிட மறுக்குதே அறிவு.
தள்ளினுள் தனது காதலை வலிந்து
தாய்பொருட் டென்பதே தகுதி.

பற்றிய கொம்பு பறிந்திட விழுந்து
பதைக்குமம் மாதவிக் கொடி-தாய்!
கற்பழி பட்டுக் காதலை உவர்க்கும்
காரிகை சுதமதி - காவல்!
சொற்புக முடியாப் பளிக்கறை! இவற்றால்
சுந்தரக் காதலின் தடையை
அற்புதமாக அமைக்கிறார் சாத்தன்.
ஆயினும் வெற்றியா அடைந்தார்?

பாவையின் காதல் நிலையினை அறிந்து
படர்ந்திடும் மேல் எனப் பயந்து
தேவியே இறங்கி வந்தனள்; போகும்
தெருவழி தெரித்து அவர்ப்போக்கி
ஆவலாய் கேட்க நெடுங்கதை கூறி
அன்னவர் உறங்கிடச், சேமைத்
தீவிலே அந்த மாதவி மகளைத்
திட்டமிட் டிருத்திய நிகழ்வும்,

தெய்வமே பின்பு நேரிலே தோன்றித்
''தெரிகநீ அறத்தினின் வித்து.
பைய உன் உள்ளம் குமரனின்மீது
படர்ந்திடக் கண்டதால் எடுத்துத்
தையலே இங்குத் தந்தனன்; நீயோர்
தவத்தி'' என்றுணர்த்திய செயலும்
ஐயமே இல்லை பேதையின் காதல்
அணைத்திடும் முயற்சியின் தொடர்ச்சி.

அந்தரந் திரிய அரும்பசி களைய
ஆகிய புதுவுருக்கொள்ள
மந்திரம் பெற்றும் மறுபிறப் புணர்ந்தும்
மாதவ மடந்தையாய்த் திரிந்தும்
தந்திர மாக விஞ்சையன் உதய
குமரனைத் தாக்கிய உடனே
முந்திய காதல் வெளிப்படக் கதறி
முயங்கிட எழுவதைநினைமின்.

'காதலா' என்று கனிவுடன் அழைத்தக்
கனிமொழி கதறிடும் பொழுது
நோதலால், தாயின் ஆணையால், மறைந்த
நோய்வெளிப் படுதலைக் கண்டோம்!

பேதையாள் சொரிந்த பெருமழைக் கண்ணீர்
பெருமகன் குருதியோடோடிச்
சாதலை அணைத்த நிலையிலே புதிய
சாந்தியை அணைத்ததும் காணீர்.

ஆசைநற் கலையை வளர்த்திடும் குலமோ
அறந்துறந் தொழுக்கமார் வாழ்விற்
பாசி என் றமைந்த பயங்கர நிலையின்
பழுதினை அகற்றிடப் பெரியோர்
வீசிய கருவி மேகலை கொண்ட
மெல்லெனும் காதலும் விழுங்க
ஓசையும் இன்றி ஒழிந்ததே அந்த
உத்தமி கொண்ட நற் காதல்.

சாத்தனுர் படைத்த சத்திகள் அனைத்தும்
சாடிட இளையவள் காதல்
பூத்தஅந் நிலையிற் பொசுங்கிய தெனினும்
புத்தரின் தத்துவம் புகழக்
கோத்த அக் கதையிற் குமரியின் உணர்வைக்
கொடுமையாய்ப் பிடுங்கிய படியால்
நீத்தனள் காதல்; மேகலை கொண்ட
நெடுந்துயர்க்காதலை நினைப்போம்.

வானொலி

# இளங்கோத்துறவி

## பா நாடகம்

*

### நாடக மாந்தர்:

இளங்கோ

செங்குட்டுவன்

சேரலாதன்

நற்சோணை

அமைச்சர்

புலவோர்

வாயிலான்

## காட்சி 1

### (வஞ்சி அரண்மனையில்)

சேரலாதன்: நற்சோணை! என்ன இது?

நற்சோணை: நாயகரே! என் சொன்னீர்?

சேர. சொற்கள் சுருங்கியதேன்? சோதி முகம் வாடியதேன்
திங்கள் முகத்திற் திலகம் துறந்ததுமேன்?

நற். எங்கள் இள மைந்தர்.. ......

சேர. இவர்ப்பிரிந்த வேதனையோ

நற். தங்கள் கலக்கம் தவிர்த்திடுக என்தலைவா
இங்கிவர்கள் இல்லை! இதனால் இவளாலே
மங்கலங்கள் செய்து மகிழ முடியவில்லை.

சேர. எங்கு போனார்கள்? இகல்மேல்! அரசர்க்குப்
போரிற் பிரிதல் பொருந்தும் கடன்தானே?

நற். ஆர் சொன்னார் இல்லையென? ஆனாலும் அம்மக்கள்
அன்னை நான் மன்னவரே!

சேர. ஆகையினால் தேம்புகிறாய்
சின்னப் பெண் போலே! சிரிப்பு வருகிறது.
என்ன நினைத்தாய்? இளங்கோவும் குட்டுவனும்
மன்னர்கள்; சேர மரபில் பிறந்தவர்கள்.
முன்னவரைப் போலே முனைந்த செருக்களத்தில்
வாளால் உழுது வருவார்: அவர்களது
தாளிற் பகைவர் தருவார் திறைமுழுதும்!
நாளைக்கே செய்தி வரும் நம்மக்கள் வெற்றிகுறித்து

நற். இல்லையென்றால்?..சொல்லுங்கள் இல்லையென்றால்..

சேர. ஏன் இல்லை?
இல்லையில்லை அந்த இளங்கோக்கள் வென்றிடுவார்
செல்வர்களைப் பற்றியநற் செய்தி கிடைத்துவிடும்
வெல்வர்; உடனே விரையும் அருஞ்செய்தி.

நற். உண்மையா நாயகரே?

சேர. உண்மை! முழுதுண்மை
பெண்மையால் நீயும் பிதற்றல் தவிர்த்திடுக.

(வாயிலான் வந்து மகிழ்ச்சித் துடிப்புடன்)

வாயிலான். மன்னவா!

சேர. என்னடா?

வாயில். மகிழ்ச்சிச் செய்தி
மைந்தர்...........

சேர. ஆம் மைந்தர்

வாயில். மலையகப் போரில்...........

சேர. வந்ததா செய்தி? வழுத்துக உடனே!

வாயில். உங்கள் மக்கட்கு.........

நற். உயிருக்கென்ன?

சேர. நற்சோணை! சீ! நவிலடா உடனே!

வாயில். வெற்றி! வெற்றி! உயர்ந்ததோர் வெற்றி!

சேர. பெற்றனர் தானே! பெறுகநீ பரிசு.
நாடணி பெறுக.........

நற். நாளை வருவரோ?

சேர. போடீ! எங்கும் புதுமணல் பரப்புக
ஏடுகள் எங்கும் பாடல் எழுதுக
மங்கல முரசே எங்கும் முழங்குக
கோயில் புதிய கொடிகளைப் பெறுக
வாயில் எங்கும் நிறைகுடம் அமர்க
முரசம் அறைக வெற்றியை முழக்குக
பரிகரி யுடனே படரும் என் மக்களை
விஞ்சிய மகிழ்வில் விடியற் காலையில்
வஞ்சியார் சென்று வரவேற்கட்டும்!

வாயில். ஆகட்டும் மன்னவனே!

சேர. ஆமாம் உடன் சென்று
பாகட்டச் சொல்லு பழுத்த புலவர்களை!
சோகம் பறந்ததுவோ? தூரப் பறப்பானேன்
தோகை மயிலே! துடிபோல் இடையாளே!

நற். மைந்தர்கள் வீரம் மதுஅருத்தி விட்டதுவோ
இந்தக் கிழவர் இளைஞராய் மாறிவிட்டார்!
(நாணச் சிரிப்புடனே சேரலாதன்)

சேர. ஆமாம் ஒரு நாள் அடியேனும் வாலிபனே!
தேமாங்கனியே தெவிட்டாத் தமிழ்ப்பாட்டே!

நற். அந்த நாட் பாட்டை அழகாக ஓதுகிறீர்!
வந்தெவரும் கண்டால் வடிவாய்ச் சிரிப்பார்கள்!
(முன்நினைவு மீளச் சேரலாதன்)

சேர. அந்தநாள்......பாண்டியரின் ஆட்சிக்கு முற்றிடநான்
வந்தநாள்.. என்தோளில் வாள்பட்டுச் சாய்ந்துவிழ
சிந்தும் குருதியினைச் சின்னக்கையாற் துடைக்க
வந்தாள் ஒருத்தி! ஒரு வல்லிக் கொடிபோல!
ஒல்கி ஒசியும்இடை! ஒவென்று நான்கதற
நல்கினுள் காதல்! அந்த நாள்..அவள்..நான்
அப்பாடா!
(செல்லமாகச் சிணுங்கி)

நற். விந்தை அரசே விடுக இளம்நினைவை.
இந்தநே ரத்தில் இளைஞர் இவண்நுழைந்தால்

சேர. சீச்சீ எனதிளைய செல்வர் புதுவீரம்
பாய்ச்சிவிட நானும் பழநினைவின் வாய்ப்பட்டே
ஏதேதோ சொன்னேன்!

நற். இளைஞரே! தாம்மொழிந்த
காதல் உரைகள் கடக்கும் பரவையையும்

சேர. ஏதேது... நான்ஏதோ..

நற். இன்பமாய்...

சேர. இல்லைவிடு
நற்சோணை என்புதல்வர்

நற். நம்புதல்வர்

சேர. ஆம் அவர்கள்
வெற்றியினை இங்கே விளக்கப் பிறந்தவர்கள்!

நற். தம்மக்களைப் புகழல் தம்மைப் புகழ்வதுவே

சேர. செம்மை மறத்தைச் சிறப்பித்தல் வேண்டுவதே!
நம்கடமை நாளைக்கு நல்வரவு சொல்லிடுதல்.

நற். பின்னவற்கு நானே பெருஞ்சிறப்புச் செய்திடுவேன்

சேர. அன்புக்குரியவளே அப்படிநீ சொல்லாதே!
அன்புண்டு எனக்கும் அதிகமாய்ப் பின்னவனில்.
ஆனாலும் மூத்தவனே ஆட்சிக் குரியமகன்
வஞ்சிக் கரசன்! அதனால் அவனுடைய
நெஞ்சிற் கவலை நெருங்கல் பெருங்கெடுதி.

நற். தங்கள் கருத்துத் தகுதிதான் என்னவரே

சேர. எங்கள் அவையில் எழுகின்ற எல்லோரும்
செங்குட்டுவனைச் சிறப்பியா தெம்முடைய
பின்னவனைத் தானே பெருமைப் படுத்துகிறார்
என்னுடைய நெஞ்சையது என்றும் அரிக்கிறது.

நற். தோற்றமும் அன்னான் துடித்த மணிமொழியும்
வேற்றவர் பாலும் விருப்பம் விளைக்கிறது!

சேர. பாவீரம் கண்டாற் படைத்தானும் ஏங்கிடுவான்!
சாவை அறியாக் கலையின் முழுவடிவம்!

நற். சாவென்றேன் சொல்லுகிறீர்?

சேர. சார்ந்ததேர் மீண்டுமந்த
அச்சம்! அதைவிடுக.

நற். அன்புக் குரியவரே
இன்று வரையும் இருவரிடைப் பேதமில்லை.

சேர. நன்றுதான் ஆனாலும் நாளையிலை தென்னுமோ?

நற். ஒன்றுமே ஆகாதாம்; ஓங்கும் அவரன்பு!

சேர. சென்றதடி போது! எங்கள் செல்வர்களைக்
காணுதற்கு
இன்னும் ஒருநாள்!

நற். சீ இல்லை! ஒரே இரவு!

சேர. பாட்டுத் தமிழைப் படிப்போமா? அல்லதுயாழ்
மீட்டிக்களிப்போமா? மெல்லிசையைக்கேட்போமா?
கூத்துக் கலையைக் குதிகளிலே காண்போமா?

நற். பூத்த மகிழ்வில் பொலுபொலெனக் கொட்டுகிறீர்!
யாழும் பாழ்! கூத்தும்பாழ்! யாப்புத் தமிழும் பாழ்!
கேளுங்கள் சொல்லுவதை!

சேர. கேட்கிறேன்!

நற். மைந்தர்களை
நாளை விடியலிலே நானெழுந்து காண்பதற்காய்
வேளைக்கே நானும் விழிமூடப் போகின்றேன்!

சேர. சொல்வதையே செய்வேன்! சுவைகள் எவையெவையோ
எல்லாம் பாழ் என்ருய்! எனைமட்டும் விட்டு விட்டாய்

நற். செல்லக் கதைகள் சிலிர்க்கத் தெரிந்தவரே
மெல்லப்பேசுங்கள்!

சேர. மிகைஎன்ன கண்டுவிட்டாய்!

நற். மூப்பில் இளமை!

சேர. சரிவாயை மூடுகிறேன்!

—திரை—

## காட்சி 2

**அரச வீதி, புலவர் இருவர்.**
**போய்க்கொண்டே உரையாடுகிருர்கள்.**

புலவர் 1 எங்குச் செல்கிறீர் இயற்றமிழ் வல்லீர்?

புலவர் 2 அங்கே செல்கிறேன்!

புலவர் 1 அப்படியென்ருல்

புலவர் 2 சேரன் அவைதான் செழியரே தாங்கள்............

புலவர் 1 யாரும் இன்று வேற்றிடம் படர்வரோ
மன்னவை நோக்கியே!

புலவர் 2 ஆம் எம் மன்னவன்
இன்னும் இன்னும் சிறப்புகள் பெறுக.

புலவர் 1 உம்மை மறந்திதை உரைத்தீர் போலும்!
செம்மொழிப் புலவரே சேரன் பெற்றிட
இன்னும் என்ன சிறப்புண் டாமோ?
தன்னிலும் சிறந்த தனையரைப் பெற்ருன்.

புலவர் 2 மக்கள் இருவரும் மாணிக் கங்கள்

புலவர் 1 முன்னவன் இமய வரம்பனைப் போலே

வாளினை எடுத்து வடபுலம் படர்ந்து
தாளிலே பகைவர் முடிகளைக் காண்பான்
பின்னவன் இன்னும் பெரியவன் பாரும்
மன்னவன் அவையில் மதிவலான் அவனே
என்ன விதமாய் எடுத்துரைக் கின்றார்
தன்னுறு கருத்தைத்! தமிழை அவ் விளங்கோ
ஆளுந் திறத்திலே அண்ணனை வென்றான்!
வாளுந் தோற்குமே வனப்புறு கவிதைமுன்!
காவிரி மகளின் கவினெலாம் குவியப்
பாவொன் றிசைத்துளான் பச்சைத் தமிழில்!

புலவர் 2 ஆமாம் புலவரே! அரசன்தன் புதல்வரின்
நர்மம் விளங்க நல்விழா எடுத்தமை
எத்துணைப் பொருத்தம்?

புலவர் 1 இல்லைப் புலவரே
தன்னிரு மைந்தரின் தனிப்புகழ் கருதியே
என்னல் பிழைஇதை என்பதென் எண்ணம்
காட்டு வழியில் கடும்படை நடத்தலும்
பாட்டு வழியிற் சுவைப்படை நடத்தலும்
இப்பெரும் புவியில் என்றுமே நிலைக்கும்
அப்பெரும் புகழவர் யாரே யாயினும்
போற்றுதல் எவர்க்கும் பொருந்திய கடனும்.

புலவர் 2 ஏற்கிறேன் புலவரே இன்பச் சண்டை
இனியும் வேண்டாம்! ஈதோ மன்னவை
பனிமலர் மணமும் பட்டுக் கொடியும்
கனிமலர் ஈட்டமும் கண்கொளாக் காட்சி!

புலவர் 1 நினைவிலுள்ள இனிமையை எடுத்துப்
புனைவும் செய்துளார் பொருத்தம் பொருத்தம்!

புலவர் 2 போய்நாம் அமர்வோம் புலவர் பாங்கில்
வாயில் மன்னர் வரைவுரைக்கின்றான்

(தெருத்திரை இழுக்கப்பட மன்னவை தெரிகிறது)

வாயிலான் இமய வரம்பன் என்னும் சிறப்பினர்
தமையொப் பில்லாத் தாள்வலி உடையவர்
நெடும்படை நடத்திக் களம்பல கடந்த
நெடும் புகழ்ச் சேரலாத மன்னர்
நாளவை புகுவகை நண்ணி வந்தனர்.

(மன்னர் அரசவை நுழைகிறார். புலவர் ஒருவர் போற்றத் தொடங்கி)

புலவர் மன்னர் மன்னவா!

சேரலாதன் மாண்புறு புலவரே
என்னைப் புகழலை இனிமேல் தவிர்க.

புலவர் — புலவர் அரசரைப் புகழ்தல் மரபே!

சேர. — இலைன வில்லை இருக்கிறார் தகுந்த
மன்னவர் என்றேன்! மயக்கம் வேண்டாம்;
என்னிரு புதல்வர் இருப்பது தெரிந்தேன்.

(பெருமிதமாக-)

குட்டமெனும் நாடும் குடநாடும் கொண்டபுகழ்க்
குட்டுவனைப் பாடும்! குளிர்ந்தங்கு எழில் விளக்கும்
காவிரியைத் தண்ணென் தமிழ்ப்பாவில் ஓடவிட்ட
பாவலன்மேற் பாட்டிசைத்துப் பத்து முறைபாடும்!
தேவையில்லை இந்தப் பழையான் புகழ்பாடல்!

புலவர் — வீரம் விளைந்த வியன்புலத்தைப் பாடுகிறேன்.

சேர. — நேரம் கழிகிறது; நின்றீர் இருந்திடுக.
இன்று பெருநாள்; இனிய விழவினிலே
முன்நான் எடுத்து மொழிந்த முறைப்படியே
என்னுடைய மக்கள் இயல்வாழ்த்தி முன்னவற்குப்
பொன்னுலே போய்ச்சமைத்த போர்வாளும்,
பின்னவனுக்கு
இன்பமுடன் கூப்பிடுவீர் இந்தஇளங் கோவனுக்கு
நன்பரிசாய்... நன்பரிசாய்... நான்ஏன் மொழிந்
திடுவான்
என்ன கொடுத்தல் இயைபு

புலவர். — எம் இறையவனே
ஆற்றலுக் கேற்ற தளித்தல் தமிழ்மரபு!

சேர. — போற்றற் குரியதென நான்மொழிந்தாற் போதாது
கேட்டுக் கிறங்கிப் பிறகு மொழிந்திடுக
பாட்டுக் குரிய பரிசு!

புலவர். — வல்லான் இசையும்! அதனுல் அரசேநின்
செல்வனே பாடல் சிறந்ததென எண்ணுகிறோம்.

சேர. — இல்லையவன் இங்கே ஆம் எங்கே

(அமைச்சர் குறுக்கிட்டு)

அமைச்சர். — இசைவாணர்
உள்ளார் பலபேர்; ஒழுகிசையும் ஓர்தமிழே.
அள்ளித் தரட்டும் இசையால் அவர் கவியை.

சேர. — நல்லது அமைச்சே! அவர்கையில் என்இளங்கோ
பாட்டைக் கொடுங்கள்! பருக அமர்ந்துவிட்டோம்.
மீட்டுங்கள் யாழை! முழங்கட்டும் தண்ணுமைகள்!
பாட்டுத் தமிழைப் பருகிடுவோம் இன்னிசையில்!
காட்டுங்கள் உங்கள் கலை!

(கானல்வரியில் வரும் காவிரிப்பாட்டு இசைக்கருவிகளுடன் இசைக்கப்படுகின்றது. அவை சுவைக்கிறது.)

சேர. கேட்டீர்; சுவைத்தீர்; திறனை உரைத்திடுக

புலவர் 1 பாட்டுத் தமிழிற் பழுத்த முதியவரும்
காட்ட முடியாக் கவியின் முழுவடிவு.

புலவர் 2 கற்பனையிற் கொண்டுவந்து காவிரியைப் பாயவிட்ட
சிற்பவினை!

புலவர் 3 அந்த இயற்சிறப்பு மட்டுமல்ல.
யாழிசையும் தோற்குவகை யாற்றுவரி
யாப்பெடுத்து
ஏழிசையும் தோய இழுமென்று இசைத்ததிறம்...

புலவர் 2 கூத்துக்கும் என்ன குறைவா? நிறைபாவில்
பூத்த உணர்வில் புதுநெஞ்சக் காதலர்கள்
காவிரியின் பாங்கிருந்து கையிலே யாழெடுத்துத்
தாவும் உணர்வைத் தலைவன் தமிழ்செய்ய
ஆவி நெகிழ அவள் அதற்கு மாறுரைக்க.........
என்ற முறையில் இயல்கிறதே கூத்தினியல்!

புலவர் 3 பாவியலே சொன்னீர்! பரந்த மனப்பாங்கை
யாவருமே சொல்லவில்லை; யாரோடும் சோணாட்டில்!
மன்னவனும் சோழன்! மனவிரிவைக் காணுகிறோம்.
இன்னும் இதுபோல எவ்வளவோ சொல்லிடலாம்!

சேர. நாடி நயக்கத் தகுந்த பரிசொன்றைக்
கேட்டேன் புலவீர் கிளத்துகிறீர் வேறுபுகழ்!

புலவர் 1 மாட்டோம் அரசே! மயக்கம் மிகக் கொண்டோம்!
பாட்டே புகுந்த புலனிற் பிறஉணர்வு
காட்ட வருமோ?

புலவர் 2 கவிவேந்தன் முன்சென்று
பாவெழுதும் எம்கையாற் பத்துமுறை தொழுதல்
சாவறியாப் பாடலுக்குச் சார்ந்த சிறு பரிசு.

சேர. ஆவலிலே ஏறி அதிகம் புகழ்ந்துவிட்டீர்.
பாவலரே! உம்வாழ்த்துப் போதும் அதே நன்பரிசு!
பண்ணெழுக! பாடல் பரதம் இவையெழுக!
கண்ணுக் கினியானைக் காணட்டும் ஓலக்கம்!
ஏன்இன்னும் இங்கே இளங்கோ வரவில்லை?
எங்கே இளங்கோர்வன்?

புலவர் 1 எங்கே இளங்கோவர்?

சேர. செங்குட்டுவன்கூட இங்கிருந்தான் எங்குசென்றான்?
எங்கே முதலமைச்சர் ஏன்எழுந்து சென்றுவிட்டார்?

(ஆள்வரும் அரவம்)

அங்கே வருவது யார்?

நற். அன்பா! முதலமைச்சர்.

அமை. சீரேன்! சிறப்பேன்? இசையேன்? முழவுகள்ஏன்?
சேரா அவலம்! அந்தச் செய்தி மிகஅவலம்!

சேர. நேரம் கழிகிறது; நீட்டாது சொல்லிடுக.

அமை. பாராளும் வேந்தே பரிசுக் குரியமகன்
ஊரார் பொதுக் கோட்டம் உற்ருர்! துறவியவர்!

சேர. என்ன பிதற்றல்? இளங்கோவா ஏன்துறவு?

புலவர். மன்னர் குடிக்கு மறுவாக வா நடந்தார்?

நற். நாயகரே என்னுடைய நல்லமகன் ஏன்துறவி
தாயெனக்கும் சொல்லான் தனியாய் நடந்தானே?

சேர. நற்சோணை வீணுய் நலியாதே! ஏன் அமைச்சே
முற்றும் உணர்ந்தோ மொழிந்தீர்?

அமை. ஆம் வில்லவனே
பற்றற்ருர் உம்முடைய பாவல்ல நன்புதல்வர்!
முற்றும் துறந்தார்; முனிந்துவிட்டார் நம்முறவை.

சேர. வாய்மையா மந்திரியே? வாயிலிலே நிற்பவர் யார்?

அமை. வாய்மைதான் வில்லவனே! வாயிலிலே நிற்பவர்கள்
குன்றக் குறவர்! குணவாயிற் கோட்டத்தே
சென்று துறந்திருந்த செல்வர் நிலையறிந்து
அங்கவர்கள் கண்ட அவலமுறும் செய்தியினைச்
செங்குட் டுவனிடத்துச் சேர்ப்பிக்க வந்தவர்கள்.

(நற்சோணை கலங்கி)

நற். என்றன் புதல்வன் எனைமுனிந்தா சென்று
விட்டான்?
அந்தோ மகனே! அவலம் மிகத் தந்தாய்!

சேர. ஓலக்க மண்டபத்தில் ஓலம் இடுகிறதா?
வேலொத்த கண்ணுய் விடுதுயரம்; நாம் உடனே
செல்வனிடம் செல்வோம்; அழைப்போம்; அவன்
வருவான்.

புலவர் 1. ஒல்லுவதே மன்ன உடனே செயற்படுக.
பாட்டாளும் உன் புதல்வர் பற்றற்றுச்
செல்லுவதா

புலவர் 2. காட்டில் இருப்பவர்போற் காவலரும் ஆகுவதா?

சேர. எங்கே என் மூத்தோன்? இவனும் பிரிந்தானே?

அமை. தங்கள் துயரம் தவிர்க முடி மன்னு!
இளவல் நிலை மாற்ற ஏகிவிட்டான் 'துன்பம்
முழுதுக்கும் தானே முதல்' என்றுன் மூத்த மகன்
உள்ளம் துடித்தான்! உடனே பரியேறிப்
புள்ளைப்போ லேபறந்து போனுன்!

சேர. அமைச்சரே
செங்குட்டு வன்இளங்கோ செய்வினைக்குக்
காரணமா?

இங்கு இங்கு விளங்கவில்லை . . .

அமை. ஏன் மன்னு தங்களுக்கு
நென்னல் நிகழ்வும் நினைவில்இல்லையோ?

சேர. என்ன நிகழ்ச்சி இயம்பும் அமைச்சரே!

அமை. வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நென்னல் வந்த நிமித்திகன் இளங்கோவுக்கு
அரசுவீற் றிருக்கும் திருப்பொறி உண்டென்று
உரைசெய் பொழுது அவன் உருத்துநோக்கிக்
'கொற்றம் மூத்த வனுக்கே உரியது
முற்றும் முரண்நீ மொழிந்தது'என் றெழுந்து
துறந்தும் அண்ணன் துயர்களை வேனென
இளங்கோ மொழிந்ததை, எழுந்துடன் சென்றதை
மறந்ததும் ஏனே மன்னவா?

சேர. நென்னல் ஓர்
நொதுமல் ஆளனின் பொதுமொழி கேட்டு
மதிவல இளங்கோ மன்னவை துறப்பான்
என்பதை எவ்விதம் எண்ணுதல் கூடும்?

அமை. 'செங்குட் டுவனின் செல்லல் நீங்க
இங்கிருந் தகல்வேன்; இன்றே துறப்பேன்
என்றே அகன்ருன் இளங்கோ' என்று
செங்குட் டுவனும் சொல்லிப் புலம்பி
அங்கே போயினன்!

சேர. அமைச்சரே உடனே
நாமும் அவரைத் தொடர்தல் வேண்டும்.

நற். தாயார் எனையும் அழைத்துச் செல்லுக;
போயென் மகனின் துயரைப் போக்குவோம்.

திரை

## காட்சி மூன்று

**குதிரையின் குளம்பொலி சிறிது சிறிதாக உரத்து ஒலிப்பது குதிரையின் வரவை அறிவிக்கிறது. கோட்டத்தில் அடிகள் இருவர் உரையாடல் நிகழ்கிறது.**

அடிகள் 1. வீதியைப் பார்த்தேன் வியக்கிறீர் அடிகாள்!

அடிகள் 2, காதில் உமக்கும் உணர்விலைப்போலும்
கண்ணுற் பாரும் கதழ்பரி வருவதை!
மண்துகள் எழும்ப வருவதோர் புரவி!

அடிகள் 1. மூத்தஎன் கண்கள் முடியக் காண்கில.
சாத்தரே குதிரையில் வருவார் எவர்கொல்?

அடிகள் 2. அண்ணல் குட்டுவர்!

அடிகள் 1. ஆட்படை இன்றி
நண்ணிய தேனோ?

அடிகள் 2. நான் அறிவேனோ?

அடிகள் 1. பாட்டு விழவுப் பயன்துறந் திந்தக்
கோட்டம் நோக்கிக் குறுகிய தேனோ?

அடிகள் 2. துறந்தார்க் கேனித் துயரம்? அஃதோ
பறந்து வந்தனர்! பரிமேல் அரசர்!

அடிகள் 1. அரசே வருக!

செங்குட்டுவன். அடிகாள் வணக்கம்!

அடிகள் 1. விரைந்த செலவை வியக்கிறோம்!

செங். அடிகாள்!
உரைகள் நீளாது உணர்ச்சிகள் தடுக்கும்!
எங்கே இளங்கோ?

அடிகள் 1. என்சொனீர் மன்னவா?
தங்கள் பின்னவன் இங்கேன் வருதல்?

செங். நன்றல் லாதன நடந்தன அடிகாள்!
குன்றக் குறவர், இக் கோட்டத் தாங்கண்
இளங்கோ இருப்பதை இருகணீர் வழிய
எடுத்து மொழிந்தனர்! எங்கே அவனுழை?

அடிகள் 1, தடுத்து மொழிவதைப் பொறுத்தல் வேண்டும்.
முதிய அடிகளே கோட்டத் துள்ளார்.
அதிலே ஐயம் அடையேல் அரசே.

அடிகள் 2. புதியவர் ஒருவர் புகலிடந் தேடி
நென்னல் வந்தனர், நினைவில் இல்லையோ.

அடிகள் 1. என்ன அவரா இளங்கோ? வியப்பே!
மூத்தஎன் கண்கள் முடியக் காண்கில;
சாத்தரே ஏன்அதை உரைத்தீர் இல்லை?

அடிகள் 2. மழித்த தலையையும் மஞ்சள் உடையையும்
கழித்துப் பார்க்கக் காவலர்ப் பொலிவைக்
கண்டே மனத்தில் ஐயம் பிறந்தது.
கொண்ட நினைவை அடிகளே உம்பால்
சொல்ல அஞ்சிச் சொல்லா தொழிந்தேன்.

அடிகள் 1. மல்லல் மூதூர் வாள்வாய் வேந்தே!
செல்வோம் அவன்பால் சேர்ப்போம் உம்பால்.

செங். நில்லும் அவன்பால் நானே செல்கிறேன்

அடிகள் 1. குணக்கில் இருக்கும் கதவம் அதுதான்
(கதவு திறக்கும் ஒலி-
இளங்கோ காட்சி தருகிறார்.)

இளங்கோ. வணக்கம் மன்னவா!

செங். இளங்கோச் செல்வா!
பிணக்கம் அடைந்து பிரிந்தது பெரும்பிழை.
ஐயனே என்றாய்! அரசனே என்கிறாய்!
நைவேன் மேலும் நலிவது முறையோ
இளவலே எழுவாய்! குரவர்பால் வருவாய்!

இள. பிழையது மன்னவா! பெரும்பிழை நானோர்
துறவி! அறிக! தொலைந்தது நம்பால்
உறவு! மன்னவா மறப்பீர் உறவை!

செங். மறக்கச் சொன்னதும் மன்னவா என்றதும்
இறக்கச் சொன்னதற்கு ஈடுஎன் இளவலே!
முடியணி துறந்து தலைமயிர் மழித்து
அடிகளார் கோட்டத் தாங்கண் இருந்தால்
இருமுது குரவரும் எப்படி ஆற்றுவர்?
வருவதே தகுதி! இளங்கோ வருதி!

இள. செங்குட் டுவரே, சிறிதிதை எண்ணுக!
அன்பைத் துறவேன்! அரசையே துறந்தேன்.
என்பு தோல் யாக்கை இழிவுஎனத் துறவேன்.
என்பெரும் பணியை இயற்றுதற் காக
அன்னை, தந்தை அரசுஇவை அகன்றேன்.

செங். என்ன அப்பணி? எனக்காய்த் தானே?
'முதுவாய்ச் சோதிடன் - மூடன் மொழிந்ததை
அதுவாய் என்றே எண்ணுவான் அண்ணன்
அப்பெரும் ஐயம் அகல்வதற் காக
இப்பெரும் துறவுக் கிசைவேன் ஏற்பேன்'
என்று தானே இங்குநீ அணேந்தனே!
கொன்றதே போலும் கொடுமையை விளேத்தாய்.

இளங். ஐயனே...... இல்லே .....அரசே வருந்தேல்!
பொய்இது நீயும் புலம்பலேத் தவிர்க.
உன்னே அறிவேன் உன் உயர்குணம் அறிவேன்.
நென்னல் அந்த நிமித்திகன் உரைத்ததை
நம்புவாய் என்றே நலிவாய் என்றே
இம்மியும் கருதேன்.

செங். இளவலே மகிழ்ச்சி.
இப்படி இருக்கநீ ஏன்துற வடைந்தாய்?

இளங். அந்த நிமித்திகன்......

செங். அவன்பேச் செதற்கோ

இளங். என்றன் துறவுக் கிவனே நிமித்திகன்!

செங். மறுபடி என்றன் மனத்தைக் குழப்புவீர்!

இளங். பொறு பொறு காவலா போய்நீ வருந்தேல்.
பெரும்பணி ஒன்று தொடங்கினேன்; அதற்கு அவ்
இரும்பனே வெண்தோடு இடக்கர் ஆனது.

செங். சேரனின் மாலேயேன் சிறுமை செய்ததோ?

இளங். வீரரே தணிக. நான் விளம்புதல் கேட்க.
இளங்கோவாய் நான் இருக்கும் வரைக்கும்
உளங்கொண் டிருக்கும் உயரிய பணியை
ஆற்றல் அரிதே!

செங். அதற்கும் நிமித்திகன்
கூற்றுக் கும்என் தொடர்பு கூறுக.

இளங். கணியன் பொய்யன்; எனினும் எனக்குத்
துணிவு தந்தனன்! துணேபுரிந் தனனே!

செங். இன்புற் றவர்போல் இயம்புவீர் இந்தத்
துன்பக் கதையை! துணேபுரிந் தனனு?

இளங். ஆமாம் மன்னவா! அரசவை அகல
நான்முன் பலமுறை நாடியும் அதனுக்கு

ஏதுநிகழ்ச்சி இல்லா திருந்தேன்.
மக்கள் பொறுக்கார்; மன்னரும் ஒப்பார்.
சிக்கல் அகலச் சிறந்தவன் வந்தான்.

செங். சிறந்தவன் அவனு சிறுமையன் என்னும்

இளங். மறந்தோய் வேலோய் உணர்வுகள் தணிக
பக்குவம் குறைந்த மக்கள் என்செயல்
தக்கதென் றுரைப்பார்

செங். இளவலே! அன்னவர்
என்னை முனிவரே இதனையும் உணர்க.

இளங். முன்னவ அந்த முறையிலே இரந்தேன்.
உன்னைப் பழிக்க உனக்குறும் பழியை
என்றன் நெஞ்சகம் என்றுமேற் காதே.
ஆயினும் என்றன் ஐய! என் நெஞ்சை
ஆண்டஅப் பணியை ஆற்றுதற் காக
பூண்டேன் துறவு; பொறுத்துக் கொள்க
உனக்குறும் பழியை! உற்றதோர் அமையம்
எனக்கு வாய்த்தது! இழந்திடில் மீளுமோ?
மனக்கினி யவனே மாணடி வீழ்ந்தேன்.
(இளங்கோ செங்குட்டுவனின் காலில் வீழ்தல்)

செங். இளங்கோ எழுவாய்! என்செயல் செய்தாய்!
பிழைஇது பின்னவா! பெருமைநீ அடையப்
பழியையும் ஏற்பேன் பரிவுடன்! ஆனல்
அரசவை துறந்திங்கு அணையஏன் வேண்டும்?

இளங். முரசமும் முழுக்கும் இகலும் வென்றியும்
அரசவை அமர்வும் அருங்கலக் கொடையும்
மாதரும் காதலும் மகிழ்வுமென் றிவைகள்
மோதுவ தால்நான் முனைந்தஓர் பணிக்குத்
தீதுண் டெனவே அரசவை அகன்றேன்!

செங். என்ன அப்பணி?

இளங். செங்குட்டுவரே!
கன்னித் தமிழர்கொரு காவிய வாழ்வு
காட்டும் பெரும்பணி!

செங். கலைப்பணி தானே
பாட்டுப் பணிக்கா படர்ந்திவண் வந்தனை
நகுதக் கதுநீ நாடிய துறவு!
தகுதி அரசவை தமிழ்தர இதைவிட!
மிகுதி யாளனே மேனுள் மன்னர்
அறிவுடை நம்பி, செழியன் கிள்ளி
புறநா னூற்றுப் புலவரோ டமர்ந்து
பாடல் தந்தனர்! படித்த தில்லையோ?

இளங். பாடினர் படித்தேன் ஆயின் நான்செய
நாடிய பணியோ மாறு பட்டதாம்

செங். என்ன வகையில்?

இளங். இறைவா நானோர்
மன்னனாய் இருந்து மக்களைப் பாடுதல்
முன்னோர் முறைமைக் கிழுக்காம்! உலக
வழக்கை முழுவதாய் மாற்றுதல் தீதே.
ஒழுக்கம் என்பது பொதுமை வழக்கே!
மன்னர் ஒருவர் மக்களைப் பாடுதல்
இன்னா தென்பார் மக்களும்!

செங். இதனால்
அரசவை அகன்றுவந் தடிகளா னீரோ?
சரிசரி இளங்கோ சால்புறும் அரசரைப்
பாடிப் புதிய காவியம் புனையேன்;
வாடிய குரவரின் வருத்தம் அகற்றேன்!

இளங். முன்னவா என்ன மொழிந்தனிர்? தமிழில்
இன்னுமா மன்னரைப் பாடுதல் வேண்டும்?
மற்றோர் வழியில் தமிழ்ப்பா மலர
ஒற்றைச் சிலம்பே ஒருதலைப் பாக்கிக்
கற்பி ஒருத்தியின் கண்ணீர்க் காவியம்
பாடப் போகிறேன்! பாடல் என் மனத்தில்
ஓடிப் பெருகும்! ஒழுங்காய்த் தொகுத்தல்
செய்வதே என்பணி! சேர வேந்தரே
உய்ய விடுக நான் முயலும் பணியில்!

சேர. எண்ணம் உயர்ந்ததே! எவளோ ஒருத்தியின்
கண்ணீர்க் குருகிக் காவியம் செய்வோய்!
அண்ணல் அன்னை அரசர்என் போரைக்
கண்ணீர் வடித்துக் கலங்க விட்டனை!
உன்பணி நோக்க உயர்ந்தது சரியே!
என்நிலை நோக்க இரங்கத் தகுந்ததே!
(புதுமையான உணர்ச்சித் துடிப்புடன்)
இருமுது குரவரும் இரங்க விடுவதா?
மரபை மாற்றுவோம்! மக்களைப் பாடுவோம்!
சரிஎழு! பரிஅதோ! விரைகுவோம் எங்களை
ஓலக் கத்தில் உள்ளார் தேடுவர்!

இளங். வேலவா சிக்கல் வேறுமொன் றுளதே!

செங். சிக்கலா . . . இன்னுமா?

இளங். செங்குட் டுவரே!
மாற்று மன்னரும் மகிழ்வரோ? இதனை
வேற்றுமை மறந்து போற்றிக் கொள்வரோ?
சேரன் இவன்எனச் சிந்திப் பார்கள்!
பாரோம் நாம்எனப் புறக்கணிப் பார்கள்
முத்தமிழ்ப் பணிக்கு முட்டு நேரும்;
பத்தினி புகழ்க்குப் பழுது நிகழும்!

செங். என்னதான் சொல்கிறாய் இளங்கோ?

இளங். மன்னவா
என்னுயர் பணிக்குத் துறவே இயைந்தது!

செங். பின்னும் பின்னும் ஏன்துற வென்கிறாய்?

இளங். மன்னவா! தமிழும் மாதர் கற்பும்
முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் தானே அருளுதல் இயைபு?
மூன்று தமிழை என்தமிழ் இசைக்கும்!
மூன்று மன்னரை என்தமிழ் இணக்கும்!
பிரிவினை கடந்த ஒருபெரு நிலையில்
அருவினைக் கலையும் பண்பும் வாழ
அடிகள் ஆதலே அமைவு, எனத் துணிந்தேன்.
முடிகெழு வேந்தர் மூவரும் போற்றுவர்!
ஆகையால் . . .

செங். இளங்கோ? . .

இளங். இல்லை அடிகள் . . .

செங். போகுதல் தானே பொருத்தம் என்கிறாய்!
நெஞ்சிற் குருதி பெருக அகல்கிறேன்

இளங். வஞ்சமே இல்லா என்பணி உங்கள்
நெஞ்சப் புண்ணை ஆற்றும் அகல்க!
பிரிவால் வருந்தும் குரவரை ஆற்றுக!
ஒன்று மன்னவா உளத்திற் கொள்க.
என்றும் இதனை வெளியிடல் வேண்டாம்
ஏன்நான் துறந்தேன் எதற்காய் அகன்றேன்
என்பதை என்றும் வெளியிடல் வேண்டாம்!
என்பெரும் குறிக்கோள் இனிது பொருந்த
மன்னவா இதனை . . .

செங். மறுக்கேன்!

இளங். மகிழ்ச்சி!
மக்கள் அறிந்த காரணம் போதும்
தக்கோய் தருக உறுதி!

செங். உறுதி!

இளங். சிலம்பு பிறந்தது!

செங். என்ன சிலம்பா?

இளங். புலம்பி அழுத பூங்கொடி துயர்க்கதை
சிலம்பிற் பிறந்தது! சிலம்பில் நிகழ்ந்தது!
சிலம்பில் முடிந்தது! செங்குட்டுவரே
சென்று வருக; செந்தமிழ்க் காப்பியம்
இன்றே வரைவேன்; எனைவிட் டகல்க.

(அரசர், அமைச்சர், புலவோர் புகுதல்)

செங். அன்னையும் தந்தையும் அதுபார் வந்தனர்

இளங். என்னைவிட் டகல்க; இவன்ஒரு துறவி.

நற்சோணை. அன்னை அழைக்கிறேன் அன்புடன் இங்கே
இளங்கோ . . .

இளங். அடிகள்! என்னை அகல்க.

நற். குழந்தாய் . . !

இளங். அகல்க; கொடிதுநும் உறவு!

நற். மழித்த தலையா மகனே!

இளங். அடிகள்!
அழித்தெழுதல் சாலா முடிவுஆம், அடிகள்நான்!

நற். வட்டிலிற்பா லூற்றி வளர்த்தேனே என்மகனே!

இளங். கட்டில் துறந்தேன்! கலைக்காய் எனைக் கொடுத்தேன்!

நற். பட்டு விரித்த படுக்கை . . .

இளங். இனிக்கிடவேன்!
தொட்ட பணியைத் தொடர்வேன்! கலை
படைப்பேன்!

நற். பாண்டியரை வென்றபுகழ்ப் பார்த்திபரின்
பின்னவனே!

இளங். வேண்டேன் இதுபோல் உரைகள்; அக் கண்ணகியாள்
மூவர்க்கும் செல்வி! இல்லை. மூவர்இனி இல்லை,
புகாரிற் பிறந்தாள்! போய்மதுரை புக்காள்!
தகாரின் சினத்தால் தலைவன் உயிர் இழந்தான்!
வஞ்சிக்கு வந்தாள்பின் வானம் வழிப்போனாள்!
முன்பு கலைக்கோயில்! பின்னர்எழும் கற்கோயில்!
பாநெஞ்சிற் பாயும்; பழுதாக்க வந்தவரே!
போது கழிகிறது; போய்விடுக உங்கள்!

புலம்பல் தவிர்க உடன் போய்விடுக! ஒண்பாச்
சிலம்பு! சிலம்பு! ஆம் ஆம் செந்தமிக் கோர்
பா நூல்!

நற். புலம்பும் எமக்கோர் மொழியுரைக்காய் மைந்தா!

சேர. இளங்கோ!

இளங். அடிகள்நான்

நற். என்மகனே!

இளங். நான் துறவி!

அமை. வேந்தே!

இளங். இலநான் அடிகள் எனைவிடுக.

திரை

பாரதி விழாப்
பாவரங்கம்

## கண்கள் உறங்க ஒரு காரணம் உண்டோ

### அவைப்பா

மாண்டுவிட்ட பாரதியின் மாளாப் பெரும் நினைவை
ஆண்டுவிட்டல் லாதே அவனின் தனிநினைவை
ஆண்டாண்டு தோறும் அழகு விழவாக்கப்
பூண்டீர் சபதம்! புகழ்க்கழகத் தோழர்களே!

விண்ணிடையே ஏறி விழுந்து பழங்கவிதை
பண்ணிக் கிடந்த பழைய கவிராயர்
எண்ணத்துப் புண்ணை இசைந்து குணப்படுத்தி
உண்மைத் தமிழை உதவிய அப் பாரதியின்
வண்மையைப் போற்றும் வரைக்கும், தமிழார்வக்

கண்கள் உறங்கஒரு காரணமும் இல்லையென்ற
ஒண்மைக் கழகத்து உறுப்பினரே! உங்களுக்கெம்
நன்றித் தமிழ்கள் முதல்!

'இந்நாள் தமிழ்நாள்! இனிய விழவெடுக்கும்
அன்னார் மகிழ அணைவோம்' என இங்கே
என்னைப்போல் வந்த இளைய தமிழர்களே!

'பூப்போன்ற கைகள் புடைக்கும்! அதனோடு
காப்பும் உடையும் எனக்கவலை கொள்ளாது
தட்டுவோம்' என்று தளிர்க்கைகள் கொண்டுவந்தீர்!

யாவரையும் கும்பிட்டேன்! யாப்புத் தமிழ்ஓதப்
பாவரையர் ஈங்குவந்து பாங்காய் இருக்கையில், உம்
கண்கள் உறங்கஒரு காரணமும் உள்ளதுவோ

"பாரதி"

ஞாலத் தரங்கில் நடமாடிச் செல்வதற்காய்
காலத் தெருவில் கவிதை அணிவேண்டி
அன்னைத் தமிழாள் நடந்து வருகின்றாள்.
முன்னைத் தமிழர் முழுத்தமிழர் என்னுகிற
சங்கத் தமிழர் தலைவணக்கம் செய்கின்றார்.
தங்கத்தால் -தூய தமிழால் தமிழாட்குப்
பாவாரம் நூறு படைத்துக் கொடுக்கின்றார்.

தேவாரம் என்ற பெயரில் - அறிகின்றோம்
பல்லவரின் காலத்துப் பக்திக் கவிதைகளை.
பல்லவரின் காலத்துப் பத்தி நெறிச்சான்றோர்
மெல்லென்ற சொல்லில் மினுங்கும் அணிவகையை
நல்ல தமிழ்க்கு நயந்தளித்துப் பூசித்தார்.
போரார வாரம் இடையிடையே கேட்டாலும்
ஆர்வலரின் நெஞ்சின் அழகுக் கருத்துகளைச்
சீராய்த் தளையாய்ச் சிறப்பாகச் செய்தணிந்தார்.

நீளப் புனைந்த நெடிய அணிவகையைச்
சோழப் புலவர் சுமைசுமையாய்க் கொண்டுவந்தார்!
கங்கையிலே முன்னோன்! கடாரத்தில் பின்னவனும்
தங்கள் புலியின் தகுதிப் பெருமைகளை
வாளால் வரைந்த - ஒருநாளில் - நம்புலவர்
மாளாத காவியங்கள் செய்து மகிழ்வித்தார்.

அப்பால் எமது அரசுக்கள் போய்மழுங்க
எப்பாலும் எங்கள் தமிழாள் சிறப்பிழந்தாள்
நெய்ப்பான நெஞ்சம் வரண்டதனுல் அன்றிருந்த
பொய்ப்பா வரசர் புனைவிற் புனைவெடுத்துக்
கைப்பான திக்கிற் கவிதைத் தொழில்செய்தார்.

சொல்லின் வயதே சுவைத்துக் கலைமனதைக்
கல்லாகி விட்ட கவிஞர் ஒருசாரார்.

யாப்புக் கயிற்றில் நடத்தல், பழங்கருத்தை
மூப்புத் தமிழில் முடிதல், முடிச்சவிழ்த்தல்,
நோடாலாம், நொட்டை நொடிஎன்ற இன்னவையே
பாடலாம் என்றுதமிழ் பாடியவர் இன்னொருசார்!

ஓடியதை மீட்டும்போய் ஓடி முடித்தவர்கள்,
பாடியதை மேன்மேலும் பாரா யணஞ் செய்தோர்,
வாடல்களே இன்றும் வடிவென்று சூடியவர்
பாடல்களை இப்படியோர் பான்மையிலே போய்அமைத்தார்.

கல்லடுக்கிக் கல்லடுக்கிக் கட்டிவைத்த கோயில்கள்மேற்
சொல்லடுக்கிச் சொல்லடுக்கிச் சொக்கிக் கிடப்பதெனும்
பொல்லா வலியால் இழுப்புண்டார் ஈதொருசார்!

எல்லோரும் நோய்வாய் இனித்துக் கிடந்தார்கள்!
நல்ல தமிழாள் நகையின்றி நின்றிருந்தாள்!

கற்பனையில் நூறு கடிமணத்தைச் செய்தவர்கள்
'அற்புதமாய்'ப் பெற்ற கவிதைக் குழந்தைகளை
ஓராட்டித் தாமும் உறங்கிக் கிடக்கையிலே
நேரான கண்ணிரண்டு கொண்டிருந்த நம்கவிஞன்
பாரதிக்கு மட்டும் உறக்கம் பிடிக்கவில்லை!

எண்ணத்துக் கண்ணை இறுக்கி மறுபுலவர்
கண்ணுறங்கும் போது கவிஞன் அவன் பாரதியோ
கண்கள் உறங்கஒரு காரணத்தைக் காணவில்லை.

''மக்கள் விரும்பும் நடையில் புதுமெட்டில்
எக்கவிஞன் வந்து இங்கு இயல்பாய் எழுதுவனோ
தக்க கவிஞன் அவனே; தமிழுக்கும்
ஆக்கம் புரிந்தோன் அவன்'' - என்று ஏங்குகிறான்
பாஞ்சாலி பாட்டினது முன்னுரையில்; நம்கவிஞர்
ஊஞ்சாலில் ஆடி, உலகுக்குக் கண்மூடி,
கோவில்களே பாடி, புழுகுப் புனலாடிக்
கற்பனைமேற் கண்ணுறங்கும் காலத்தில், பாரதியோ
கற்பனைமேற் கண்ணுறங்கக் காரணத்தைக் காணவில்லை.

உண்மையின் கண்கள் உறங்க மறுத்ததினால்
கண்ணனின் பாட்டும் - ஒரு பாஞ்சாலிக் காப்பியமும்
காதற் குயிற் பாட்டும் - காலக் குரலான
மாதர் நலப் பாட்டும் மலர முடிகிறது.

தண்ணீரில் ஆடுகிற தையலர்கள் தம்பெண்மை
உண்மையினைக் காண உடைகள் எடுத்தொளித்தோன்
வெண்ணெய் திருடிப் பிடிபட்டோன் - நேமியுடைக்
கண்ண பெருமான் - என்றிருந்த மாயவனை
நண்பனாய்ச் சேவகனாய், நல்லா சிரியனுமாய்
கண்ணம்மாக் காதலியாய், காதற் குழந்தையுமாய்
எண்ணி எண்ணிக் கோத்த இருபத்து மூன்றுமுறைக்
கண்ணனின் பாட்டு, கனிந்த கவிநெஞ்ச
உண்மைக்குச் சான்றாய் மலர முடிகிறது.

நெட்டைச் சபையில் தனது துயில் இழந்த
பெட்டைப் புலம்பல் பெரிய கருவாகக்
கட்டிவிட்ட பாஞ்சாலிக் காப்பியத்தைப் போன்றவற்றால்
நட்டு வைத்தான் நம்முடைய காலத்தின் நாற்றுகளை.
தொட்டு வைத்தான் ஓர்புதிய பாஊழித் தோற்றத்தை!
பிட்டு வைத்தான் தன்சமு தாயத்தின் ஊழல்களை!
கட்டி வைத்தான் 'நாயக்கர் கால' நலிவுகளை!

பாட்டுக்கு நேர்ந்த பழுதைப்போற் பாரதியின்
நாட்டுக்கும் அன்று நலிவு;
காரத்தைக் கூட்டும் 'கறி' வகைக்கு வந்தவர்கள்
வீரத்தைக் காட்டி விளையாடி நின்றார்கள்!
வெள்ளையர்கள், இங்கு வியாபாரஞ் செய்யவந்து
கொள்ளையர்கள் ஆகிக் கொடுமைசெய்த காலமது!
கொள்ளையர்கள் ஆகிக் கொடுமைசெய்தும், பாரதத்தின்
பிள்ளைகளோ தங்கள் பிழைப்பிற் படுத்திருந்தார்.

பாட்டுக்கோர் கண்ணும் பழுதாகிப் போயிருந்த
நாட்டுக்கோர் கண்ணும் நயந்தளித்த காரணத்தால்
கண்ணுறங்கப் பாரதிக்கோர் காரணமும் கிட்டவில்லை!

வெள்ளையர்கள் வெள்ளையராய் வெள்ளையர்க்குத் தோன்றுகையில்
வெள்ளையர்கள் செய்த கறுத்தச் செயல்களினை
உள்ளபடி கண்டங் கொருவன் குரல்கொடுத்தான்!

'மாரத வீரர் மலிந்தநன் நாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்தநன் னாடு
பூரண ஞானம் பொலிந்த பொன் னாடு
புத்த பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரும் நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே'
ஆரதன் ஆளுனர் இன்றெனும் போக்கில்
பாரதி யின்குரல் பொங்கின தங்கு!

'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை' என்று சொன்ன தக்குரல்!

'இதந்தரு மனையின்நீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுத் திழிவுற்றாலும்
விதந்தரு கோடிஇன்னல் விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திர தேவிநின்னைத் தொழுதிடல் மறக்கேன்' என்றிவ்
விதந்தனில் எழுந்ததந்த வெற்றியின் புதிய கீதம்!

'சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்து
துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்'
'நாங்கள் முப்பது கோடி சனங்களும்
நாய்களோ பன்றிச் சேய்களோ'

'வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ' - அந்தப்
பாரதி யென்கிற பாரத வீரனும்
கண்படை கொள்வானோ?

பாட்டுக்கோர் கண்ணும்
பழுதாகிப் போயிருந்த
நாட்டுக்கோர் கண்ணும்
நயந்தளித்த காரணத்தால்
மற்றவரைப் போலே
மயங்கி உறங்காது
கற்றவர்க்கு மட்டுமன்றிக்
கல்லாத அல்லவர்க்கும்
ஒற்றைச்சொற் கொண்டே
உறக்கத்தைப் போக்கடித்துச்
செய்த தமிழாற்
சிறப்பித்தான் நம்தமிழை!

செய்த தமிழாற் சிறப்பித்தேன் நான்அவனை.
செய்த விழவாற் சிறப்பித்தீர் நீர்அவனை.

அவைப்பா

நல்லன வற்றை நயக்கத் தகுந்தவற்றை
ஏற்று மதிக்கும் கட்டுப்பாட் டாளர் சிலர்
கூற்றை மதித்துவந்து கும்பிட்டே என்னுடைய
எண்ணம்போற் கற்பனையை ஏற்று மதி செய்து
வண்ணக் கவியை இறக்கு மதிசெய்தேன்.
கட்டுப்பா டின்றிக் கவிசெய்யக் கேட்டவரே!
தட்டுங்கள் கையைத் தமிழை முடிக்கின்றேன்

(ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்
தமிழ்க்கழகத்தார்விழா)

## குறிப்பு

என்றன், எந்தம் என்பவற்றின் இடமாக எந்தன் என்ற சொல்லே (பா நாடகம் தவிர்ந்த பகுதியில்) ஆளப்படுகிறது.

வள்ளுவத்தில், வள்ளுவரின் தோற்றத்தைப் பற்றி வரும் வருணனை, மறைமலையடிகளார் போன்றோரின் கருத்தைப் பொருந்தியதாகும்

பிழை விழுந்துள்ள பகுதிகளைப் பின்வருமாறு திருத்திப் படிக்க வேண்டுகிறோம்.

| பக்கம் | பிழை | சரி |
|---|---|---|
| 27 | நயனம் | நயம் |
| 27 | புணையேறி | புணேயேறி |
| 27 | முன்றலில்களில் | முன்றில்களில் |
| 29 | இத்தகைய | இவ்வண் |
| 30 | தோருயர்ந்த | தோளுயர்ந்த |
| 31 | புதிதவ் | புதியதவ் |
| 31 | புதிதிங் | புதிதிவ் |
| 32 | பெங்கலில் | பொங்கலில் |
| 33 | துறையில் | துறையில் ஒரு |
| 35 | நீங்கப் | நீங்கிவிடப் |
| 36 | காதலியே | கண்ணே |
| 43 | பாராது | பாராதே |
| 46 | கொழும்பிலிருந்தும் | கொழும்பிருந்தும் |
| 47 | வாங்கு மொரு | வாங்குமோர் |
| 47 | வெற்றிமையைப் | வெற்றிலையைப் |
| 48 | இன்னுமா உன் | இன்னும் உன் |
| 50 | பொழுதவ் | பொழுதந்த |
| 52 | கொழுத்தடா | கொளுத்தடா |
| 60 | வந்தாங்கு | வந்தாங்கே |
| 60 | ஒரே பகிடியடா | ஒரே பகிடியடா |
| 62 | நல்ல மணி | நல்லமளி |
| 63 | புது வெள்ளம் | புது எண்ணம் |
| 63 | சாகுந்தன் | சாருந்தன் |
| 64 | கருத்துக்களைப் | கருத்துகளைப் |

| | | |
|---|---|---|
| 64 | பாவாவரம் | பாவாரம் |
| 66 | சிரித்துத் துள்ளுகிற | சிரித்து வெளித் தள்ளுகிற |
| 80 | அவ்வுயர்ந்த | உயர்ந்த |
| 82 | தத்தம் | மற்றுந்தன் |
| 82 | மற்றன் நோய் | ஒன்றந் நோய் |
| 82 | நாணித் நிலதைப் | நாணி நிலத்தைப் |
| 83 | படா பறை | படாஅ பறை |
| 84 | குளிர்! பனிதான் | குளிர்தான்! |
| 84 | நெஞ்சத்தாற் | நெஞ்சத்தார் |
| 85 | பேசிப் | பேசியதைப் |
| 85 | தேனுன காதல் | தேனுன காதலது |
| 85 | போன்ற மக்கள் | போலுகிற மக்கள் |
| 86 | ஆற்ருதே | ஆற்ருது |
| 86 | தழுகின்ற கண்ணீரே | தழுதகண் ணீரன்றே |
| 86 | என்றும் மக்கள் | என்றும் எம்மக்கள் |
| 86 | வாதங்கள் இந்த | வாதங்கள் நம் இந்த |
| 86 | உயிர் வாழ | உயிர் வாழ்தல் |
| 87 | இல்லா | இல்லாத |
| 89 | குழலே | சூழலே |
| 91 | முள்ளேயே | முள்ளேயே |
| 100, 102 | நன் | நற் |
| 110 | பிறந்தாள்! | பிறந்தாள்பின் |
| 111 | செந்தமிக்கோர் | செந்தமிழ்க் கோர் |
| 113 | எமது | எமதாம் |
| 113 | கல்லாகிவிட்ட | கல்லாக்கிவிட்ட |
| 114 | என்று ஏங்குகின் | என்றே ஏங்குகிருன் |
| 114 | — என்றிருந்த | — எனவிருந்த |
| 116 | மதிக்கும் | மதிக்கின்ற |

# சத்திய சீலன் பாக்கள்

சுற்றிலும் நூறு நிகழ்வன வாழ்வில்;
அவற்றினைச் சுவைத்திடும் ஒருவன்
கற்பனை கொண்டு கடையவும் பிறக்கும்
அமுதினைக் கவிதை என் றறிவோம்.
சொற்களைப் புதுக்கி, மிடுக்கொடு நடத்தித்,
துணிவொடு துணிந்தவை சாற்றி,
அற்புதமாக அது சில ஆக்கும்
ஆற்றலன் சத்திய சீலன்.

கைத்திறன் கொண்டு கருத்துடன் புனைந்தும்,
கவிதைகள் உதிப்பது கடினம்;
செத்தவை போன்ற பலபல சமையும்
செய்தியே மிகுவன! உயிரின்
முத்திரை யான மூச்சுடை யனவாய்
உணர்வின் மென் மொழியிலே பேசும்
தத்துவமாக அமைவன சில நம்
சத்திய சீலனின் தமிழாம்.

— மஹாகவி

நீழல்,
அழவெட்டி,
இலங்கை,
20-11-1968


Pa[illegible] by: **P. Sathiaseelan**

[illegible]blished by:

Thapal Book Service,
9/2 Eachamoddai,
Jaffna Ceylon.

**15-12-68**

Price விலை **3/=**